# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 314 புரட்டாதி 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


புதிய அரசமைப்புக் குறித்த இடைக்கால அறிக்கை மீதான

# பௌத்த பீடங்களின் அறிக்கை விரைவில்

## பௌத்தம், ஒற்றையாட்சியில் இணக்கத்துக்கு இடமிருக்காது என எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 6

புதிய அரசமைப்புத் தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்த தமது அவதானிப்புகள், நிலைப்பாடுகளை அரசிடம் அறிக்கையாக முன்வைப்பதற்கு பௌத்த பீடங்கள் தீர்மானித்துள்ளன. எதிர்வரும் 12ஆம் திகதி இந்த அறிக்கை அரசிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசமைப்பு ஒன்று நாட்டுக்குத் தேவையில்லை என்று நாட்டின் முக்கிய பௌத்த பீடங்கள் நிராகரித்திருந்த நிலையில், இடைக்கால அறிக்கை தொடர்பான அவற்றின் அறிக்கை அனைவரதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இதற்கிடையில், "பௌத்த மதத்துக்கான முக்கியத்துவம் மற்றும் ஒற்றையாட்சி முறைமை உள்ளிட்ட பல முக்கிய விடயங்களுக்குச் சவால் விடுக்கும் வகையில், பல்வேறு அர்த்தங்களை வெளிப்படுத்தக்கூடிய சொற்கள் இடைக்கால அறிக்கையில் புகுத்தப்பட்டுள்ளன" என்று அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த அநுநாயக மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார். புதிய அரசமைப்பின் முன்னெடுப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்கள் வெளிப்படையானதாக அமையவேண்டும் என்

>> 25

## முதல் 10 இடங்களுக்குள் தமிழ் மாணவர் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 6

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியில் முதல் 10 இடங்களுக்குள் எந்தவொரு தமிழ் மொழிமூலமான மாணவரும் இடம்பெறவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்

>> 04

## தமிழ்மொழிமூலமான பெறுபேறுகளில் யாழ், கொழும்பு மாணவிகள் முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக். 6

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ்மொழிமூலமான மாணவர்களில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் பொஸ்கோ மாணவி அனந்திகா உதயகுமாரும், கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி நிரூஜா ரவீந்திரராஜாவும் 194 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். வடக்கு மாகாணத்

>> 25

## புதிய அரசமைப்பு வராவிட்டால் அது வன்முறைக்கு வழிவகுக்கும்

### பிரி. அமைச்சரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

"தேசியபிரச்சினைக்குத்தீர்வுகாணும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது அவசியம். இந்தக் கருமத்தில் நாம் தவறிழைக்க முடியாது. அவ்வாறு நாம் தவறிழைக்கின்றபட்சத்தில் அது வன்முறையின் மீள் உருவாக்கத்துக்கு வழிவகுக்கும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம

>> 04

## தீர்வுக்கான சந்தர்ப்பத்தை கைநழுவவிடமாட்டோம்

### மாவை எம்.பி. வட்டுக்கோட்டையில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 6

"நாம் கொள்கையிலிருந்து விலகவும்மாட்டோம். அதே நேரம் அரசியல் தீர்வுக்காக கிடைத்துள்ள சந்தர்ப்பத்தையும் நழுவ விடவும் மாட்டோம்" என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

>> 25

புதிய அரசமைப்பில்

## வடக்கு - கிழக்கு இணைப்பு கூட்டமைப்பின் நிலைப்பாடே தவிர நிபந்தனை கிடையாது

### ஜயம்பதி எம்.பி. முஸ்லிம்கள் மத்தியில் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 6

"வடக்கு கிழக்கு இணைப்பு நடைபெறாவிட்டால் புதிய அரசமைப்பை ஏற்கமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கும் கூறவில்லை. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு, அது அரசமைப்பில் உள்வாங்கப்படவேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு"

இவ்வாறு வழிநடத்தல் குழுவின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ண தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்விலேயே

>> 25

## தமிழரின் வேணவாக்களுக்கு தடையாக மு.க. செயற்படாது

### அதன் தலைவர் ஹக்கீம் உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 6

"தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களுக்குக் குறுக்கே நிற்கும் கட்சியாக இருக்கக்கூடாது என்பதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாக இருக்கின்றது. வடக்கு கிழக்கு இணைப்பை வைத்து அரசியல் நடத்துவதானது வங்குரோத்து அரசியலின் உச்சக்கட்டமாகும்"

>> 25

see more news in newuthayan.com

# 11ஆவது நாள்

## அரசியல் கைதிகளின் உணவு ஒறுப்பு நீடிப்பு

### மைத்திரியை தலையிடக் கோரி வடமாகாண சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், ஒக். 6

அநுராதபுரம்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் கடந்த 11 நாள்களாகத் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையை அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் உடனடித் தீர்வைக் காணவேண்டும்.

>> 25

# தடுப்பிலுள்ளோரை விடுவிக்கக் கோரி ஒக்.9 கவனவீர்ப்பு

>> 25

## வடக்குப் பொருளாதாரம் பற்றி ஆராய மத்திய வங்கி ஆளுநர் நேரில் வருகை

### யாழ்ப்பாணத்தில் இன்றும் கிளிநொச்சியில் நாளையும் முக்கிய சந்திப்புக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 6



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார். பல தரப்புக்களையும் சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

திருநெல்வேலி திண்ணை ஹோட்டலில் இன்று காலை 10 மணிக்கு, மாவட்டச் செயலர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்க

>> 04

## தேசியமட்ட கபடித் தொடரில் வடக்கு மாணவிகள் சாதனை

### தங்கம், வெள்ளி, வெண்கலம் மூன்றையும் அள்ளினர்

யாழ்ப்பாணம், ஒக். 6



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான கபடித் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வடக்கு மாகாணப் பாடசாலைகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று அத்

>> 25




சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
www.dfcc.lk

DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு

# சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பில் கணக்கெடுப்பு

கொழும்பு, ஒக்.6
தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவந்த கணக்கெடுப்பை முழுமையாக மேற்கொண்டு நிறைவுசெய்வது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது.

இந்த கணக்கெடுப்புப் பணிகளை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எந்தவொரு பயனாளிக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் பணிப்பாளர் பிரதீப் யசரத்ன ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்பில் காணப்படும் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய பயனாளிகளை இணைத்துக்கொள்ளும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், பயனாளியொருவர் உயிரிழக்கும் சந்தர்ப்பத்தில் பொருத்தமான நபருக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்திக் கொடுப்பனவுகளுக்கு தற்போது 14 இலட்சம் பேர் தகுதியுடையவர்களாக உள்ளனர். 8 இலட்சத்து 42ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

ஆகக்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பொருள்கள் சிலவற்றின் கீழ் 420 ரூபா முதல் 3 ஆயிரத்து 500 ரூபா வரை சமுர்த்தி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. (ற)

# வடக்கு இப்போதும் இராணுவமயமே

## அடையாளம் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.6
வடக்கு மாகாணம் இராணுவமயப்படுத்தப்பட்ட பூமியாகவே காணப்படுகின்றது. முல்லைத்தீவில் 2 பொதுமக்களுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் என்ற வீதத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளது கொள்கை ஆய்வுக்கான நிலையமான "அடையாளம்" எனும் அமைப்பு.

அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது:
இலங்கையின் சனத்தொகையில் 0.6 வீதமான மக்களே முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்றனர் (130,322). இலங்கை இராணுவத்தில் 25 சதவீதமான ஆளணிப் பலம் அந்த மாவட்டத்திலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை ஏதேனும் ஒரு வகையில் பாதிக்கப்படுகின்றது.

குடிமக்களின் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் இராணுவம் ஊடுருவியுள்ளது. முன்பள்ளிகள் மற்றும் பண்ணைகளை இயங்குவதோடு, பரப்பளவில் மிகப்பெரிய முதலாளிகளுள் ஒன்றாக இராணுவம் காணப்படுகிறது. பயம், துன்புறுத்தல் மற்றும் குடிமைச் செயற்பாட்டின் அடக்குமுறை தொடர்கதையாகவுள்ளது.

பாதுகாப்புத்துறை, சீர்திருத்தத்திலும், இராணுவமயமாக்கத்திலுமிருந்து விடுபட்டு உண்மையான நல்லிணக்க முயற்சிகள் மட்டுமே நிலையான சமாதானத்துக்கும் உறுதிப்பாட்டுக்கும் வழிவகுக்கும்.

அரசு தனியாரிடமிருந்து கைப்பற்றிய காணிகளில் ஆயிரத்து 796 ஏக்கர் காணி இன்னமும் முல்லைத்தீவில் விடுவிக்கப்படவில்லை. என்று தெரிவித்துள்ளது. (ற)

# நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு,ஒக்.6
மட்டக்களப்பு, பேத்தாழை பொது நூலகத்துக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் நேற்று வழங்கப்பட்டன.

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன் நூல்களைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நூலக உத்தியோகத்தர்கள், கோறளைப்பற்று பிரதேச சபை நிதி உதவியாளர் எம். கந்தசாமி, அபிவிருத்தி உத்தியோகத்தர் நிறோசிதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (றரி4)



# முழுநிலா நாள் நிகழ்வுகள் தென்மராட்சியில் நேற்று

தென்மராட்சி, ஒக்.6
தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நிகழ்வுகளுடன் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வலயத்தின் அறிஞர் மதிப்பளிப்பு நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தரும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவருமான பேராசிரியை செல்வி வசந்தி அரசரட்ணம் மதிப்பளிக்கப்பட்டார்.

நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஏனைய வலயங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-9.ரி4)

# தமிழரை மாவட்டச் செயலராக நியமிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஒக்.6
மட்டக்களப்பு மாவட்டத்துக்கு தமிழர் ஒருவரை மாவட்டச் செயலராக நியமிக்க வேண்டும் எனக் கோரி நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. காந்தி பூங்காவுக்கு அண்மையில் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட போரால் அபிவிருத்திகள் பின்னடைந்து காணப்படுகின்றன. நல்லாட்சியில் பொது மக்களுக்கு ஒரு நம்பிக்கை வரவேண்டுமானால் தமிழ் பிரதிநிதி ஒருவரையே மாவட்டச் செயலராக நியமிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

தமிழ் மாவட்டச் செயலரை உடனடியாக நியமனம் செய், மக்கள் ஆணையில் வந்த அரசே!, மக்களின் சொல்லுக்கு செவி சாய், மட்டக்களப்பு மக்களை ஏமாற்றாதே, அரசே நியமனம் செய் தமிழ் மாவட்டச் செயலரை போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு 100க்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதேவேளை புதிய மாவட்டச் செயலர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நில் அல்விஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்டச் செயலரை நியமிக்கும் விடயத்தில் இரா. சம்பந்தனின் சொல்லைக் கேட்க முடியாது என உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் நில் அல்விஸ் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது. (ற)



# இறைச்சிக் கேள்வியை நிரப்ப வெளிநாட்டிலிருந்து ஆடுகள்

கொழும்பு, ஒக்.6
இலங்கையின் ஆட்டிறைச்சி உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து ஆடுகளை இறக்குமதிசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசு நேற்று தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், மாட்டிறைச்சிப் பாவனைக்கு சமூகத்தில் காணப்படும் எதிர்ப்புகளையடுத்து ஆட்டிறைச்சி உற்பத்திகளுக்காக கேள்வி அதிகரித்துள்ளது.

உள்ளூர் வணிகப் பண்ணைகளால் ஆட்டிறைச்சி கேள்விக்கான நிரம்பலை வழங்கமுடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் போயர் இன ஆடுகளை இறக்குமதி செய்ய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆடுகளை இறக்குமதி செய்து, உள்ளூர் வணிகப் பண்ணைகளுக்குக் கையளிப்பது என்று கிராமப்புற பொருளாதா விவகார அமைச்சர் பி.ஹரீன் முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவையும் அனுமதி அளித்துள்ளது. (ற)



# சீரமைப்பு பணியை நேரில் சென்று பார்த்தார் ஆளுநர்

தென்மராட்சி,ஒக்.6
தென்மராட்சி தெற்குக் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மறவன்புலோ, கைதடி நாவற்குழி ஆகிய பகுதிகளில் காணப்படும் விவசாய குளங்கள் மற்றும் வாய்க்கால்கள், மற்றும் கிணறுகள் என்பன சீரமைக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பிரதேச கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கடந்த வாரம் ஆளுநர் சந்தித்திருந்தார். அதன்போது மழை காலம் நெருங்குவதால் குளங்கள் மற்றும் வாய்க்கால்களைச் சீரமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். அதன் தொடர்ச்சியாக நேற்று வேலைத்திட்டங்கள் நடைபெறுவதை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

கைதடி நாவற்குழி தெற்கு கோவிலாக்கண்டி குளம், கைதடி நாவற்குழி கிராய்குளம், மறவன்புலோ கிழக்கு சவரியன் குண்டு குளம் அதனோடு இணைந்த வாய்க்கால்கள், செம்மன்குண்டு குளம், மறவன்புலோ வடக்கு திரிவிராய்குளம், சின்னத்தூவில் குளம் சட்டநாதர் ஐயா கிணறு என்பவற்றின் சீரமைப்புக்காகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ற-ரி4)

# வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றம் பழிவாங்கலே

## கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவிப்பு

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றம் அரசியல் பழிவாங்கலாகும். கிழக்கு மாகாண ஆளுநர் மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து இடமாற்றத்தை நிறுத்தவேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றமானது அரசியல் பழிவாங்கல் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வருட இறுதியில்தான் நடைபெறவேண்டும் என ஆளுநர் அறிவித்துள்ளார் என்று நான் அறிகின்றேன். அதற்கிடையில் ஏன் இந்த இடமாற்றம் நடைபெற்றது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. அந்த இடமாற்றத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக நான் அறிகின்றேன். இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்காத அதிகாரிகளும் உள் வாங்கப்பட்டுள்ளனர். சில வலயங்களில் ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றியவர்களும் இருக்கின்றனர். ஆனால் 56, 59 வயதுகளைக் கொண்ட அதிகாரிகள் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றப்பட்டுள்ளனர்.

இது முற்றிலும் சட்டத்துக்கு முரணான இடமாற்றம் என்பதுடன் அதிகாரிகளின் உரிமையை மீறும் செயலாகவே நான் கருதுகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

### குழுக்களிடையே மோதல்

# தற்காலிகமாக மூடப்பட்டது களனிப் பல்கலைக் கழகம்

கொழும்பு, ஒக்.6

இரு குழுக்களிடையே நடந்த மோதல் காரணமாக களனிப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடம் தவி ர்ந்த ஏனைய பீடங்கள் தற்காலிகமாக மூடப்படுகின்றன என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவித்தார்.

விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் அனைவரும் நேற்று மதியத்துக்குள் விடுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகத்தின் மாணவர் சங்கத்துக்கும், விஞ்ஞானபீட மாணவர் சங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கே மோதலுக்குக் காரணம் என்ற கூறப்படுகின்றது.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-33)




# தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவுபவர் சரவணபவன்

### இப்படி யாழ். பல்கலை. துணைவேந்தர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக்.6

"தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் எமது தமிழ் தலைவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்கு பல வகையிலும் உதவிகளைச் செய்து வருபவர் தமிழ் அரசுக் கட்சி நாடளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மட்டுமே. இது பாராட்டத்தக்க விடயமாகும்"

இவ்வாறு யாழ்ப்பான பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உதயவாழ்வு மற்றும் சரவணபவன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பயிலுநர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் வட்டுக்கோட்டையில் உள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று யசோதை சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களின் கல்வியை முன்னேற்ற மக்கள் பிரதிநிதிகளும் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்குப் பல வகையிலும் உதவிகளை செய்து வருபவர் சரவணபவன் மட்டுமே. அவரின் இந்த அளப்பரிய சேவைகள் தொடர வேண்டும். மேலும் எமது ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்காளால் இயலுமான கல்வி சார்ந்த வேலைத்திட்டங்களைச் செய்யவேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்ல வேண்டும். தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற நீண்டகாலமாக போராடி வருகின்றது. தற்போதும் நாடாளுமன்றில் தமிழரின் உரிமைக்காக போராடி வருகின்றது. அதுமட்டுமன்றி எமது பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளையும் செய்து வருகின்றது. தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கான சேவைகளை பல வகையிலும் ஆற்றி வருகின்றனர்.

இந்த நிகழ்வில் கடந்த ஆண்டு நடந்த ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான வட்டுக்கோட்டை மற்றும் காரைநகரைச் சேர்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் உதயவாழ்வில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் நோபேட் உதயகுமார் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(வ-8)

# முழுமதிக் கலையரங்கு




கிளிநொச்சி, ஒக்.6

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் இந்த ஆண்டுக்கான முழுமதிக் கலையரங்கு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களத்தினர், கோட்டக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

### ரோஹிங்யருக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

# மேலும் இருவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக்.6

கொழும்பு, கல்கிசையில் மியன்மார் ஏதிலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக மேலும் இருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர நேற்று இதனைத் தெரிவித்தார்.

அரபேபொல ரத்னசார தேரர் மற்றும் ப்ரகீத் சானக எனும் வாத்துவை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரையுமே கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்னதேரர் உட்பட 5பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-33)

# ஜேர்மன் சென்றார் ரணில்

கொழும்பு, ஒக்.6

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட பயணமாக நேற்று அதிகாலை ஜேர்மனி பயணமானார்.

இந்தப் பயணத்தைத் தொடர்ந்து அவர் எதிர்வரும் 9ஆம் திகதி பின்லாந்துக்கான உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பின்லாந்தின் பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார மற்றும் தொழில் துறையில் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான பேச்சுமேற்கொள்ளவுள்ளார் என தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற-ரி4)

# கிழக்கு மாகாண மீலாத் போட்டிகள்



மூதூர், ஒக்.6

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மீலாத் போட்டி நேற்றுக் கிண்ணியா அல் அக்ஸா பாடசாலையில் ஆரம்பமானது.

கிழக்கு மாகாணத்தின் 9 கல்வி வலயங்களில் இருந்து 525 போட்டியாளர்கள் 47 போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

நேற்றுப் பல போட்டிகள் நடைபெற்றதுடன், இன்றும் போட்டிகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.நிஸாம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ற-ரி4,46)

### சைட்டம் விவகாரத்துக்குத் தீர்வு கோரி

# ராமன்ய பீட மகாநாயக்கரிடம் சரண் புகுந்தனர் பெற்றோர்

கொழும்பு, ஒக்.6

சைட்டம் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று தெரிவித்து பௌத்த மக்களின் பெரும் தலைமைத்துவங்களின் ஒன்றான ராமன்ய பீடத்தின் மகாநாயக்கர் கெப்பட்டியாகொட சிரிவிமல தேரரிடம் நேற்று மனுக் கையளித்தனர் சைட்டம் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்.



இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கா விட்டால் உணவு தவிர்ப்புப் போராட்டம்நடத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் மாணவர்களின் பெற்றோர் அறிவித்தனர்.

அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரிடம் இந்த மனு அண்மையில் கையளிக்கப்பட்டது. ராமன்ய பீடத்தின் மகாநாயக்கர் கெப்பட்டியாகொட சிரிவிமல தேரரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

சைட்டம் விவகாரத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து மகாநாயக்கரிடம் பெற்றோர் விளக்கமளித்தனர்.

8 ஆயிரம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வெறுமனே உள்ளனர். மருத்துவப் பட்டத்தைப் பெறவும் அவர்களுக்கு வழியில்லை. இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்கும்படி உணவுதவிர்ப்புப்போராட்டமொன்றையும் ஆரம்பிக்கவுள்ளோம். அரசுக்கு உரிய வகையில் அழுத்தம் கொடுக்கும்படி கோரிக்கை விடுக்கின்றோம் என்று மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.

பெற்றோரது முறைப்பாடுகளை செவிமடுத்த மகாநாயக்க தேரர், இந்த விடயத்தில் அமைச்சர் கிரியெல்லவோ அல்லது வேறு தரப்பினரோ தீர்மானம் எடுக்காமல் அரச தலைவர் நேரடியாகத் தலையீடு செய்து தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். மிகவிரைவில் மூன்றுமகாபீடங்களும்இணைந்து ஒன்றிணைந்த அறிக்கையொன்றும் வெளியிடப்படும் என்று மகாநாயக்க தேரர் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# நாமலின் ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்று இடைக்காலத் தடை

கொழும்பு, ஒக்.6

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச மற்றும் டி.வி. ஷானக ஆகியோரின் ஏற்பாட்டில் அம்பாந்தோட்டை நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்படவிருந்த போராட்டத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கியமை மற்றும் மத்தள வானூர்த்தித் தளத்தை இந்தியாவுக்கு வழங்கியமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்று ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நேற்று அம்பாந்தோட்டை நீதிவான் மன்று இடைக்காலத் தடை விதித்தது. (ற-33)

# கட்டுக்காவலில் இருந்த சந்தேகநபர் திடீர்ச் சாவு

## பொலிஸார் மூவருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக். 6

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். அவரது உடலில் ஏற்பட்ட கடும் காயங்களே உயிரிழப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது. இதனையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர், கொன்ஸ்டபிள் உள்ளிட்டோர் உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு மினுவாங்கொடை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 10ஆம் திகதி வரை கட்டுக்காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது திடீரென சுகவீனம் ஏற்பட்டு நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சந்தேகநபர் அங்கு உயிரிழந்துள்ளார்.

உடலின் உட்பகுதியில் ஏற்பட்ட கடும் காயம் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபரைக் கைது செய்தவர்கள் விசாரணைக்காக இடமாற்றப்பட்டுள்ளனர். (5,31)



# காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருடன் கொழும்பில் பிரிட்டன் அமைச்சர் நேற்றுப் பேச்சு

## இன்று வடக்குக்கு வருகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 6

இலங்கை வந்துள்ள ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருடன் கொழும்பில் நேற்று முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.

அமைச்சர் மார்க் பீல்ட், இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் அவர்களது உறவினர்களுடனும் தனியான சந்திப்பை அவர் நடத்தினார்.

தமிழ், சிங்களக் குடும்பங்கள் இதில் பங்கேற்றிருந்தன. காணாமற் போனோர் அலுவலகம் தொடர்பில் அவர்களது நிலைப்பாடுகளை மார்க் கேட்டறிந்து கொண்டதாக இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் தனது கீச்சகத்தில் பதிவிட்டிருந்தது.

கொழும்புப் பயணத்தை முடித்துக் கொண்டு, மார்க் பீல்ட் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தருகிறார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளார். முகமாலையில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றலையும் அவர் பார்வையிடவுள்ளார். (5)

# நீதிமன்ற முற்றத்தில் மரங்கள் நடுகை

யாழ்ப்பாணம், ஒக். 6

வவுனியாவில் சில வாரங்களுக்கு முன் காற்றுடன் பலத்த மழை பெய்த போது நீதிமன்ற வளாகத்தினுள் நின்ற மிகப் பெரிய மரமொன்று வேருடன் பாறிச் சரிந்தது. இந்த நிலையில் ஆறு மரங்கள் நீதிமன்றவளாகத்தினுள் நேற்றுமுன்தினம் புதிதாக நடப்பட்டன.

மர நடுகை நிகழ்வில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், வவுனியா மாவட்ட நீதிபதி லெனின்குமார், வவுனியா மேலதிக மாவட்ட நீதிபதி தஸ்னீம் பௌஷான், அரச தலைவர் சட்டத்தரணி மு.சிற்றம்பலம், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-5)



# அரசமைப்புக்கு எதிரான போராட்டத்தை உலக மயமாக்குகின்றது மகிந்த அணி

## தூதரகங்களுக்கு முன்திரண்டு போராடுமாறு அறைகூவல்

கொழும்பு, ஒக். 6

புதிய அரசமைப்புக்கு எதிராக வெளிநாடுகளிலும் போராட்டங்களை நடத்துமாறு புலம்பெயர் சிங்கள மக்களுக்கு 'உலக இலங்கையர் பேரவை' என்ற கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு முன்பாக அணிதிரண்டு, 'கூட்டாட்சி அரசமைப்பை தோற்கடிப்போம். உயிரைப் பணயம் வைத்தேனும் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம்' என்று முழக்கமிட்டு ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பிரிட்டனிலுள்ள சிங்கள சமூகம் மும்முரமாக முன்னெடுத்து வருகின்றது.

எதிர்ப்பு நடவடிக்கைக்கு இலங்கையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணி, இராணுவத்தினரைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

'உலக இலங்கையர் பேரவை' அமைப்பானது மகிந்த அணியின் பின்புலத்துடன் இயங்கி வருவதுடன், முன்னாள் கடற்படை அதிகாரியான சரத் வீரசேகரவும் அந்த அமைப்பில் முக்கிய பாகத்தை வகிக்கின்றார்.

புதிய அரசமைப்புக்கு எதிராக உள்நாட்டில் எதிர்ப்புகள் வலுத்துவரும் நிலையிலேயே வெளிநாடுகளிலும் போராட்டங்களை நடத்தி அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் இந்த வியூகம் பொது எதிரணியால் வகுக்கப்பட்டுள்ளது. (5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### புதிய....

பந்தன், பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்டிடம் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட், இரா.சம்பந்தனை கொழும்பில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கல் நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இதயசுத்தியுடன் பங்குபற்றியுள்ளது. நாட்டின் பல்வகைத் தன்மையை அங்கீகரிக்கும் முகமாக 1957ஆம் ஆண்டிலிருந்தே பல்வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக எந்தவொரு முயற்சியும் யதார்த்த நிலையை அடையவில்லை.

அதிகாரப் பகிர்வு தொடர்பான கலந்துரையாடல்கள் 1957ஆம் ஆண்டிலிருந்தே கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வந்துள்ளன. இந்திய அரசின் பங்குபற்றுதலுடன் 1987ஆம் ஆண்டு முதன் முறையாக அதிகாரப் பகிர்வானது அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் தேசியப் பிரச்சினை தொடர்பில் தீர்வை எட்டும் முகமாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ் மக்கள், இந்த நாட்டின் குடிமக்கள் என்ற தங்களது இறையாண்மையின் அடிப்படையில் அவர்களது சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடியவாறான ஓர் அதிகாரப் பகிர்வு ஒழுங்கையே நாம் வலியுறுத்துகிறோம். இத்தகைய அதிகாரங்கள் எந்தவகையிலும் மீளப் பெறப்படலாகாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இந்த மாகாணங்கள் இணைந்த ஒரு மாகாணமாக இருக்கவேண்டும். புதிய அரசமைப்பில் பிரிவினையைத் தடுக்கும் உறுதிப்பாடு கொடுக்கபட்டுள்ளமையால் இவ்விரு மாகாணங்களும் இணைவதனை நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்கள் அச்சத்துடன் நோக்க வேண்டிய அவசியமில்லை.

அதிகாரப் பகிர்வானது ஒன்றுபட்ட, பிளவுபடாத, பிரிக்கமுடியாத இலங்கைக்குள் எட்டப்படும். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது அவசியம். இந்தக் கருமத்தில் நாம் தவறிழைக்க முடியாது. அவ்வாறு நாம் தவறிழைக்கின்ற பட்சத்தில் அது வன்முறையின் மீள் உருவாக்கத்துக்கு வழிவகுக்கும்.

கடந்தகால வன்முறைகளின் விளைவாக 50 வீதத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். தேசியப் பிரச்சினைக்கு சரியான தீர்வைக் காணத் தவறும் பட்சத்தில் மேலும் தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை தோன்றும். புலம்பெயர் மக்கள் நடைமுறைக்கேற்ற சிந்தனையைக் கொண்டுள்ள அதேவேளை தேசியப் பிரச்சினை தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை அவர்களும் எதிர்பார்க்கின்றனர்.

தற்போதைய கருமங்கள் சாதகமான முடிவொன்றை அடைவதற்கு பிரிட்டன் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அவசரமான விடயங்களான காணி விடுவிப்பு, காணாமற்போனோர் விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றன தொடர்பில் இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதையும் பிரிட்டன் உறுதிசெய்ய வேண்டும், என்று இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

பிரிட்டனானது இலங்கை தொடர்பில் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் என்று உறுதியளித்த பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட், புதிய அரசமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார் என்றுள்ளது. (வ-5)

### வடக்குப்...

ளுடன் சந்திப்பு இடம்பெறும். மதியம் 1.30 மணிக்கு, வடக்கின் 5 மாவட்டச் செயலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள், வணிகர் சங்கம், மீன்பிடி அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்புக்களுடன் சந்திப்பு நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நாளை சனிக்கிழமை பயணம் மேற்கொள்ளும் ஆளுநர், இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி அலுவலகத்தில் சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளார். காலை 9 மணியிலிருந்து 10.30 மணி வரை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட சிவில் அமைப்புக்களுடன் சந்திப்பு இடம்பெறும்.

காலை 10.45 மணியிலிருந்து 1.15 மணி வரை, வடக்கிலுள்ள நிதி நிறுவனங்களின் முகாமையாளர்களுடன் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (வ-5)

### முதல்...

ளது. நீர்கொழும்பு ஹரிஸ்சந்திர மகா வித்தியாலய மாணவன் தினுக கிரிசான் குமார் 198 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். கம்பகா கனேமுல்ல வெளிபில்லேவ வித்தியாலயத்தைச் சேர்ந்த இந்துமினி ஜயரத்ன 197 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கடவத்தை கிரிலவெல ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த தருல் சகஸ் தர்மரத்ன 196 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 195 புள்ளிகளுடன் நான்காம் இடத்தை 12 மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, வெளியாகியுள்ள புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக மீள் மதிப்பீடு செய்யவிரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

வெளியாகியுள்ள புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பான வேறு விடயங்களை பரீட்சைத் திணைக்களத்தின் 1911 என்ற துரித இலக்கத்துடன் அல்லது 0112784208, 0112784537, 0113188350, 0113140314 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்" என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-5,31)

# கரவெட்டி விக்னேஸ்வரா நூற்றாண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.6
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா இன்றும் நாளையும் இருதினங்கள் நடைபெறவுள்ளன.
முதல்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் க. தர்மலிங்கம், ச.சுகிர்தன், சி.அகிலதாஸ் ஆகியோரும், கரவெட்டி பிரதேச செயலர் க.ஸ்ரீ மோகனன், வடமராட்சி வலய பிரதிகல்விப் பணிப் பாளர் திருமதி அ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.
ஸ்தாபகர் நினைவுப்பேருரையை கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி நிகழ்த்துவார்.
நாளை 2ஆம்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடக்குமாகாண கல்வி அமைச்சர் ச. சர்வேஸ்வரனும் கலந்து கொள்வார்கள். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே சிவாஜிலிங்கம், க.சிவயோகன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார், பழைய மாணவர் சங்க லண்டன் கிளைத் தலைவர் இ. ரூடவ்ஸ்வரஞானம்ஆகியோர் கலந்து கொள்வார்கள்.
(ய-173)

# கொக்குவில் வாள்வெட்டுச் சம்பவம்:
# சந்தேகநபர்கள் 17பேரும் தொடர்ந்து கட்டுக்காவலில்

யாழ்ப்பாணம், ஒக்.6
கொக்குவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்தப்பட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கு 17 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.
கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கடந்த ஆவணிமாதம் கொக்குவில் பகுதிக்கு கடமையின் நிமித்தம் உந்துருளியில் சென்றனர்.
சீருடையில் சென்ற இவர்களை, முகத்தை மூடி தலைக்கவசங்களை அணிந்து உந்துருளியில் வந்த இளைஞர் குழுவொன்று வழி மறித்தது. அந்தக் குழு இவர்களைத் துரத்தித் துரத்தி வாள்களால் வெட்டிக் காயப்படுத்தியிருந்தது.
காயமடைந்தவர்களில் ஒருவரான தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பெற்று கடமைக்குத் திரும்பியுள்ளார். மற்றையவரான சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் கடும் காயங்களுக்குட்பட்ட நிலையில் தற்போதும் கொழும்பு பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருடைய கால் எலும்புகள் சிதைவடைந்துள்ளன என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
இம்மாதம் இந்த வழக்கில் அடையாள அணிவகுப்புக்கு நடத்தப்பட்டது. அவ்வேளை அவர் நோயாளர் காவுவண்டியின் மூலம் கொண்டு வரப்பட்டு சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு சந்தேகநபர்களை அடையாளம் காட்டியிருந்தார். இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட 14 பேரில் மூவர் தவிர ஏனையோர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.
நேற்று இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவானின் சமாதான அறையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அவர்களை பிணையில் விடுமாறு கோரினர்.
எனினும், இச்சம்பவம் தொடர்பாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் உட்பட பல பொலிஸ் குழுக்கள் விசாரணையில் ஈடுபட்டுள்ளன. அவர்களைப் பிணையில் விடுவித்தால் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படும் என கோப்பாய் பொலிஸார் சுட்டிக் காட்டினர். அத்துடன் இவ்வழக்கில் ஆறாவது சந்தேகநபராக உள்ளவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு உள்ளதை சுட்டிக்காட்டியும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனையடுத்து 14 பேரையும் எதிர்வரும் 17ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ய-103)

# மது ஒழிப்பு தினத்தில் மதுவிற்றவருக்குப்பிணை

யாழ்ப்பாணம், ஒக்.6
சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்ற குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட நபர் சொற்ப நேரத்தில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட சம்பவம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.
இதுதொடர்பாக தெரிய வருவதாவது:
மது ஒழிப்பு தினமான கடந்த செவ்வாய்க்கிழமை, சாவகச்சேரிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப் படுவதாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.
யாழ்ப்பாண பொலிஸ் பிரிவினர் அந்தப் பகுதிக்கு உடனடியாகச் சென்றுள்ளனர். பொலிஸாரில் ஒருவர் சிவில் உடையில் சென்று மதுபானம் வாங்கினார். சந்தேகநபர் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார்.
இவரிடமிருந்து 87 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். எனினும் அவர் சிலமணி நேரத்தில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இதுதொடர்பான வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.
(ய-8)

# சட்டவாளரான மனைவியை தாக்கிய கணவன் மறியலில்

யாழ்ப்பாணம் ஒக்.6
சட்டவாளரான மனைவியை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொறியியலாளரான கணவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
குறித்த சட்டவாளரான பெண் யாழ்ப்பாண பகுதியில் வசித்துவருகிறார். இவர், தனது கணவர் வீட்டில் வைத்து தன்னை முகத்தில் தாக்கினார் என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து அவரது கணவர் சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்தப்பட்டார்.
பிறந்த சில மாதங்களேயான குழந்தையைப் பார்ப்பது தொடர்பாக எழுந்த குடும்பப் பிணக்குக் காரணமாகவே மனைவியைத் தாக்கியதாக கணவன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
எனினும் கடந்த ஒன்றரை வருடகாலமாக இவ்வாறு துன்புறுத்தப்படுவதாக மனைவி சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். அதனையடுத்து கணவரை இம்மாதம் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ய-103)

# யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு புதிய எஸ்.எஸ்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணம் பொலிஸ் வலயத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகராக ஈ.எம்.யூ.விஜித குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லெஸ் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமான இடத்துக்கே விஜித குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.
ஹற்றன் மூத்த பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு முதல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில்விஜிதகுணரத்னநியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைவாக பொலிஸ் ஆணைக் குழு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது. (வ-5,31)

# கஞ்சா சுருட்டுடன் கைதாகியவருக்கு ரூ. 9,000 தண்டம்

யாழ்ப்பாணம். ஒக்.6
கஞ்சா சுருட்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
இவர் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டார்.
இதேவேளை, பொது இடத்தில் மது அருந்தியமை மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 11 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.
(ய-8)

# ஆசிரியர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஒக்.6
யாழ்ப்பாணம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் ஒய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் கலந்து கொள்வார். (ய-ரி)

## கப்பல் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.6
வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயக் கப்பல் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
இந்த ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 30ஆம்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறதுஎன்பது குறிப்பிடத்தக்கது.
(ய-173)



*யாழ்ப்பாணம் குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் விஞ்ஞான, கணித, தொழில்நுட்ப கண்காட்சி அண்மையில் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்றது. இதில் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (21)*

# சந்திரிகா இன்று வதிரிக்கு வருகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.6
முன்னாள் அரசதலைவரும் தேசிய நல்லிணக்க குழுத் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க இன்று வெள்ளிக்கிழமை கரவெட்டி வதிரியில் இடம் பெறும் கல்வி நிலையம் ஒன்றின் திறப்புவிழாவில் கலந்துகொள்ளவுள்ளார்.
இதில் வடக்கு மாகாணசபை அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.
வதிரி மத்திய மகளிர் கல்லூரிக்கு அருகில் புதிதாக ஆரம்பிக்கப்படும் ரோகினி ஸ்பீக் அப் ஆங்கில அக்கடமி என்ற இந்தக் கல்வி நிறுவனம் 13 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பேச்சு,ஆங்கிலம், .சிங்களம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வகுப்புகளை இலவசமாக நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(ய-173)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.6
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும்வாராந்த ஆன்மிக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுஇடம்பெறும்.
சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவாற்றுவார். (ய-173)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 80 | 60 |
| கத்தரி | 180 | 200 | 180 | 160 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 120 | 140 | 100 | 140 |
| பாகல் | 340 | 200 | 200 | 200 | 240 |
| க.கிழங்கு | 100 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 130 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 250 | 280 | 250 | 300 | 260 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 160 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 80 | 70 |
| கீரை | 40 | 40 | 35 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 500 | 280 | 400 | 340 |
| புடோல் | 80 | 100 | 100 | 140 | 100 |
| கோவா | 140 | 120 | 120 | 160 | 140 |
| வெண்டி | 80 | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 120 | 200 | 200 |
| தேங்காய் | 80 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 110 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 240 | 200 | 300 |
| வல்லாரை | 20 | 20 | 25 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 220 | 220 | 260 |
| கரட் | 120 | 160 | 80 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 200 | 140 | 160 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 900 |
| நண்டு | 400 | 400 | 500 | 400 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | – |
| சுறா | 600 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | 600 |
| விளை | 600 | 400 | 500 | 400 |
| முரல் | 350 | 350 | 350 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 200 | 300 | – |
| கொய் | 100 | 70 | 80 | 80 |
| பாலை | 250 | 300 | 500 | 400 |
| வாளை | 150 | 200 | 400 | 300 |

# வீட்டுத் திட்டம் மறுக்கப்பட்ட குடும்பத்துக்கு அதனை வழங்கிவைத்தார் யாழ். செயலர்

## நேரில் சென்று நிலையறிந்து உடனடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.6

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வீட்டுத் திட்டம் மறுக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

அந்தக் குடும்பத்தின் நிலைகண்டு உருக்கமடைந்த யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், உடனடியாகவே அந்தக் குடும்பத்துக்கு தமது அதிகாரத்தின் கீழாக வீடு ஒன்றுக்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கினார்.

குடும்பத்தில் தாயார் மற்றும் 11, 7 வயதுடைய இரு பிள்ளைகள் என மூவர் உள்ளனர். நீண்டகாலமாக வீட்டு வசதிகோரி அந்தப் பெண் விண்ணப்பித்துள்ளார். இருப்பினும் இந்த ஆண்டுவரை வீட்டுத் திட்டத்தில் அவரது குடும்பம் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் அந்தப் பெண் தமது குடும்ப நிலமையை விளக்கி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனிடம் எழுத்தில் முறையீடு செய்தார். இதனையடுத்து தனது குழுவை அனுப்பி மாவட்டச் செயலாளர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். அந்தக்குழு முறைப்பாட்டாளரான பெண்ணின் குடும்பத்துக்கு வீட்டு வசதி வழங்கப்பட வேண்டும் என மாவட்டச் செயலாளருக்குப் பரிந்துரை செய்தது.

குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அந்தக் குடும்பத்துக்கு வீட்டுத் திட்டத்தில் வீடு வழங்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலாளருக்கும் மாவட்டச் செயலாளர் அறிவுறுத்தல் வழங்கினார். எனினும் பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு நிறைவடைந்ததால் இந்த ஆண்டுத் திட்டத்தில் அந்தக் குடும்பத்தை உள்வாங்க முடியவில்லை என்று மாவட்டச் செயலாளருக்கு பதிலளிக்கப்பட்டது.

இதனையடுத்து மாவட்டச் செயலாளர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் ஆகியோர் நேரடியாகவே அந்தக் கிராமத்துக்குச் சென்று கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரை அழைத்து குடும்பத் தலைமைத்துவப் பெண்ணின் தற்போதைய நிலை தொடர்பில் அவதானித்தனர்.

"அந்தக் குடும்பம் சுமார் 20 அடி கொட்டகைக்குள் வசிக்கின்றது. அந்தப் பெண்ணின் மகளான 11 வயதுச் சிறுமிக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அந்தச் சிறுமி நிலத்தில் பாய் விரித்து படுத்துறங்குகிறார். அதன் அருகில் சிறிய அடுப்பில் சமையல் இடம்பெற்றது.

இந்தக் காட்சிகளானது அதிகாரிகளைக் கண் கலங்க வைத்துவிட்டது" என்று தெரிவிக்கப்பட்டது.

கிராம அலுவலரான பெண் மீது அதிருப்தி வெளியிட்ட மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன், தமது சிறப்பு பணிப்புக்கமைய அந்தக் குடும்பத்துக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் வீடு ஒன்றுக்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கினார். வீடு அமைக்கும் பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார். (வ-101)

# 2 கடைகளை உடைத்து பணம், நகை திருட்டு

## ஆவரங்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 6

அச்சுவேலி, ஆவரங்கால் பருத்தித்துறை சாலையில் உள்ள இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆவரங்கால் பகுதியில் நேற்றுமுன்தினம் மருந்தகம் மற்றும் டயர் கடை ஆகியவற்றின் கூரைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. டயர் கடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு சோடி காப்பு, சங்கிலி மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

மருந்தகம் உடைக்கப்பட்ட போதிலும் அங்கு திருட்டு இடம்பெறவில்லை. இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-8-26)

# இந்திய மீனவர்கள் நால்வருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.6

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட நான்கு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்தனர். அவர்களிடம் இருந்து படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

நான்கு மீனவர்களும் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்படைக்கப்பட்டனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-8)

# சாலையோர பழ வியாபாரியான பெண்ணிடம் பணப்பை பறிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணம், பரமேஸ்வராச் சந்தியில் வீதியோரம் பழங்கள் விற்பனை செய்து வாழ்வாதாரம் நடாத்தும் குடும்பப் பெண்ணின் பணப்பை பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது.

பரமேஸ்வராச் சந்தியில் வீதியோரம் அப்பிள், ஒரேஞ், மாம்பழங்கள் விற்பனை செய்து வாழ்வாதாரம் நடத்தும் குடும்பப் பெண் நேற்று முன்தினம் பகல் வேளை விற்பனைப் பணத்தை ஓர் கைப்பையில் வைத்துள்ளார். அவர் தனது விற்பனையில் ஈடுபட்டிருந்தார்.

விற்பனை குறைந்த சமயம் குடிதண்ணீர் எடுப்பதற்கு அருகில் சென்று சுமார் 10 நிமிட இடைவெளியில் திரும்பிய சமயம் எவருமே அற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடப்பட்டுள்ளது. அந்தக் கைப்பையில் 7 ஆயிரம் ரூபா பணம் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

# புலமைப் பரிசில் பெறுபேறுகள்

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

கணேசானந்தன் கனிமொழி 184, கௌரிகாந்தன் மாதுளன் 178, சிவனேசன் பரகிதன்174, யோகேந்திரன் ரேன்சனா173, சிவகரன் அபிசாய்ராம்171, கிருபாகரன் கௌதமன் 169, பிரதீபன் பாவலன் 169 ,கிருபாகரன் யதுசன் 167, ஜீட் வசந்தகுமார் வர்சிக்கா 167, சிவகரன் கவியாளன் 166, கேதீஸ்வரன் லக்சிகா 161.

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

கு.ஞானேஸ்வரன் 171 , ச.டிவனியா 168, பா.துஷாயினி 167, ர.பிரணவன் 158 .

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

சி.பவித் 191 (மாவட்ட நிலை 04), ச.அபிசனா 178, சி. இசைச்செல்வன் 173, ம.கருணியா 173, உ.சிபிசன் 170, சோ.கிருசிகா 170, த.துவாரகன் 169, பா.தரணியா 163, க.கதிர்விழி 163, உ.சுருதிகா 162, பி.சர்மிலன் 160, ய.நிலவினியன் 160, சு.அபர்ணா 159, வி. கலைவாணன் 159, கு.தர்சனா 156, க.கலைமொழி 155, த.அக்சயன் 155.

**மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலம்**

பி.அபிஷாந் 193 (மாவட்ட நிலை 2),யெ .தரணிகா 182,த.சாருயன் 168,த.மாதங்கி 163,கி.அபிநயா 156,வி.சனுஸ்ரன் 155.

# கரவெட்டியில் கணினிப்பயிற்சி

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இன்றுகாலை 9 மணிக்கு கணினி கிராபிக்ஸ் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புபவர்கள் காலை 9.00மணிக்கு நேரடியாக விதாதா வள நிலையத்துக்கு வருமாறு பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார். (ய)

# சேவைநயப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 6

லயன் மருத்துவர் வை.தியாகராஜாவுக்கான சேவை நயப்பும் ' கருமத்திருதி ' என்னும் நூல் வெளியீடும் நாளைசனிக்கிழமை யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் விழா நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர்இ.விக்கினேஸ்வரன். மதிப்புறு விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழக 30p6 பி1 மாவட்ட ஆளுநரின் முதன்மை இணைப்பாளர் லயன் வி.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

மருத்துவத்துறை மற்றும் சமூகசேவைகளிலும் 50வருட சேவையை நிறைவு செய்தமையை முன்னிட்டு இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது. (ய)

# பீரங்கி வேட்டுகள் ஓய்ந்தாலும் இனவாதம் இப்போது மோசம்

## அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.6

குருதியும் சதையும் குண்டும் பீரங்கியும் இல்லாத ஒரு காலகட்டம் தற்போதிருந்தாலும், அதை விட மோசமான நிலையில் இனவாதிகளின் செயற்பாடு தற்போதுள்ளது.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று தேர்தல் முறை மாற்றம் மற்றும் இடைக்கால அறிக்கை தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

குருதியும், சதையும், குண்டும், பீரங்கியும் இல்லாமல் போய்விட்டன. அதற்காகப் பாலும், தேனும் கலந்து இப்போது ஓடுகின்றது என்று சொல்லமாட்டேன். அப்போதைய போரை விட இப்போதைய போர் மோசமானது. பன்னாட்டையும் சேர்த்துக்கொண்டு, முழு நாட்டையும் தமக்குச் சொந்தமான நாடாக மாற்றியமைத்துக்கொள்ள இனவாதிகள் கடுமையாக முயற்சிக்கி ன்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் குழப்பிக் கொள்ளாமல், பொறுமை காக்க வேண்டிய இடத்தில் பொறுமை காத்து, சண்டைபிடிக்க வேண்டிய இடத்தில் சண்டைபிடித்து, எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்த்து, அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் அழுத்தம் கொடுத்து சாணக்கியமாகச் செயற்படுகிறோம். சிறுபான்மைக் கட்சிகள் மட்டுமன்றி சகல கட்சிகளின் நோக்கமும் இதுவே. தேர்தல் முறை மாற்றம் என்பது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் நீண்ட காலக் கனவாக இருந்தது. விருப்பு வாக்கு முறையை அகற்றி தொகுதிக்கு ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது நீண்டகால எதிர்பார்ப்பு.

சில தவறான புரிதல் காரணமாக, சகல பிரச்சினைகளுக்கும் தேர்தல் முறை மாற்றமே காரணம் என நினைத்து விட்டார்கள். சமஷ்டியும் அப்படித்தான். சமஷ்டி குறித்தும் சில தவறான புரிதல் காணப்படுகின்றமையாலேயே பிரச்சினைகள் எழுகின்றன.

புதிய அரசமைப்பில் சமஷ்டியும் இல்லை. பௌத்தத்துக்கான முன்னுரிமையும் நீக்கப்படவில்லை. அப்படியிருந்தும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அப்படியென்றால் எமது உரிமைகள் தொடர்பில் பேச எமக்கு முடியவே முடியாது என்றா அர்த்தம்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

(ற-33)



# தேசிய உற்பத்தி வார நிகழ்வு திருமலையில்

திருகோணமலை, ஒக்.6

கிழக்கு மாகாணத்தின் தேசிய உற்பத்தி வார ஆரம்ப நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகெல்லாகம நிகழ்வை ஆரம்பித்தார்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு விவசாய அமைச்சின் செயலாளர் கே.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதிவரை தேசிய ரீதியில் உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு தேசிய உற்பத்தி வாரம் செயற்படுத்தப்படுகின்றது.

இதன்போது விவசாயம், கால்நடை, மீன் பிடித்துறைகளை நவீன மயப்படுத்தி அவற்றின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தி விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-45)

# சிலை அமைப்பதைத் தவிர்த்து பெருமையை வெளிப்படுத்தவேண்டும்

மட்டக்களப்பு, ஒக்.6

நாட்டுப் பற்றாளர்களுக்கு நாடு முழுவதும் சிலைகளை நிறுவுவதை விடுத்து அவர்களது பெருமைகளை உலகறியச் செய்ய வேண்டும். அதற்கு எமது உள்ளத் தூய்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி. ஜெய்சங்கர்.

சுவாமி விபுலானந்தரின் 125வது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு மாநாடும் கலை விழாவும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நேற்று நடைபெற்றன. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழை சிற்பமாகவோ, உருவமாகவோ வைத்துப் பாதுகாப்பதால் எந்தப் பெருமையும் நமக்குக் கிட்டப்போவதில்லை. யாழை வாசிக்கவேண்டும். கலைஞர்களை உருவாக்க வேண்டும்.

ஆற்றுகைக்களையும் அத்தாட்சிப் பத்திரங்களையும் மையப்படுத்தியதாக எமது கல்வி இருப்பதால் எங்களால் ஆற்றுகையாளர்களை உருவாக்குவது மிகவும் சிரமமாக இருக்கின்றது. இது சார்ந்து நாங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மட்டத்திலும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்திருக்கின்றோம்" என்றார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் ஆகியன இணைந்து இந்த 3 நாள் மாநாட்டையும் கலை விழாவையும் ஏற்பாடு செய்தன.

மூன்று தினங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகளின் முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களும் கலை ஆர்வலர்களும் பங்குபற்றினர். (ற-ரி4,46)

# மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தியின் மீது சூடு

## அதிரடிப் படைச் சிப்பாய் உட்பட 3 பேருக்குச் சிறு காயங்கள்

கொழும்பு, ஒக்.6

புத்தளம் மீஓயாப் பிரதேசத்தில் மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். பாரவூர்தியில் பயணித்த இருவர் சிறு காயங்களுடன் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறி பாரவூர்தி பயணித்தமையால் சிறப்பு அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின்போது சிறப்பு அதிரடிப் படைச்சிப்பாய் ஒருவரும் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

















*ஒட்டுசுட்டான் பிரதேச கலை பண்பாட்டு விழா நேற்று நடைபெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். விழாவில் பண்பாட்டு அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றது. தொடர்ந்து பல நிகழ்வுகளும் நடைபெற்றன.* (ற-101,500)

# புகையிலைக்கு மாற்றுப்பயிராக மரமுந்திரிகை

## ஆராய்கிறது வடக்கு விவசாய அமைச்சு

யாழ்ப்பாணம்.ஒக்.6
வடக்கு மாகாணத்தில் புகையிலைக்கு மாற்றுப் பயிராக மர முத்திரிகையை பயிரிடுவது தொடர்பில் மண்ணின் தன்மை ஆராயப்படவுள்ளது என வடக்கு விவசாய அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ. சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் விவசாயிகளின் பிரச்னைகளை கேட்டறியும் நிகழ்வு தற்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வருகின்றது. இதன்போது விவசாயிகளின் பிரச்சினைகள் அவர்களின் சம்மேளனங்கள், சங்கங்கள் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானது புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பயிர் வேண்டும் என்பதாகும்.

2020ஆம் ஆண்டு புகையிலை பயிரிடுவதை முற்றாகத் தடைசெய்யவேண்டும் என்று அரசு தெரிவித்துள்ளது. விவசாயிகளின் முதன்மை வாழ்வதாரப் பணப்பயிராக இது உள்ளது. ஆகவே இதற்கான மாற்றுப்பயிர் வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

எனவே, இதற்குப் பதிலாக மரமுந்திரிகையைப் பயிரிடுவது தொடர்பில் தீவகப் பகுதிகளில் மண் பரிசீலனை செய்யப்படவுள்ளது.

இதற்கு மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

தற்போது ஒருகிலோ மரமுந்திரிகை இரண்டு ஆயிரம் ரூபா வரையில் விற்கப்படுகின்றது. மரம் வளர்ந்து குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் நீர் பாய்ச்சவேண்டிய அவசியசமும் இல்லை. ஆகவே இதனையும் புகையிலைக்குப் பதிலான மாற்றுப்பயிராக பயிரிடுவது தொடர்பாக தொடர்ந்து ஆராயவுள்ளோம். இதற்காக முதல் கட்டமாக தீவகப் பகுதியில் மண் ஆராய்ச்சி செய்யப்படவுள்ளது. மண்ணின் தன்மை அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ய-ரி)

வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட

# வன்னிப் பிராந்திய மாணவிகளுக்கும் நீதிவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.6
வித்தியாவின் படுகொலைக்கு நீதி கிடைத்துள்ள போதும், வவுனியாவில் இடம்பெற்ற பல வன்புணர்வுச் சம்பவங்கள் மற்றும் படுகொலைகளுக்கு இன்றுவரை நீதி கிட்டவில்லை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவி வித்தியாவின் கொலைக்கு நீதி கிடைத்தது. ஆனால் வவுனியாவில் கொள்ளர் புளியங்குளத்திலும், நெடுங்கேணியிலும், தோணிக்கல்லிலும், இறுதியாக பண்டாரிகுளத்திலும் இடம்பெற்ற வன்புணர்வின் பின்னான படுகொலைகளுக்கு இதுவரை எவ்வித நீதியும் கிடைக்கவில்லை.

இந்தக் கூட்டு அரசும் அந்த நீதியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. அந்தப் பிள்ளைகளின் தாய், தந்தையர் கண்ணீருடன் உள்ளனர்.

வித்தியாவினுடைய தாய் விட்ட கண்ணீருக்கு தீர்ப்புக் கிடைத்திருந்தது தனது பிள்ளை இல்லாவிட்டாலும் நீதி நிலைநாட்டப்பட்டதற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

அதேபோல் ஏனைய மாணவிகளுக்கும் நீதிகிடைக்கவேண்டும். கூட்டு அரசு நீதியை வழங்கவேண்டும் - என்றார். (ய-402)

# வடக்கு தொண்டராசிரியர்கள் அனைவருக்கும் விரைவில் நியமனம்

*கல்வி இராஜாங்க அமைச்சர் உறுதி*

யாழ்ப்பாணம்.ஒக்.6
வடக்கு மாகாணத்தில் தற்போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் நியமனப் பட்டியலில், உள்ளடக்கப்படாத தொண்டர் ஆசிரியர்களுக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் உறுதியளித்துள்ளார் என மாகாண தொண்டர் ஆசிரிய சங்கத்தின் தலைவர் இ.ஜெயராஜ் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களில் 676 பேர் தகுதி உடையவர்களாக காணப்பட்டனர். அவர்களில் தற்போது சம்பவத் திரட்டுப் புத்தகத் தின் பதிவின் அடிப்படையில் 182 பெயர்கள் நியமனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் சம்பவத் திரட்டுப் புத்தகத்தின் பதிவுகள் இல்லாமையால் பட்டயலில் உள்வாங்கப்படவில்லை.

இது பற்றி கல்வி இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அதன் அடிப்படையில் அமைச்சர், தலைமை அமைச்சரின் செயலாளருடன் கலந்துரையாடியுள்ளார். அந்தக் கலந்துரையாடலின் பின்னர் தற்போது பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்படாதவர்கள் உள்ளடக்குவதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

ஆகவே மீதமாக உள்ளவர்களுக்கான நியமனங்களை இன்னும் ஒரு மாதத்துக்குள் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார் - என்றார். (ய-ரி)

# அக்கராயன் கரும்புத்தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்க முதல்வரின் அனுமதி தேவை

## கரைச்சிப் பிரதேச செயலர் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.6
அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்ட நிலத்தை அப்பகுதி மக்களுக்கே பகிர்ந்தளிப்பதற்கு வடக்கு மாகாண காணி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் அனுமதியை வழங்கவேண்டும் என கரைச்சிப் பிரதேச செயலாளர் முகுந்தன் முதலைச்சருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கராயன் பகுதியல் 210 ஏக்கர் கரும்புத் தோட்டக் காணியை அக் கிராமத்தில் வாழும் நிலமற்ற பாமர விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் அக்கூட்டம் இடம்பெற்றதினத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை.

எனவே, இதன் அடிப்படையில் மாவட்டத்தின் ஏனைய இணைத்தலைவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றவும் விவசாயிகளின் கோரிக்கையின் பெயரிலும் மேற்படி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் அப்பகுதியிலேயே வாழும் நிலமற்ற விவசாயிகளுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நிலத்தைதனி ஒரு நிறுவனத்திற்கு அன்றி கிராமத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கே வழங்க ஆவண செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் விவசாயிகள் சுமார் 60பேர் கூட்டாகச் சென்று பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்தனர். எழுத்திலும் விண்ணப்பித்த னர்.

இருப்பினும் கரும்புத்தோட்டக் காணியை முன்னர் செய்கை மேற்கொண்டவர்களிடமே வழங்குமாறு மாகாண காணி ஆணையாளர் , மாவட்டச் செயலாளர், பிதேச செயலாளர் மாவட்டத்தில் இணைத் தலைவர்களுக்கும் பிரதியிட்டு முதலமைச்சர் 2017.03.08இல் எழுத்தில். உத்தரவிட்டிருந்தார். (ய-101)

# அரச, வங்கிகளின் திட்டங்களில் தமிழின் நடைமுறை அவசியம்

## மாகாணசபையில் இன்று பிரேரணை

யாழ்ப்பாணம்,ஒக்.6
"இலங்கையில் உள்ள அனைத்து வங்கிகள் மற்றும் அரசின் திட்டங்களின் பெயர்கள் தமிழிலிலும் எழுதப்படவேண்டும். இதற்கு தேசிய சுக வாழ்வு,கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்" என வலியுறுத்தி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் வடக்கு மாகாணசபையின் இன்றைய அமர்வில் பிரேரணை ஒன்றை முன்வைக்கிறார்.

மாகாணசபையின் 107 ஆவது அமர்வு இன்று நடைபெறுகிறது.

அவரது பிரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசு கொண்டுவரக் கூடிய பல்வேறு திட்டங்கள், வங்கிகள் அறிமுகப்படுத்தக் கூடிய வைப்புத் திட்டங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு அர்த்தம் புரியாத சிங்களப் பெயர்களிலேயே உள்ளன.

இலங்கையில் சிங்களமும், தமிழும் தேசிய மொழிகளாகவும் உத்தியோகபூர்வ மொழிகளாகவும் உள்ளன.

எனவே இரண்டுக்கும் சம உரிமை வழங்கப்படுதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

அரசு அறிமுகப்படுத்தக் கூடிய எந்தவொரு திட்டங்களிலும் அதற்குரிய பெயர்கள் தமிழில் கருத்து மாறாமல் செயற்படுத்தப் படவேண்டும்.

மேலும் வங்கிகள் அனைத்தும் அறிமுகப்படுத்துகின்ற வைப்புக் கணக்குகளின் பெயர்கள் மற்றும் பரிசுத் திட்டங்களின் பெயர்களும் அதே கருத்தில் தமிழில் பின்பற்றப்படவேண்டும்.

எனவே, அரசும் வங்கிகளும் இந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரான மனோகணேசன் இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த ஆவண செய்யவேண்டும் என்றுள்ளது. (ய-8)

# இராமநாதபுரம் பாடசாலையின் வைரவிழா: விளக்கம் கோரி அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.6
வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் உத்தரவை மீறி கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய வைர விழா நடத்தப்பட்டமை தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் பாடசாலை அதிபரிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது:

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த நிலையில் சிலர் முறையிட்டனர் எனச் சுட்டிக்காட்டி நிகழ்வுகளை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் பணிப்பின் பெயரில், செயலாளரின் ஒப்பத்துடன் மாகாணக்கல்வி அமைச்சின் மேலதிக உதவிச்செயலாளர் எழுத்தில் அறிவுறுத்தியிருந்தார்.

இருப்பினும் சில அரசியல் காரணங்களின் பின்னணியிலேயே நிகழ்வை நிறுத்த முற்படுவதாக பாடசாலைத் தரப்புகள் சுட்டிக்காட்டின. நிகழ்வை அனுமதிக்குமாறு கல்வி அமைச்சரை நாடினர். ஆனால் கல்வி அமைச்சர் நிகழ்வை நிறுத்தியதற்கான காரணத்தை வெளியிடப்பட்டபோதும் அதற்கான ஒப்புதலை அளித்திருக்கவில்லை.

இதன் காரணத்தால் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் என அனைவரும் ஒருங்கே ஒன்றிணைந்து ஆராய்ந்தனர். மாகாணக் கல்வி அமைச்சரின் நிகழ்வைப் பிற்போடும் உத்தரவு தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

அந்த உத்தரவுக்கு அடிப்படையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை அழைப்பது தொடர்பிலும் மீண்டும் ஆராய்ந்தனர்.

அவ்வாறு ஆராய்ந்தபோது அமைச்சரின் கூற்றுக்காக நிகழ்வை ஒத்தி வைத்து பாடசாலையினதும் கிராமத்தினதும் நன்மதிப்பை இழப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்பிரகாரம் வைர விழா நிகழ்வுகள் திட்டமிட்டபடி இடம்பெற்றன. இவ்வாறு இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பிலேயே தற்போது விளக்கம் கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அது எனது கைகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை என இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் எம்.கே.எல்.இமானுவேல் தெரிவித்தார். (ய-6-101)

# வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றி விட்டுக்கொடுப்புடன் பேசத் தயார்

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6
வடக்குடன் கிழக்கை இணைக்க விடமாட்டோம் என்று ஒரேயடியாக ஒதுக்குவது ஆரோக்கியமானதல்ல. இந்த விடயத்தில் பேச்சுக்கள், விட்டுக்கொடுப்புகள் இடம்பெறவேண்டும். வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்கு தனி அலகு வழங்கப்படவேண்டும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இணைந்த வடக்கு - கிழக்கில் படித்த முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதற்குக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராக இருப்பதாக, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு- கிழக்கு இணைப்பு விவகாரம் தொடர்பில் ஒரு வகை மெத்தனப் போக்கையே கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தி தேவையில்லாத விபரீதம் ஏற்படுத்த ஜே.ஆர் அரசு முயன்றது. வடக்கு- கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம் தனி அலகு என்ற கோரிக்கை அங்கீகரிக்கப்படவேண்டும். அதற்கான பேச்சுக்கள், முன்னெடுப்புகள் மற்றும் விட்டுக்கொடுப்புகள் இடம் பெற வேண்டும்.

வடக்குடன் கிழக்கை இணைக்க விடமாட்டோம் என்று ஒரேயடியாக ஒதுக்குவது ஆரோக்கியமானதல்ல. சிக்கலை ஏற்படுத்த முயலும் தரப்பினருக்கு இது மேலும் தூபமிடுவதாகவே அமையும். தமிழ், முஸ்லிம் மக்களிடையில் எந்தவிதமான நல்லுறவும் பேணப்படக்கூடாது என்ற போக்கையே இத்தகையோர் கொண்டுள்ளனர். இது பிழையான அணுகுமுறையாகும்.

பிரதி அமைச்சர் ஹரீஸ் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாகவும் கல்முனையை தனி மாவட்டமாக அங்கீகரிக்க வேண்டும் எனவும் கூறியிருப்பது அவரின் சொந்தக் கருத்து. கட்சியின் நிலைப்பாடல்ல. கட்சி மற்றும் ஊர் சார்ந்த உணர்வுகளுடன் சில கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான கருத்துக்களினால் வேறு சக்திகளுக்கு அறியாதவகையில் உந்துசக்தி வழங்குவதாக அமைந்துவிடும். இவற்றை தவிர்த்துக் கொள்வது உகந்தது.



வடக்கு- கிழக்கு இணைப்பு விவகாரம் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்றத்தினூடாகவே அங்கீகரிக்கப்பட வேண்டும். வடக்கையும் கிழக்கையும் இணைக்க இரு மாகாணங்களும் அங்கீகாரம் வழங்கினாலும் அது சாத்தியமாகாது. இவ்வாறான சில காப்பீடுகளும் இருக்கும் நிலையிலே இந்த விடயங்களைச் சில தரப்பினர் பெரிதுபடுத்தி ஊதிப்பெரிதாக்கி ஏதோ விபரீதம் நடந்தது போல காட்டி அரசியல் பிழைப்பு நடத்துகின்றனர். வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பில் அவசரப்பட்டு பேசுவது அரசியல் பிழைப்புவாத பேச்சுக்கள் மட்டுமே. நாளைக்கே வடக்கும் கிழக்கும் இணைந்து விடுவதைப் போன்று பேசுகின்றனர்.

முஸ்லிம்களின் உடன்பாடின்றி இதனைச் செய்ய முடியாது. செய்யவும் மாட்டோம் என்று சம்பந்தன் கூறியிருக்கிறார். வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்துக்கு முன்னர் எமக்குத் தீர்வுக்கு வேண்டிய பொதுவான விடயங்கள் மற்றும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்து இதனைப் பற்றி ஆராயலாம் - என்றார். (5)

# நாட்டைக் கூறுபோடாத அதிகாரப் பகிர்வே அவசியம்

## புதிய அரசமைப்புப் பற்றி மல்வத்துப் பீடம் திடமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6
அதிகாரப் பரவலாக்கம் என்பது நாடு இரண்டாகப் பிரிவதாகச் சிலர் அர்த்தம் கொடுக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கம் என்பது வேறு, நாட்டைத் துண்டாடுவது பிரிப்பது என்பது வேறு. இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதிகாரப் பரவலாக்கத்துடன் ஆனால் நாட்டைக் கூறு போடாத அரசமைப்பே நாட்டுக்குத் தேவை. இவ்வாறு மல்வத்துபீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே சித்தார்த்த சிறி சுமங்கல தேரர் தெரிவித்தார்.

விக்கிரமபாகு கருணாரட்ண தலைமையிலான பொது அமைப்புக்கள் கண்டியில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர். போராட்டத்தின் முடிவில் மல்வத்துபீட மகாநாயக்க தேரரைச் சந்தித்துப் பேசினர். இந்தப் பேச்சுக்களின்போதே, மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் துரிதமாக முன்னெடுக்கவேண்டும். இதற்காக நாம் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளோம். சிலர் மேற்கொள்ளும் தவறான பரப்புரை, புதிய அரசமைப்பை முன்னெடுப்பதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை இல்லாமல் போகும் என்று அவர்கள் அச்சமூட்டுகின்றனர். ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக் காலத்தில் கூட பௌத்த துறவிகள் உருவாக்கம் இடம் பெற்றது.

மேலும், அரசமைப்பு நிர்ணயசபை அங்கத்தவர்கள் (நாடாளுமன்ற உறுப்பினர்கள்) சிலர் சபையில் தமது கருத்துக்களை முன்வைக்காது வெளியே வந்து தவறான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்' என்று மல்வத்து பீடத்திடம் விக்கிரமபாகு எடுத்துரைத்தார்.

இவற்றைப் பொறுமையாகக் கேட்டபின்னர் மல்வத்து பீட மகாநாயக்கர் தெரிவித்ததாவது:

அதிகாரப் பரவலாக்கத் துக்குச் சிலர் நாடு இரண்டாகப் பிரிவதாக அர்த்தம் கொடுக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கம் என்பது வேறு. நாட்டைத் துண்டாடுவது வேறு என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். அதிகாரப் பரவலாக்கத்துடன் ஆனால் நாட்டைக் கூறு போடாத அரசமைப்பே நாட்டுக்குத் தேவை -என்றார். (5)

## மன அழுத்தத்தைக் குறைக்கும் பொதுவான வழிகள்

- புத்தகம் வாசித்தல்
- விளையாட்டு/ யோகப் பயிற்சி/ உடற் பயிற்சி
- உணர்வுடனான தியானம்/ வேறு தியானம்
- இசை, நடனம், நாடகம், பங்கு பற்றுதல்/ கண்டு களித்தல்/ வானொலி, தொலைக்காட்சி)
- நேர முகாமைத்துவம்
- நம்பிக்கைக்குரிய ஒருவருடன் பிரச்சினைகளைப் பகிர்தலும், தீர்வு காணலும்
- உயிர் பின்னூட்டல் (Bio Fed Back)

– சாந்திகம்.

# அனுரவின் சொத்துக்கள் சகோதரிகளுக்கு பகிர்வு

கொழும்பு, ஒக். 6
முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்கவின் சொத்துக்கள் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும், அவரது சகோதரி சுனேத்ரா பண்டாரநாயக்கவுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அனுர பண்டாரநாயக்க உயில் எழுதி வைக்காது, 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

அனுர பண்டாரநாயக்கவின் சொத்துக்களுக்கு உரிமையாளர்கள் என்று சகோதரிகளான சந்திரிகா, சுனேத்ரா ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர். அனுரவின் சாரதி, பாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளிட்ட சிலர் இந்த சொத்துக்களுக்கு உரிமை கோரியிருந்தனர். உயிலின் பிரதி ஒன்றையும் அவர்கள் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர். இந்த உயிலை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளதுடன் சகோதரிகளுக்குச் சொத்துக்களை வழங்குவதாக தீர்ப்பளித்துள்ளது. (5)

# கனடாவில் துப்பாக்கிச்சூடு தமிழ் வர்த்தகர் படுகாயம்

கொழும்பு, ஒக். 6
கனடாவில் ஸ்கார்பரோ நகரில் நேற்று முன்தினம் பிற்பகல் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தமிழ் வர்த்தகர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



ஸ்கார்பரோ சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள மயூரா ஜுவல்லர்ஸ் என்ற நகையகத்திலேயே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நகையகத்தின் உரிமையாளரான தமிழ் வர்த்தகர் மீது இலக்கு வைத்தே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். சம்பவம் நடந்த இடத்தில் 3 சந்தேக நபர்களை தாம் அவதானித்ததாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார். ஒரு ஆண் மற்றும் 2 பெண் சந்தேக நபர்கள் அவ்விடத்தில் இருந்ததாகவும், அவர்கள் தங்கள் முகத்தை மூடியிருந்ததாகவும் நேரில் பார்த்தவர் தெரிவித்தார்.

கடை உரிமையாளர் மீது மூன்று முறை துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மூன்றாவது துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் காயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் பல பாடசாலைகள் உள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். (5)

# எரிபொருள் சந்தையைக் கைப்பற்றும் சீனாவின் முயற்சி கைகூடவில்லை

## அரசு நிராகரிப்பு

அம்பாந்தோட்டையில் பெரிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து, உள்ளூரில் எரிபொருள் விற்பனை செய்வதற்குச் சீனா முன்வைத்த திட்டத்தை அரசு நிராகரித்துள்ளது.

சீன நிறுவனத்தால் குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகம் அருகே 3 பில்லியன் டொலர் முதலீட்டில் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் திட்டம் தொடர்பாக அரசு சீன நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி வந்தது. இங்கு சுத்திகரிக்கும் எரிபொருளை உள்ளூரில் சந்தைப்படுத்த அனுமதிக்குமாறு சீன நிறுவனங்கள் கோரியிருந்தன. அதனை அரசு நிராகரித்து விட்டதாகவும், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசு கோரியிருப்பதாகவும் அமைச்சரவை இணைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (5)

# மாகாணங்களின் எல்லைகளை நிர்ணயிக்க ஐவர் குழு தெரிவு

## அவர்களில் இருவர் தமிழர்கள்

கொழும்பு, ஒக். 6
மாகாணசபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகளை வரையறுப்பதற்காக ஐந்து பேர் கொண்ட குழு அரசால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கே.தவலிங்கம் தலைமையிலான இந்தக் குழுவில், பேராசிரியர் எஸ்.எச். ஹிஸ்புல்லா, கலாநிதி அனில டயஸ் பண்டாரநாயக்க, முன்னாள் தேர்தல் ஆணையாளர் சிறிவர்த்தன, பேராசிரியர் சங்கர விஜயசந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த ஐந்து பேர் கொண்ட குழுவே, மாகாணசபைத் தேர்தல் தொகுதிகளை வரையறை செய்யவுள்ளது.

மாகாண சபைகளுக்கு கலப்பு முறையில் தேர்தல் நடத்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், தொகுதி வரையறைக்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது. தொகுதிகள் வரையறுக்கப்பட்ட பின்னரே, மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# கைவிரித்தது ஆஸ்திரேலியத் தூதரகம்

கொழும்பு, ஒக். 6

மனுஸ் தீவில் உள்ள ஆஸ்திரேலிய அரசின் தடுப்பு முகாமில் உயிரிழந்த தமிழ் இளைஞனின் உடலை இலங்கைக்கு அனுப்பும் வேலை தம்முடையது அல்ல என்றும் அதனைப் பப்புவா நியூகினியா அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆஸ்திரேலியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மனுஸ்தீவு முகாமில் உயிரை மாய்த்துக் கொண்ட இளைஞனின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆஸ்திரேலிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டபோது 9 ஆயிரம் டொலர் செலுத்துமாறு கேட்கப்பட்டதாக உயிரிழந்தவரின் உறவினரான மதி என்பவரை மேற்கோள்காட்டி ஆஸ்திரேலிய அகதிகள் பேரவை அறிக்கை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளை மறுத்து கொழும்பில் ஆஸ்திரேலியத் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ரஜீவ் ராஜேந்திரனின் உடலைக் கொண்டு வருவது தொடர்பாக, ஆஸ்திரேலிய அரசுடனோ, கொழும்பில் உள்ள தூதரகத்துடனோ, அவரது உறவினர்கள் தொடர்பு கொள்ளவோ, கோரிக்கை விடுக்கவோ இல்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பப்புவா நியூகினியாவிலேயே ரஜீவ் ராஜேந்திரன் உயிரிழந்ததால், சடலத்தைத் திருப்பி அனுப்பும் பணிகளைப் பப்புவா நியூகினியா அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆஸ்திரேலிய தூதரகம் கைவிரித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரிய ரஜீவ் ராஜேந்திரனை ஆஸ்திரேலிய அரசே, பப்புவா நியூகினியாவில் அமைத்துள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ரஜீவ் ராஜேந்திரனின் சடலத்தைக் கொழும்புக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியபோதும், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று ஆஸ்திரேலிய அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது. (5)

## முன்னாள் எம்.பி.சிகளிடமிருந்து அரச சொத்துக்களை மீளப்பெறுக

### கபே அமைப்பு வலியுறுத்து

மாகாண சபை உறுப்பினர்கள் மக்கள் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது. ஆயுள்காலம் முடிவடைந்துள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்கள் பயன்படுத்தும் வாகனம் உள்ளிட்ட அரச சொத்துகள் உடனடியாக மீளப்பெறப்பட வேண்டும். இவ்வாறு கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஆயுள்காலம் முடிவடைந்துள்ள சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாண சபைகள் உறுப்பினர்களாக இருந்தவர்கள் அரச சொத்துகளை இன்னும் மீளக் கையளிக்கவில்லை என்று மேற்படி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும், மாகாண செயலர்களுக்கும், ஆளுநர்களுக்கும் இடமளிக்கக்கூடாது. ஆயுள்காலம் முடிவடைந்துள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்களிடமிருந்து அவர்களுக்கான பாதுகாப்பு, அரச வாகனம் உள்ளிட்ட சிறப்புரிமைகள் மீளப்பெறப்படவேண்டும் -என்றார். (5)

போர்க் கப்பல் கொள்வனவு விவகாரம்

## கடற்படைத் தளபதியை ஓய்வுக்கு நிர்ப்பந்தித்து அழுத்தம்?

ரஷ்யாவிடம் இருந்து 24 பில்லியன் ரூபாவுக்குப் போர்க்கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி 55 வயதை எட்டிய நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவருக்கு ஒரு மாத சேவை நீடிப்பு வழங்கியிருந்தார்.

அரச தலைவரின் மேலதிக சேவை நீடிப்பு கிடைக்காவிடின் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் கடற்படைத் தளபதி பதவியில் இருந்து வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா ஓய்வுபெற நேரிடும். கடற்படைத் தளபதிக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு மாத சேவை நீடிப்பை மாத்திரம் வழங்கியமை, பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் அட்மிரல் சின்னையாவுக்கு ஒரு மாத சேவை நீடிப்பு மாத்திரம் வழங்கப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. 24 பில்லியன் ரூபாவுக்குப் போர்க்கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் என்பதற்காக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை ஓய்வுபெற நிர்ப்பந்திக் கப்படுகிறாரா என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன, இல்லை. அதுபிரச்சினையில்லை. எந்தக் கடற்படைத் தளபதியும் 55 வயதில் ஓய்வுபெற வேண்டும். அரச தலைவர் அவருக்கு ஒரு மாத சேவை நீடிப்பை வழங்கியுள்ளார். அவருக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்படவேண்டும், என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கை - என்றார். (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



முகுந்தவர்ணன் ஷருண்யா
2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி) மாவட்ட மட்டத்தில் 24 ஆம் இடத்தையும் பெற்று பெருமையைத் தேடித் தந்துள்ளார். இவரது சாதனை மென்மேலும் பெருக இறைவனைப் பிரார்த்திப்பதோடு வாழ்த்தி நிற்கின்றோம்.
வாழ்த்துவோர்:-
றோகினி அம்மம்மா குடும்பம்,
R.Thayalan.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி லலிதா லிங்கேஸ்வரன்
(SLEAS - III (பொது))
எமது கல்லூரியில் பிரதி அதிபராக சேவையாற்றி, 26.09.2017 அன்று BMICH இல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான நியமனத்தைப் பெற்ற எமது பிரதி அதிபரை மனம் மகிழ்ந்து வாழ்த்துவதோடு அவரது பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரி கழகம்.
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலய அதிபர்
திரு.சோமசுந்தரம் திருக்குமரன்
அவர்கள் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்,
யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், கதிரிப்பாய், அச்சுவேலி

பாராட்டி வாழ்த்துகின்றோம்



2017 சாதனையாளர் வரிசையில்
Cab - Net Lanka PGIA நடத்திய
Junior water Awards for Innovation and knowledge Management - 2017 Winners ஆகத் தெரிவு செய்யப்பட்ட
யா/ புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவர்களான
அ.அனோஜன், அ.பிரதீபன், ச.சயந்தினி, பி.மேரிஸ்ரெலா
ஆகியோரையும் இவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வழிப்படுத்திய எமது ஆசிரியை
செல்வி மா.செல்லத்தம்பி
அவர்களையும் பாராட்டுவதோடு மேலும் பல சாதனைகள் படைத்து வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: மாணவர்கள்-
த.அபிநாத், த.அக்ஷிகா

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /கரம்பை அ.மி.த.க. பாடசாலையின்
திரு. சிவபாதசுந்தரம்பிள்ளை நவநீதன்
SLEAS - III கணிதம்
அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்றுச் செல்கின்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்
பாடசாலைச் சமூகம்
யா/கரம்பை அ.மி.த.க.பாடசாலை

St.Patrick'College,Jaffna
ஆசிரிய சேவை வெள்ளி விழா
வாழ்த்துக்கள்
கல்லூரி யின் உயர்தர சிரேஷ்ட பிரிவுகளில் கணித பாடத்தை கற்பிப்பதுடன விளையாட்டுத்துறை வளர்ச்சியிலும் வருடாந்த பரிசுத்தின ஏற்பாட்டு ஒழுங்கமைப்பிலும், ஏனைய நிர்வாக அலுவல்களிலும் அரும்பணியாற்றி இன்று ஆசிரியத்துவ வெள்ளிவிழா காணும்
திரு. பரராஜசிங்கம் ஜெயகுமார்
அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



Mr. P. Jeyakumar
(Sp.Trd (Maths), G.S.Q (Peradeniya)



Mr. M. Berty Bannister
(Sp.Trd. (Phy.Ed), B.A, Dip. in. Ed)

கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராக விளங்கி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக இருந்து கல்லூரி தேசியமட்டத்தில் சாதனைகள் படைக்க வழிகாட்டுபவரும், மெய்வல்லுனர் விளையாட்டுக்கான தேசிய தொழில்நுட்ப அலுவலரும், ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் "C"தர பயிற்றுவிப்பாளருமான ஆசிரியப்பணியில்வெள்ளி விழாக்காணும்
திரு. மரியதாஸ் பேர்ட்டி பனிஸ்ரர்
அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்
அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# எனக்கெதிராகக் கொக்கரித்தவர்கள் பசில் கருத்துக்கு மௌனமாகியது ஏன்?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் பொன்சேகா

கொழும்பு, ஒக். 6
முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகக் குற்றச்சாட்டை நான் சுமத்திய போது, அதனைக் கடுமையாக விமர்சித்த தனிநபர்கள், அரசியல்வாதிகள், பிக்குகள், பசில் ராஜபக்ச ஒட்டு மொத்த இராணுவத்தையும் காட்டிக் கொடுத்து அறிக்கை வெளியிட்ட பின்னரும் ஏன் மௌனமாக இருக்கின்றனர் என்று அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

'படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. ஆனால் சில தனிநபர்கள் குற்றங்களில் ஈடுபட்டிருக்கக் கூடும்' என்று பசில் ராஜபக்ச யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் சரத் பொன்சேகா தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பசில் ராஜபக்ச முழு இராணுவத்தையும் காட்டிக் கொடுத்துள்ளார். ராஜபக்சாக்களை சிறுபான்மை மக்கள் வெறுப்புடன் நிராகரித்தனர்.

தேர்தல் முடிவுகளில் இது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலையை மாற்றி, பாசத்தைக் காட்டுவதற்காக, இராணுவத்தைப் பயன்படுத்தியுள்ளார் பசில் ராஜபக்ச. நாங்களும் கூடத் தமிழ் மக்களின் இதயங்களை வென்றிருக்கிறோம். நாங்கள் நியாயமான வழிமுறையைப் பயன்படுத்தினோம்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவைக் குற்றம்சாட்டி நான் வெளியிட்ட கருத்துக்கும், பசில் ராஜபக்ச வெளியிட்டுள்ள கருத்துக்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

நான் ஒட்டுமொத்த இராணுவத்தையும் குற்றம்சாட்டவில்லை. யாரையும் பெயரைக் கூறாமல் குற்றம்சாட்டவில்லை. ஒருவர் மீது தெளிவாக எனது குற்றச்சாட்டைச் சுமத்தியிருந்தேன். எழுந்தமானமாகத் தனிநபர்கள் என்று கூறவில்லை.

ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டை நான் சுமத்தியபோது, அதனைக் கடுமையாக விமர்சித்த தனிநபர்கள், அரசியல்வாதிகள், பிக்குகள் ஏன் பசில் ராஜபக்சவின் அறிக்கைக்குப் பின்னரும் மௌனமாக இருக்கின்றனர்? என்னை விரோதியாகச் சுட்டிக்காட்டியவர்கள் மற்றும் போர் வீரர்களின் பாதுகாப்பிற்காகப் பேசியவர்கள் இன்று அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள் இப்போது எந்தக் கண்ணீரும் சிந்தவில்லை. குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். யாராவது குற்றவாளிகள் என்று அறிந்தால், அவர்கள் நீதிக்கு முன் கொண்டு வரப்பட வேண்டும்.

தவறு செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், நாட்டுக்கு அவமானமே ஏற்படும். யாராவது ஒருவர் குற்றங்களைச் செய்ததற்கான ஆதாரங்களை மறைத்தால், அவர்கள் அதற்காக வெட்கப்பட வேண்டும் - என்றார். (5)

## ஏதிலிகள் விவகாரம் அமைச்சரவை கவலை



கொழும்பு, ஒக்.6
ரோஹிங்ய முஸ்லிம் ஏதிலிகள் மீதான தாக்குதல் தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக பேசப்பட்டதுடன் அந்த அசம்பாவிதம் தொடர்பில் அமைச்சரவையில் கவலை தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித்த சேனாரட்ன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரோஹிங்ய முஸ்லிம் ஏதிலிகள் விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் பேசப்பட்டது. நடந்த அந்த அசம்பாவிதம் தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் பன்னாட்டு மட்டத்தில் பேசப்பட்டுள்ளது. அது தொடர்பிலும் அமைச்சரவையில் கவலை வெளியிடப்பட்டது - என்றார். (5,31)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபை
உறுப்பினர் **பொ.ஜெகானந்தம்**
**(ஜெயா)** அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி **பாக்கியலட்சுமி**
**பொன்னம்பலம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர், காமாட்சி அம்பாள் ஆலயம்,**
**பலாலிவீதி, உரும்பிராய்.**

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



கனடாவை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர்**
**நாகேஸ்வரா**
**அனோசன்**


மண்ணில் 27.08.1996
விண்ணில் 09.07.2017

எம் குடும்பத்தின் முதல்வரவே - அனோசன்
எமதக்கா அத்தானின் உயிர்ப்பூவே - அனோசன்
எம் நெஞ்சை பதறவைத்து எங்கு சென்றாய்
மூத்தபேரன் குரல் கேட்காமல் தவிக்கும் ஐயா, அம்மம்மாவும்
தாய் மாமன் மகனின்முகம் இனி எங்கே காண்போம்
எனத் தவிக்கும் மைத்துனிகளையும்
உடன் பிறந்த உறவையும் தவிக்க விட்டுச்சென்றாயோ

மொன்றோறியல்
கனடா.

**உன் பிரிவால் துயருறும்**
**அப்பா,அம்மா,தங்கை (அமிசா),**
**பேரன், பேத்தி, உற்றார்,**
**உறவினர், நண்பர்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



நாகர்கோயில் தெற்கைச் சேர்ந்த
**தம்பிஐயா பரஞ்சோதி**
**(இளைப்பாறிய பிரதம எழுதுநர் – கல்வித் திணைக்களம்)**

நாகர் பதியினில் 25.07.1944
நாகதம்பிரான் அடியில் 07.09.2017

எப்போதும் தளராத இறை நாமத்தோன்
ஏற்றமுடன் சைவத்தமிழ் நெறியில் நின்றோன்
தப்பாத பாசத்தால் தகைமை செய்து
தரணியிலே எமையெல்லாம் நிமிரச் செய்தோன்
இப்போதும் என்றென்றும் எம்மை நீங்கா
எந்தையே எம்மை விட்டுச் சென்றதென்ன
முப்பத்தோராம் நாள் நினைவில் இன்று
முப்போதும் பணிகின்றோம் சாந்தி கொள்ள
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாகர்கோயில் தெற்கு,
நாகர்கோயில்.

உம்பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 10.09.2017 அன்று
சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவி
**அமரர்**
**தம்பியையா**
**சின்னம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 07.10.2017சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் 09.10.2017 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


எமது அன்புத்தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் ஊடகங்கள் வாயிலாக அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் சகல உதவிகளையும் முன் வந்து செய்த உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மகிழடி வைரவர் கோயில் வீதி,**
**கோப்பாய் வடக்கு.**

**தம்பியையா-**
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 07 . 04 . 1936



மறைவு 16 . 10 . 2016

**செல்லையா தங்கவேல்**

திதி: பிரதமை (06.10.2017)

வாய்மையை, நேர்மையை, உழைப்பை
உன் அணிகலனாய் கொண்டு
எங்கள் நலனுக்காய் மகிழ்வுடன் உழைத்தவரே!
உண்மையை எடுத்துரைத்து, நேர்மையாய் வாழ்ந்து
நெஞ்சை நிறைத்த எங்கள் தந்தையே!
கண்முன்னே நீர் வாழ்ந்த காலங்கள்
கலையாத நினைவுகளாக எம்மைத் தொடர்கின்றன
காலங்கள் ஒன்று ஆகிவிட்ட போதிலும் காத்திரமான
உங்கள் அன்பு வழி காட்டுகின்றது!
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மொட்டைப்புளியடி,உடுப்பிட்டி.
078 491 5566

மனைவி, மகன்மார், மகள்,
மருமகன், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 . 07 . 1938



மறைவு 06 . 09 . 2017


**அமரர் ஆச்சிமுத்து கந்தையா (சோமு)**

கடந்த 06.09.2017 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் ஆச்சிமுத்து கந்தையா அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபத்தினை தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.10.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாமும் வருகைதந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)**

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**
**077 888 1197**



# இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்

## சனீஸ்வரர் தனி பரிகார சந்நிதி

**புரட்டாதி சனி வார மகா சனீஸ்வர பரிகார ஹோமமும்**
**சனீஸ்வரர் பரிகார விஷேட பூசையும்**
**07.10.2017, 14.10.2017**

அடியார்களே!

விஷ்ணு பக்தனாகிய சனீஸ்வர பகவான் தன்னுடைய எஜமானாகிய திருமாலுடன் தனிச்சந்நிதி அமைத்து அங்கே அடியார்களின் தோஷ நிவர்த்திக்காக நள புஷ்கரணி எனும் தீர்த்தம் கொண்டு அருள்பாலித்துக் கொண்டு இருக்கும் இணுவை திருப்பதியில் இவ்வாண்டு பிரதி புரட்டாதி சனி வாரம் தோறும் விஷேட சனீஸ்வர பரிகார ஹோமம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பிரதி சனி தோறும் 07.10.2017, 14.10.2017 காலங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை அடியார்கள் ஹோமத்தில் கலந்து அதற்குரிய ஹோமத் திரவியங்களைத் தங்களின் கைகளால் சமர்ப்பிக்க முடியும்.

மேலும் நளபுஷ்கரணியில் நீராடியும், எள்சாதம் நைவேத்தியம் செய்தும், எள் எண்ணெய் தீபம் ஏற்றியும் வழிபட முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

குறிப்பு: சனீஸ்வர பரிகார அபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் தங்களின் பதிவுகளை காரியாலயத்தில் மேற்கொள்ளலாம்.

**தொடர்பு :021 224 2300** **ஆலய தர்மகர்த்தா.**

# விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், குகன் ஸ்ரோர்சுக்கு அண்மையில் 25 அடி அகலம், 250 அடி நீளம் கொண்ட வெற்றுக்காணியும், யாழ். சிவப்பிரகாசம் வீதியில் 4 பரப்புக் காணியும், யாழ். பிறவுண் வீதியில் 2½ பரப்புக் காணியுடன் வீடும், யாழ்.நல்லூர் கோயில் வீதியில் 1½ பரப்பு மேல்மாடி வீடும், யாழ். கொக்குவிலில் 5 பரப்புடன் கூடிய வீடும், யாழ்.வேம்படி சந்திக்கு அருகில் 6 பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

# கேள்விக்கான கோருதல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

1.தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரால் வயல் நிலங்களுக்கு வேலி அமைப்பதற்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. இவ்விலை மனுக்கோரலானது வடமாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. கேள்வியை சமர்ப்பிக்க ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் 06.10.2017 முதல் 19.10.2017 வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பதிவுசெய்யப்பட்ட வியாபாரச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரத்தினையும் மீளளிக்கப்படாத தொகையாக 1000 ரூபாவினையும் செலுத்தி-மாவட்டச் செயலகத்திலுள்ள மீள்குடியேற்ற அலகில் தமக்கான கேள்வி-ஆவணங்களினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 20.10.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகத் தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அரசாங்க அதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும். கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

6. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது இடதுபக்கமேல் மூலையில் கேள்வி கோரலுக்கான மூலப்பொருள் தொகுதியின் வகையும், அதன் கேள்வி இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். காலம் தாழ்த்திக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

7. கேள்விகள் திறக்கும்போது கேள்விகளை சமர்ப்பித்த கேள்விதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

8. கேள்விகோரப்பட்ட பொருள்களின் தரம்,பொருள்களின் விநியோகம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 16.10.2017 அன்று மு.ப10.00மணிக்குநடைபெறும்.

**கேள்விகோரலுக்கானபொருள்களின் தொகுதி**

1. Fencing Post
2. PVC Barbed Wire &7" J Hooks & Washer

**நா.வேதநாயகன்**
**அரசாங்கஅதிபர்/மாவட்டச் செயலாளர்,மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

சாட்சியை அச்சுறுத்தியதாக சந்தேகநபருக்கு கட்டுக்காவல்

திருகோணமலை மேல் நீதிமன்றத் துக்குச் சாட்சியமளிப்பதற்காக வந்த பெண்ணை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டார். சிறுமியொருவரை துர்நடத்தைக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட 40 வயதுடைய நபர் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்ற வழக்கு விசாரணைக்குச் சாட்சியமளிக்க வருகை தந்த பெண்ணொருவரை நகர்ப் பகுதியில் வைத்து அச்சுறுத்தியுள்ளார். அது தொடர்பில் அந்தப் பெண் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (5)

**ஆசிரியர் தேவை**

தரம் 8, 9 இல் கல்வி கற்கும் பெண்பிள்ளைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழியில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

**076 807 9161**

# யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

## திருமண பட்டுப் புடவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷன்

**தீபாவளி விசேட தள்ளுபடி**

**15% - 50%**

**இலவசம்** 15,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் வர்ணக்குடை ஒன்று இலவசம்

**இலவசம்** 10,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் கப் ஒன்று இலவசம்



**அனைத்துவிதமான பட்டுச் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்**

| | விலை | கழிவு விலை |
|---|---|---|
| டொப் | 1500/= | 750/= |
| சாரி | 2400/= | 1200/= |
| கொட்டன் சல்வார் | 5000/= | 2500/= |
| கலக்ஷி சல்வார் (New) | 8500/= | 4000/= |
| சல்வார் துணி | 1500/= | 750/= |

1ம் பரிசு குளிர்சாதனப் பெட்டி

2ம் பரிசு தையல் இயந்திரம்

05 ஆறுதல் பரிசுகள்



**5000.00 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்கின்ற அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதிஷ்ட சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு.**

**ஒக்டோபர் 04 - 19 2017**

\# ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவர்கள்



## மருத்துவராவதே எமது இலக்கு

வவுனியாவில் முதலிடம் பெற்ற மாணவர்கள் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.6

எதிர்காலத்தில் மருத்துவராவதே தமது இலக்கு என வவுனியா மாவட்டத்தில் 190 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலுள்ள இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியலாய மாணவியான உதயராசா அவிர்ஷாஜினி மற்றும் மாணவன் ஜெயக்குமார் லெவின் ஆகியோர் தெரிவித்தனர்.

இவ்விருவரும் தமது இந்த வெற்றிக்குக் காரணமான பெற்றோர், ஆசிரியர் மற்றும் அதிபருக்கு நன்றி தெரிவித்தனர். எதிர்காலத்தில் மருத்துவராகி மக்களை நோயிலிருந்து காப்பாற்றுவதே தமது நோக்கம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ய)

## பாடசாலை வகுப்புக்களே வெற்றிக்குக் காரணம்

முல்லை. மாணவி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.6



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவி மகேந்திரன் ஹர்சனா 188 புள்ளிகளைப்பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் எதிர்காலத்தில் மருத்துவராவதே இலக்கு எனக் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் கல்விநிலையங்களுக்குச் செல்லவில்லை என்றும் பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்ட மாலைநேர வகுப்புகளிலேயே கல்விகற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சித்தி பெறுவேன் என நம்பிக்கை இருந்தது. ஆனால் மாவட்டத்தில் முதலிடம் பிடிப்பேன் என எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ய-101-ரி3)

## விஞ்ஞானியாகவேண்டும் என்கிறார் மன்னாரில் முதலிடத்தைப் பிடித்தவர்

மன்னார், ஒக்.6



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் குபேரகுமார் நயோலன் அபிசேக் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானியாக வந்து சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்பதே தனது இலட்சியம் என அவர் தெரிவித்தார். (ய-56)

## கிளி. இந்து வித்தியாலய மாணவனுக்கு முதலாமிடம்

கிளிநொச்சி, ஒக்.6



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியால மாணவன் பாஸ்கரன் பார்த்தீபன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். எதிர்காலத்தில் ஒரு மருத்துவராக வருவதே தனது இலக்கு என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ய)

## திருமலையில் ஸ்ரீசண்முகா மகளிர் கல்லூரிக்கு முதலிடம்

திருமலை, ஒக்.6

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி சந்தியா பார்த்திபன் 189 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

கிண்ணியா மத்திய கல்லூரி மாணவன் அக்மல் அமாத் அகமட் 186 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை 184 புள்ளிகளைப் பெற்று சண்முகா இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் பெற்றுள்ளனர்.

திருகோணமலை கல்விவலயத்தில் இவ்வாண்டு 2100 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் 235 பேர் சித்தியடைந்துள்ளனர்.

கோணேஸ்வரா இந்துக்கல்லூரி 41 மாணவர்களும், சென்மேரிஸ் புனிதசூசையப்பர் கல்லூரியில் 11 மாணவர்களும், உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் 19 மாணவர்களும், சாஹிரா கல்லூரியில் 10 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்



சு.கணேசலிங்கம் தெரிவித்தார். (ய)

## மட்டக்களப்பில் இருவருக்கு முதலிடம்

மட்டக்களப்பு, ஒக்.6





ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்கள் இருவர் முதலிடம் பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி டிலக்சிக்கா வனராஜன் 191 புள்ளிகளையும், ஓட்டமாவடி அரபலி வித்தியாலய மாணவன் நையீம் முகமட் சஜில் என்ற மாணவன் 191 புள்ளிகளையும் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலையிலிருந்து 56 மாணவிகள் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர் என அதிபர் இராஜகுமாரி கனகசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு சிவானந்தா தேசியப் பாடசாலை மாணவன் ஏகலைவன் அட்சரன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 4ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (ய-46)

## அம்பாறை மாவட்ட மாணவி 191 புள்ளிகள் பெற்று முதலிடம்

அம்பாறை, ஒக்.6



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய மாணவி எம்.ஜே.அமாரா ஸஹ்லா 191 புள்ளிகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 7 கல்வி வலயங்களில் இவர் கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (ய)

## முல்லைத்தீவு முன்னேற்றம் 269 மாணவர்கள் சிறப்புச் சித்தி

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தமுறை 269 மாணவர்கள் சித்திபெற்று சாதனை படைத்துள்ளனர்.

முல்லைத்தீவு கல்விவலயத்தில் இருந்து 217 மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து 42 மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய இரு கல்வி வலயங்களைக் கொண்டுள்ளது.

முல்லைத்தீவு வலயத்தில் உள்ள 57 பாடசாலைகளில் 49 பாடசாலைகளிலேயே தரம் 5 வரையான வகுப்புகள் உள்ளன. 49 பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் இந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதில் தமிழ் மொழிமூலம் தோற்றிய மாணவர்களில் 217 மாணவர்களும், சிங்கள மொழியில் தோற்றிய மாணவர்களில் 10 பேரும் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் 791 மாணவர்கள் தோற்றினர். 42 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

இதேநேரம் 2016ஆம் ஆண்டில் முல்லதேத்தீவு வலயத்தில் 49 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 470 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். 29 பாடசாலைகளைச் சேர்ந்த 151 மாணவர்களே சித்திபெற்றனர். துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் 54 பாடசாலையை சேர்ந்த 688 மாணவர்கள் தோற்றினர். 26 மாணவர்கள் மட்டுமே வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்தியடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-101)

## மட்டக்களப்பில் பட்டிப்பளைக்கு சிறப்பு இடம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 49 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். மட்டக்களப்பு மேற்கு கல்விவலயம் பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று ஆகிய கோட்டங்களை உள்ளடக்கியது.

இவ்வலயத்தில் பட்டிப்பளை கோட்டத்துக்குட்பட்ட மாணவர்களே அதிகம் சித்திபெற்றுள்ளனர். பட்டிப்பளை கோட்டத்தில் 32 மாணவர்களும், வவுணதீவு கோட்டத்தில் 14 மாணவர்களும், ஏறாவூர்க் கோட்டத்தில் 3 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ய)

## மன்னார் மாவட்டத்திலும் முன்னேற்றம் 153 மாணவர்களுக்கு சிறப்புப் பெறுபேறு

மன்னார், ஒக்.6

மன்னார் மாவட்டத்தில் இரு கல்வி வலயத்தில் இருந்தும் 153 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 121 மாணவர்களும், மடு கல்வி வலயத்தில் 32 மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர்.

மன்னார் வலயத்தில் உள்ள 88 பாடசாலைகளில் 83 பாடசாலைகளிலேயே தரம் 5 வரையான வகுப்புக்கள் உள்ளன.

83 பாடசாலைகளையும் சேர்ந்த ஆயிரத்து 776 மாணவர்கள் இந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதில் 121 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

இதேபோன்று மடு கல்வி வலயத்தில் 52 பாடசாலைகளில், தரம் 5 வரையுள்ள 39 பாடசாலைகளைச் சேர்ந்த 561 மாணவர்கள் தோற்றினர். 32 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டிச் சித்தி பெற்றுள்ளனர்.

இதேநேரம் 2016ஆம் ஆண்டில் மன்னார் வலயத்தில் 109 மாணவர்களும், மடு வலயத்தில் 17 மாணவர்களுமே சித்திபெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-101)

# தனிநாடாகிறது காட்டலோனியா



மட்ரிட், ஒக். 6

ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து தனிநாடாகச் செல்வது தொடர்பில் காட்டலோனியாவின் இறுதி அறிவிப்பு இன்னும் ஓரிரு தினங்களில் வெளிவரும் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெய்ன் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக காட்டலோனியா திகழ்கிறது. வடகிழக்கு ஸ்பெய்னில் செழிப்பான பகுதி, காட்டலோனியாதான். ஸ்பெய்ன் நாட்டின் மக்கள் தொகையில் 16 சதவீதமானோர் இங்கு வாழ்கிறார்கள். நாட்டின் ஏற்றுமதியில் 25.6 சதவீத பங்களிப்பை இந்த மாகாணம்தான் செய்கிறது. ஸ்பெய்னின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் காட்டலோனியாவின் பங்கு 19 சதவீதம் ஆகும். ஸ்பெய்னுக்கு வருகின்ற அன்னிய நேரடி முதலீட்டில் 20.7 சதவீதம் இந்த மாகாணத்துக்குப் போகிறது. இந்த மாகாணத்தில் கூடுதல் சுயாட்சி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், ஸ்பெய்ன் அரசியல் சட்டம் அதைத் தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. அங்கு கடந்த 5 ஆண்டுகளாக சுய நிர்ணய அதிகாரம் (தனி நாடு) வேண்டும் என்ற குரல்கள் வலுத்துள்ளன.

பிரிந்து போவது தொடர்பான வாக்கெடுப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. பதிவான வாக்குகளில் 90 சதவீதமான வாக்குகள் தனிநாட்டுக்கு ஆதரவாக அமைந்தன. இந்த வாக்கெடுப்புக்கும், வாக்குகளின் எண்ணிக்கையை அறிவித்ததற்கும் ஸ்பெய்ன் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எனினும் காட்டலோனியா, பிரிந்து செல்வது தொடர்பிலான நகர்வுகளை இறுக்கமாக மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் இன்னும் ஓரிரு தினங்களில் இது தொடர்பான இறுதி அறிவிப்பு வெளியிடப்படும் என்று காட்டலோனியா மாநிலத்தின் தல்லவர் பூஜ்டிமோன் தெரிவித்தார். (ம)



## மலைக்கவைத்த மலைப்பாம்பு

ஜகார்த்தா, ஒக். 6

23 அடி நீளமுடைய மலைப்பாம்பு ஒன்றுடன் மனிதரொருவர் போராடி உயிர் தப்பித்த சம்பவம் இந்தோனேசியாவில் நடைபெற்றுள்ளது.

இந்தோனேசியாவைச் சேர்ந்தவர் ரோபேர்ட் நபாபன். தனது வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது, சாலையில் 23 அடி நீள மலைப்பாம்பிடம் சிக்கிக் கொண்டார்.

மலைப்பாம்பு ரொபேர்டைத் தாக்கத் தொடங்கியது. ரொபேர்ட்டும் எதிர்த் தாக்குதலை நிகழ்த்தினார் என்று சொல்லப்படுகிறது. நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பிறகு மலைப்பாம்பு இறந்துவிட்டது.

"அது என் கையைக் கடித்துவிட்டது. மலைப்பாம்புடன் போராடியதும் உயிர் பிழைத்ததும் ஆச்சரியமாக இருக்கிறது. கொஞ்சம் கவனக்குறைவாக இருந்திருந்தால் மலைப்பாம்பின் வயிற்றுக்குள்தான் இருந்திருப்பேன்.

என் வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவத்தை நான் கேள்விப்படவில்லை" என்கிறார் ரொபேர்ட். (ம)






1,
பழ
600


பீஜிங், ஒக்
சுமார் ஆ
தயாரிக்கப்
மதிப்பில்
போயுள்ள
சாங் மன்
பி.960-11
தயாரிக்கப்
ஹொங்கா
ஏலம்விட
யார் என்
அந்த நிறு
இந்தக்
விலையா
நிர்ணயிக்

### 4.5 பி டொல பங்கள கடனா இந்திய

புதுடெல்லி
பங்களாதே
டொலர் க
தம் தெரி
தொடர்பா
திட்டுள்ள
இந்தியநிதி
ஜெட்லிபங்
ணம் மே
வில் அவ
அமைச்சர்
முன்தினம்
இந்தச் சந்
ஷின்மேம்
டொலர் க
பந்தம் கை
ஜெட்லி ம
யோர் முன்
தம் கையெ



பில் இன்னும்
பான இறுதி
று காட்டலோ
பூஜ்டிமோன்
(ம)



அமெரிக்காவின், லொஸ் வெகாஸ் நகரில் உள்ள பிரபல கேளிக்கை விடுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்காக சுமார் 20 ஆயிரம் பேர் திரண்டிருந்தபோது, நபரொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 59 பேர் உயிரிழந்தனர். 515 பேர் காயமடைந்தனர். இந்த அசம்பாவிதத்தை அடுத்து லொஸ் வெகாஸுக்கு நேற்றுச் சென்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். சம்பவம் தொடர்பில் அவர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# போர்டோரிக்கா தீவில் மரியாவுக்கு 34 பேர் சாவு

வொஷிங்டன், ஒக். 6
கரீபியன் தீவுகளில் உள்ள போர்டோரிக்கா தீவில், நேற்றுமுன்தினம் வீசிய 'மரியா' புயலுக்கு 34 பேர் உயிரிழந்தனர்.
அமெரிக்காவின் டெக்சாஸ், புளோரிடா மாகாணங்களைத் தாக்கிய 'மரியா' புயல், கரீபியன் கடலில் உள்ள தீவான போர்டோரிக்காவை நேற்றுமுன்தினம் தாக்கியது. இந்தப் புயலில் சிக்கி 34 பேர் உயிரிழந்தனர்.



இடிபாடுகள் பெருமளவில் ஏற்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



# 1,000 ஆண்டுகள் பழமையான கோப்பை 600 கோடிக்கு ஏலம்

பீஜிங், ஒக். 6
சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் தயாரிக்கப்பட்ட ஒரு சிறிய கோப்பை இலங்கை மதிப்பில் சுமார் 600 கோடி ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.
சாங் மன்னர் ஆட்சிக் காலத்தில் அதாவது கி.பி.960-1127ஆம் ஆண்டுகளில் இந்தக் கோப்பை தயாரிக்கப்பட்டது. இந்தக் கோப்பை ஹொங்காங் கில் சோத்பீ மையத்தில் ஏலம்விடப்பட்டது. இதை வாங்கியவர் யார் என்ற விவரத்தை வெளியிட அந்த நிறுவனம் மறுத்து விட்டது. இந்தக் கோப்பையின் தொடக்க விலையாக சுமார் 150 கோடி ரூபா நிர்ண யிக்கப்பட்டது. (ம)

# 80 நாள்களை எட்டியுள்ளது விவசாயிகள் போராட்டம்



சென்னை, ஒக். 6
பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகளின் போராட்டம் 80 நாள்களை எட்டி தொடர்ந்தும் செல்கிறது.
பருவ மழை பொய்த்ததால், தமிழகத்தில் விளைச்சல் பெரியளவில் இல்லை. இதனால் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும். வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர்ப் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்க தனி வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டம் நேற்றுடன் 80 நாள்களை நிறைவு செய்துள்ளது. (ம)

# 4.5 பில்லியன் டொலர்களை பங்களாதேஷுக்கு கடனாக வழங்குகிறது இந்தியா

புதுடெல்லி, ஒக். 6
பங்களாதேஷுக்கு 4.5 பில்லியன் டொலர் கடன் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ள இந்தியா, அது தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளது.
இந்திய நிதித்துறை அமைச்சர் அருண் ஜெட்லி பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். டாக்காவில் அவர் பங்களாதேஷ் நிதித்துறை அமைச்சர் ஏ.எம்.ஏ.முகித்தை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.
இந்தச் சந்திப்பின்போது, பங்களாதேஷின் மேம்பாட்டிற்காக 4.5 பில்லியன் டொலர் கடன் வழங்கும் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. அருண் ஜெட்லி மற்றும் ஏ.எம்.ஏ.முகித் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. (ம)

பிரமாண்டமான
பெற்றோல், டீசல் மோட்டார் வாகன
ஏல விற்பனை
ஒக்டோபர் 14 ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்ரேசன் றோட், வைரவப்புளியங்குளம்,
வவுனியா
திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பார்வையிடல்
ஒக்டோபர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில்
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
சொக்மன் & சமரவிக்கிரம
D.ads
schokmankandy@sltnet.lk
www.sandslanka.com
schokman@samera1892.com

மாதாந்தம் ரூ. 5,276/- செலுத்துங்கள்
Hero
ஹீரோ டிலக்ஸ் மோட்டார் சைக்கிளை இன்றே ஓட்டிச் செல்லுங்கள்!
HF-Deluxe
100cc



SUPER FUEL EFFICIENCY
செல்ப் ஸ்டார்ட் (சௌகரியம்)
சைட் ஸ்டாண்ட் இன்டிகேட்டர் (பாதுகாப்பு)
கறுப்பு அலோய் வீல்ஸ் (கவர்ச்சி)
ரூ. 214,500/-
Google Play
*நிபந்தனைகள் உண்டு. முன்னறிவித்தலின்றி விலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.
011 5 777 000 நாடளாவிய ரீதியிலுள்ள அபான்ஸ் - ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஏமாற்று வித்தை வேண்டாம்

தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பில்நடந்தநிகழ்வுஒன்றில்உரையாற்றியிருக்கிறார். புதிய அரசமைப்பின் ஊடாகக் கூட்டாட்சி (சமஷ்டி) வழங்கப்படவில்லைஎன்றுதான்சிங்களமக்களுக்குச்சிங்களத்தலைவர்கள் கூறுவார்கள், இதனைத் தமிழர்கள் பூதாகரமாக்கத் தேவையில்லை என்று அந்த உரையில் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, புதிய அரசமைப்புத் தொடர்பாகத் தெற்கின் அரசியல் தலைவர்கள்இன்று தெரிவித்துவரும்கருத்துக்களையும்,நடந்து வரும் முறைமையையும் நியாயப்படுத்தும் விதத்தில் அவரது கருத்து அமைந்துள்ளது. இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சியைத் தமிழர்கள் பொதியச் செய்துவிட்டாலும், அதனைச் சிங்கள மக்களுக்குச் சொல்லாமல், அவர்களை ஏமாற்றி, ஏதோஒருவழியில் புதிய அரசமைப்பைநிறைவேற்றிவிடுவதே தலைவர்களின்இராஜதந்திரம்என்றும்அவர்வழிமொழிந்திருக்கிறார்.

அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்த மறுநாளே கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன, புதிய அரசமைப்புத் தொடர்பான வழிகாட்டல்குழுவின் அறிக்கையில்நாட்டின்தன்மைகுறித்துத் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஒருமித்த நாடு' என்கிற பதம் ஒற்றையாட்சியையே குறிக்கின்றது என்று மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இதே கருத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சிலநாள்களுக்கு முன்னர்அனுராதபுரத்தில்வைத்துத்தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். இன்னும் ஒருபடி மேலே போய், வரப்போவதுஒற்றையாட்சிஅரசமைப்புத்தான்என்பதைஉறுதிப்படுத்தும் வகையில் ஆங்கிலத்தில் அதனை 'யுனிட்டரி ஸ்ரேட் (Unitary state) என்று குறிப்பிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால்,தமிழ்அரசுக்கட்சியின்மூத்ததலைவரும்எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தனது அண்மைய உரைகளில் ஒற்றையாட்சியைக் கைவிடுவதற்கு கொழும்பு அரசு இணங்கியிருப்பது இடைக்கால அறிக்கையில் உள்ளது என்று தெரிவித்து வருகின்றார்.

அவரது கருத்தை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளவும் முடியும். ஏனெனில் தற்போதைய அரசமைப்பில் இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடுஎன்றுதெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது.புதியஅரசமைப்பும்ஒற்றையாட்சியைக்கொண்டதுஎன்றால்அதனைஇப்போது இருப்பதைப் போன்றே விட்டுவிடலாம். அதற்கு ஏன் புதிய பதத்தைப் பயன்படுத்த வேண்டும்? இந்தத் தர்க்க நியாயத்தின்படி நோக்கும்போது,சம்பந்தன்சொல்வதில்உண்மை இருக்கிறது.


ஆனால், எந்தப் பதத்தை மாற்றினாலும், மாற்றுவது குறித்து ஆராய்ந்தாலும் சிங்கள மக்களின் மனங்களிலும், அரசியல் தலைவர்களின் மனங்களிலும் இந்த நாட்டை ஒற்றையாட்சித் தன்மையில் இருந்து மாற்றமுடியாது என்கிற எண்ணம் ஆழப் பதிந்திருக்கும் வரையில், புதிய அரசமைப்பு எப்போதும் ஆபத்துக்குள்ளேயே சிக்கிக்கொண்டிருக்கும் என்பதும் தெளிவு கொள்ளவேண்டிய விடயம்.

அதுவும்போக,சிங்களமக்களின்ஆதரவுடன்,அதாவதுமக்களின் கருத்துக்கணிப்புடன் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும்என்றுசம்பந்தன்மீண்டும்மீண்டும்வலியுறுத்திவரும் நிலையில்,அவர்களைஏமாற்றிஅதனைச்சாதிக்கமுடியும்என்று நினைப்பதுமுட்டாள்த்தனம்.அரசின்தன்மையைஒற்றையாட்சி என்பதிலிருந்து ஒருமித்த நாடு என்று மாற்றுவதன் பின்னணியில்எந்த நோக்கமும் இல்லை என்று நம்பும் அளவுக்குச்சிங்கள மக்கள் ஒன்றும் அடிமுட்டாள்களும் அல்லர்.

எனவேசிங்களத்தலைவர்களின்கருத்துக்கள்சிங்களமக்களைத் திருப்திப்படுத்தும் வெற்று வார்த்தைகள் என்று கருதித் தமிழ்த் தலைமைகள் அசண்டையாக இருந்துவிடலாகாது. அதே போன்று எந்தத் தரப்பாக இருந்தாலும், நல்லதோ கெட்டதோ மக்களைஏமாற்றி எதையும் நிறைவேற்றிவிடலாம் என்று கனவு காண்பதும் ஏமாற்று வேலையே. 'நம்ப நட; நம்பி நடவாதே' என்கிறதமிழ்ப்பழமொழிக்குஏற்பநடப்பதேஇப்போதுதமிழ்த் தலைமைகளுக்கு முக்கியம்.அத்துடன்சிங்களமக்களிடம் உண்மையைஎடுத்துச்சொல்லி,அதற்கானநியாயத்தைப்புரியவைத்து புதிய அரசமைப்பை நிறைவேற்ற முயற்சி எடுப்பதே நிலையான தீர்வுக்கான வழி என்பதையும் தமிழ்த் தலைமைகள் சிங்களத் தலைமைகளிடம் வலியுறுத்தவேண்டும்.

# அரசியல் இலாபத்துக்காக நாடுமுழுவதும் பரவலாக இனவாதக் கருத்துக்கள்

## வடக்கு ஆளுநர் குரே அதிருப்தி



எம்.ஐ.முபாறக்

எவர் செய்தாலும் குற்றம், குற்றம்தான். அதைப் புலிகள் செய்தாலும் குற்றம்தான். படையினர் செய்தாலும் குற்றம்தான் என்கிறார் வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரே. சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலே அவர் வடபகுதி நிலைமை குறித்து விளக்கியிருந்தார். செவ்வியின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கேள்வி:** வடக்கின் தற்போதைய நிலைமை எப்படி உள்ளது?

**பதில்:** 30 வருடகாலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இப்போது நிம்மதியாக உள்ளனர். நிலையான சமாதானத்தை அவர்கள் விரும்புகின்றனர். மீண்டும் போர் ஒன்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில்கவனமாகஉள்ளனர்.

**கே:** ஆனால், வடக்கு அரசியல்வாதிகள் அவ்வாறான நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லையே?

**ப:** 90 வீதமான மக்களின் நிலைப்பாடு வெளியே தெரியவருவதில்லை. ஊடகங்களும் செய்தியின் முக்கியத்துவம் கருதி சில அரசியல்வாதிகள் வெளியிடும் பாரதூரமான செய்திகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றன. அந்த 10 வீதமான நிலைப்பாட்டுடன் 90 வீதமான நிலைப்பாடு ஒத்துப் போவதில்லை.

**கே:** சமாதானத்தை விரும்பும் அந்த மக்களின் நிலைப்பாட்டை நிராகரித்து தமதுநிலைப்பாட்டைத்திணிப்பதற்கு இந்த அரசியல்வாதிகள் முயற்சி செய்கிறார்கள் அல்லவா?

**ப:** நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இது நடக்கிறது. வடக்குக்கு மாத்திரம் இந்தச்செயற்பாட்டை மட்டுப்படுத்த இயலாது. அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபநோக்குடன் இருந்து கருத்து வெளியிடுகின்றனர். இது வடக்கிலும் உண்டு; தெற்கிலும் உண்டு.

### அரசியல் இலாபத்துக்காக தூண்டப்படுகிறது இனவாதம்

**கே:** அந்த வகையில், வடக்கு முதலமைச்சரது செயற்பாடுகள் சமாதானத்துக்கும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவுக்கும் குந்தகம் விளைவிக்கும் ஒன்றல்லவா?

**ப:** வடக்கு என்று தனியாகப் பிரித்துப்பேசுவதற்கு நான் தயாராக இல்லை. வடக்கு ஆளுநராகநான்நியமிக்கப்பட்டிருப்பதுநாட்டைஒன்றிணைத்துச் செயற்பட வைப்பிக்கும் நோக்கத்துடனாகும்.

தெற்கிலும் விக்னேஸ்வரன் போன்றவர்கள் இருப்பதால், இது பொதுவாகப் பேசப்பட வேண்டிய விடயம். இந்த விடயத்தில் விக்கியை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடியாது. விக்கியின் கூற்றுப் போன்றே, தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் சிலரது கூற்றுக்களும் ஆபத்தானவை. அவர்கள் தமது அரசியல் பயணத்துக்காக இனவாதம், மதவாதம் போன்றவற்றைத் தூண்டுகின்றனர். இது முழு நாட்டிலும் காணப்படுகிறது.

**கே:** விக்கி தெற்கில் வந்து மகாநாயக்க தேரர்களை சந்தித்து கூட்டாட்சித் தீர்வைக் கேட்கின்றார். இதை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**ப:** வடக்குகிழக்கை இணைக்குமாறும், கூட்டாட்சி முறையிலான தீர்வை வழங்குமாறும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்.

இதை நாம் கணக்கில் எடுக்கத் தேவை இல்லை. வடக்குத் தமிழர்கள் நாட்டை பிளவுபடுத்தவோ, மீண்டும் ஒரு போருக்குச் செல்லவோ தயாரில்லை. தமிழ் அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடுவதற்கு தமிழர்கள் ஒருபோதும் தயாரில்லை. ஒரு சிலர் மாத்திரமே நாட்டுக்கு விரோதமான சிந்தனையில் மூழ்கியுள்ளனர். விக்னேஸ்வரன் போன்றவர்களின் கருத்துக்கள் பன்னாட்டுத்தரப்புகளுக்குச் செல்வதால், அவைமுக்கியத்துவம் பெற்றாலும், அந்தக் கருத்துநிலைப்பாட்டை முறியடிப்பதில் நாம் பலவீனமாக இருக்கின்றோம்.

> நாங்கள் தமிழர்களின் உள்ளங்களை வெற்றி கொள்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விரோதமான கோட்பாடுகளைத் தோற்கடிக்க முடியும்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடக்குக்கு வந்து என்னைச் சந்திக்கும் போதெல்லாம் நான் உண்மையான

நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியே வருகின்றேன்.
நாங்கள் தமிழர்களின் உள்ளங்களை வெற்றிகொள்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை முழுமையாகத்தீர்க்கவேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விரோதமான கோட்பாடுகளைத் தோற்கடிக்க முடியும். இதை விட்டுவிட்டு அப்பாவித் தமிழர்களைக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லை

கே: புலிகள் பெரிய அளவுக்கு வளர்வதற்கு முன்னர், இவ்வாறான ஒரு குழு தோன்றியுள்ளது என்று அப்போது புலனாய்வுப் பிரிவினர் கூறினர். அப்போதைய ஆட்சியாளர்கள் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. அதன் விளைவு பெரும் போராக மாறி நாட்டை அழித்தது. அதுபோலவே இப்போதும் நாம் பாராமுகமாக இருக்க முடியுமா?

ப: போருக்கு முன்னர் இது போன்ற அனுபவம் எமது அரசியல்வாதிகளுக்கு இருக்கவில்லை. இந்த அனுபவம் இப்போது அரசியல்வாதிகளுக்கும் ப்டையினருக்கும் அதிகமாக உண்டு.

கே: நீங்கள் சொல்கின்ற அந்த 90 வீதமான மக்களின் நிலைப்பாட்டை மாற்றி, ஆபத்தான நிலைப்பாட்டுக்கு விக்னேஸ்வரனை அழைத்துச் செல்வதை நீங்கள் உணரவில்லையா?

ப: நாங்கள் விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். ஆனால், சிறிய சிறிய விடயங்களையெல்லாம் பெரிதாக்கி நாம் குழம்பிக் கொண்டால் நுளம்பை சுத்தியலால் அடித்ததுபோல் அமைந்துவிடும். அளவுக்கு ஏற்பவே நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, சரியான தகவல்களைத் திரட்டி அதற்கு ஏற்பவே செயற்பட வேண்டும்.
தெற்கில் குற்றச் செயல் ஒன்று இடம்பெற்றால் அதை ஒரு சாதாரண குற்றச் செயலாகவே பார்க்கிறோம். ஆனால், அதுவே வடக்கில் இடம்பெற்றால் அதனை இனவாத செய்ற்பாடாகவும், பயங்கரவாதச் செயற்பாடாகவும் நாம் பார்க்கின்றோம். அதனை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.
விக்கியின் பிரிவினைவாதக் கொள்கையை முறியடிப்பதற்கான நடவடிக்கையை அரசு முன்னெடுத்துச் செல்கிறது. தமிழர்களுடனும் பன்னாட்டுச் சமூகத்துடனும் நெருங்கிய உறவைப் பேணுவதன்மூலம் அரசு இதை வெற்றிகரமாகச் செய்கிறது.
மீண்டும் போர் ஒன்று இடம்பெறாமல் இருக்க வேண்டுமென்றால் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான நட்பு பலப்படுத்தப்பட வேண்டும்.

**மக்களின் இடங்களில் இராணுவம் இருத்தலாகாது**

கே: அரசியல்வாதிகள் கூறும் காணிமற்றும்பொலிஸ் அதிகாரம், இராணுவ முகாம்கள் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வடக்கு மக்களின் நிலைப்பாடா?

ப: மக்கள் இராணுவத்தினரை எதிர்க்கவில்லை. ஆனால், அவர்களின் இடங்களில் இராணுவம் இருப்பது அவர்களுக்கு வேதனையைக் கொடுக்கின்றது. மனிதன் என்ற வகையில் ஒருவரின் சொத்தை மற்றொருவர் கையகப்படுத்தியிருந்தால் அத்தகைய வேதனை ஏற்படவே செய்யும்.
அந்த வேதனை தமது இடத்தை மீளக் கைப்பற்ற வேண்டும் என்ற வேதனை மட்டும்தான். ஆனால், படையினரை அங்கிருந்து விரட்ட வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இல்லை.
கல்வி, வைத்தியம் மற்றும் டெங்கு ஒழிப்பு என எல்லா விடயங்களிலும் படையினர் பங்கெடுத்து வருகின்றனர். வடக்கில் ஏதாவது ஒரு வேலைத்திட்டம் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்றால் அதற்கு படையினரின் உதவி தேவை என்ற நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.
கோவில் திருவிழாக்களின்போது படையினர் தேர் இழுக்கின்றனர். இதை நான் பன்னாட்டு சமூகத்துக்குத் தெரியப்படுத்தி வருகின்றேன். இதனால்தான் இந்த நாட்டுக்கு எதிரான பன்னாட்டு அழுத்தங்கள் குறைந்துள்ளன.
மின்சாரக் கதிரை பற்றியும் போர்க்குற்ற நீதிமன்றம் பற்றியும் கூறப்பட்டு வருகின்றது. இவை பற்றி தேவையற்ற அச்சம் வெளியிடப்படுகிறது. வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் தமிழர்கள் நல்ல செய்தியையே வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

**பொன்சேகாவுக்குக் கண்டனம்**

கே: முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியாவுக்கு எதிராக போர்க்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக சாட்சியமளிக்கப் போவதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார். பொன்சேகாவின் அந்த நிலைப்பாடு சரியா?

ப: தலைவர்கள் பேசும்போது நிதானமாகப் பேச வேண்டும். சில நேரங்களில் உண்மை இருந்தாலும், அந்த உண்மையைச் சொல்லப் போய் அது பிரிவினைவாதிகளுக்கு நன்மையளிக்குமாக இருந்தால் அந்த உண்மையை மறைப்பதேமேல்.
பொன்சேகாவின் கூற்றை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர் இராணுவத் தளபதியாக இருக்கும்போது தான் ஜகத் குற்றமிழைத்தார் என்று பொன்சேகா சொல்கிறார். அந்தக் குற்றம் நிகழாமல் பொன்சேகா தடுத்திருக்க வேண்டும். குற்றம் நிகழவிட்டுவிட்டு ஏன் பார்த்துக்கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டு பொன்சேகாவுக்கு எதிராக முன்வைக்கப்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு.
உதாரணமாக, மக்களுக்குப் புலிகளால் ஏற்படுத்தப்பட்ட அநியாயங்கள் தொடர்பில் விக்னேஸ்வரன் பேசுவதில்லை. படையினர் மீதே குற்றஞ் சாட்டுகின்றார்.
தவறிழைக்காத இராணுவம் உலகில் எங்குமில்லை. போரின்போது சில தவறுகள் நடக்கவே செய்யும்.
எவர் செய்தாலும் குற்றம் குற்றம்தான். அதைப் புலிகள் செய்தாலும் குற்றம்தான். படையினர் செய்தாலும் குற்றம்தான். விக்கி நியாயமானவர் என்றால் படையினரின் குற்றங்களைச் சுட்டிக் காட்டுவதுபோல் புலிகளின் தவறையும் சுட்டிக் காட்ட வேண்டும். அதேபோல், ஏனைய ஆயுதக் குழுக்கள் நிகழ்த்திய குற்றங்களையும் அவர் கூற வேண்டும். புலிகளின் குற்றங்கள் தேடப்படும் அதேநேரம் படையினரின் குற்றங்களும் தேடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தெற்கு மக்கள் எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் வடக்குக் குற்றம், தெற்குக் குற்றம் என்றும், படையினரின் குற்றம், புலிகளின் குற்றம் என்றும் பிரித்து பக்கச்சார்புடன் நடவடிக்கை எடுக்கப்போனால், ஒருபோதும் பிரச்சினைகள் தீரா. எவர் செய்திருந்தாலும் குற்றம் குற்றமே என்ற நிலைப்பாட்டுக்கு நாம் எல்லோரும் வந்தாலே இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

**படையினர் திட்டமிட்டு மக்களைத் தாக்குவதில்லை**

படையினரை நோக்கி எதிரிகள் தாக்குதல் நடத்தும்போது படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தினால் அநியாயமாக அப்பாவி மக்கள் சிக்கத்தான் செய்வார்கள். உலகில் இடம்பெறும் சகல கெரில்லா தாக்குதல்களிலும் இது இடம்பெறவே செய்கிறது. அந்த வேளையில் மக்கள் பேரவலம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. போர் ஒன்று இடம்பெற்றால் மக்கள் பேரவலம் இடம்பெற்றே ஆகும். படையினர் திட்டமிட்டு இதைச் செய்வதில்லை. எதிரிகளைத் தேடும்போது, அவர்கள்மீது தாக்குதல் நடக்கும்போது பேரவலம் நிகழ்ந்து விடுகிறது.



கே: இப்போது வடக்கில் ஆவாக் குழுவின் செயற்பாடுகள் எப்படி உள்ளன?

ப: மீண்டும் புலிகள் தலை தூக்குவதற்கான முயற்சி தான் ஆவாக் குழுவின் தோற்றம் என்று தெற்கில் கருதப்படுகிறது. அதற்கு நியாயமான காரணமும் உண்டு.
வடக்கில் எந்தவொரு சம்பவம் இடம்பெற்றாலும் மீண்டும் புலிகள் வந்துவிட்டார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆவாக் குழு புலிகளுடன் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. வடக்கில் வேலையின்மைதான் பெரிய பிரச்சினை. எந்தவொரு தொழிற்சாலையும் கிடையாது. மக்கள் வாழ்வதற்கு வழியில்லை. இதனால் படித்த இளைஞர்கள் தீய செயலில் ஈடுபடுகின்றனர்.
வெளிநாடுகளிலிருந்த கிடைக்கும் பணத்தைக் கைக்கொண்டு மது மற்றும் போதைப்பொருள் பாவனையில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அடிதடியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு உருவானதுதான் ஆவா குழு. ஆனால், அவர்கள் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் அல்லர். இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது அரசை கவிழ்ப்பதற்காக உருவாக்கப்பட்ட குழு அல்ல. அதற்கான பலமும் அவர்களிடம் இல்லை - என்றார்.

## ஆசிரியருக்கான கடிதம்

### அகிம்சையும் வேடிக்கையும்!

மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்ரோபர் 2ஆம் திகதியை உலக அகிம்சை தினமாக யாழ்ப்பாணத்திலும் கடைப்பிடித்தார்கள் என்றொரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். அதனை, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து இங்குள்ள சில அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தனவாம். செய்தியைப் பார்த்தபோது ஒருபுறம் சிரிப்பு வந்தாலும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது. காந்தி அகிம்சாவாதி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அகிம்சையை ஓர் ஆயுதமாக, அற்புதமாகப் பயன்படுத்திய போர் வல்லாளன் அவர் என்பதிலும் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அவரது பிறந்த தினத்தை அகிம்சை தினமாக உலகம் கடைப்பிடிப்பதிலும் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், அந்த அகிம்சைத் தினத்தை கடைப்பிடிக்கவும் ஊக்குவிக்கவும் இந்தியாவின் நவீன அரசுகள் தகுதியற்றவை.
ஆட்சியாளர்கள் தகுதியற்றவர்கள் என்பதுதான் எனது கருத்து.
தியாகி திலீபனைப் பட்டினி கிடந்து சாகவிட்ட அன்றே இந்தியா அகிம்சையையும் அதன் தந்தையான காந்தியையும் கொன்று புதைத்துவிட்டது. அதன் பின்னர் அவரது பிறந்த தினத்தை அகிம்சைத் தினமாக, அதுவும் ஈழத் தமிழ் மண்ணில் ஊக்குவிக்க இந்திய அரசுசார், நிறுவனங்கள் எதற்கும் அருகதை கிடையாது. இதில் மற்றொரு வேடிக்கை என்னவென்றால் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகளின் பக்கம் எட்டியே பார்க்காதவர்கள்கூட அகிம்சைத் தினத்தை கடைப்பிடிக்கிறோம் என்று காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வில் பங்கேற்றதைப் பார்ப்பது தான். சிலரது போக்கைப் பார்த்தால் அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

*பசுபதி நாயகம், சில்லாலை*

# சுதந்திரமான கற்பித்தலுக்கு வலுவூட்டும் ஆசிரியராக மிளிர்வோம்



> ஆசிரியத்துவம் என்பது மனிதத்துவம் மிக்க செயன்முறை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமது முன்மாதிரியான நடத்தைக் கோலங்களின் வழியே மாணவர்களிடத்திலும் நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். பாடசாலைக்கு வெளியிலும் மாணவனைக் கற்கத் தூண்டுபவராகத் திகழ வேண்டும். இதன் மூலம் உலகு பற்றிய மேலதிக அறிவினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துபவராகவும் ஆசிரியர்கள் செயற்படுவர். இத்தகைய ஆசிரியர்களே இன்றைய காலத்தின் தேவையாக வேண்டப்படுகின்றனர்.

நடேசு தயாளன்

காலஓட்டத்தில் நல்லிணக்கமாகி வளர்ச்சி கண்டுள்ள தகவல் தொழில்நுட்ப யுகமானது புதிய சவால்களையும் வினாக்களையும் அறிவு சார்நிலையில் குறிப்பாக, கல்வியின் அடிப்படைக் கட்டுமானங்களை காத்திரமாக ஊட்டம் செய்கின்ற பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ளன. தேசத்தின் பண்புத்தரம், அரசியல், சமூக, பொருளாதாரம் என்பவற்றின் எதிர்கால நிலை என்பது, சிறப்புற்றிருக்கக் கூடிய எதிர்கால சமூகத்திலேயே தங்கியுள்ளமை அவதானத்துக்குரியது. தகவல்களைத் திரட்டுதல், அவற்றைக் கையாளுதல், தனித்துவமானதும் சுயாதீனமானதுமான முடிவுகளை அடைதல் என்பவற்றோடு அதனை ஏனையோரிடையே பரம்பலடையச் செய்வதும் இன்று அவசியமான தேவைப்பாடாக உள்ளது.

**அபிவிருத்திக் காப்பரண்கள்**

ஆசிரியர்கள் தேசத்தின் அபிவிருத்திக் காப்பரண்கள். மாணவர்களிடையே இவர்கள் பொருத்தமுற வரையறுத்துக்கொள்கின்ற ஊடாட்டமும், பெற்றுக்கொடுக்கின்ற அறிவுத் திறனும் உயர் அடைவு நிலை நோக்கியதாய் நாட்டினையும் சமூகத்தினையும் இட்டுச்செல்வதாக அமைந்திருக்கும்.

பாடசாலையிலுள்ள வளங்களில் மிகவும் உயர்வான நிலையிலுள்ள வளமாகவும் சிறப்பியல்புகளைக் கொண்ட வளமாகவும் ஆசிரியர் வளம் திகழ்கிறது. ஆசிரியர் தனது திறன் வலுவூட்டல் ஊடே மாணவரை வழி நடத்திச் செல்ல வேண்டும். இதன் மூலம் சமூகத்தின் அறிவு சார் கூட்டிணைவை உயர் அடைவு மட்டம் நோக்கியதாய் முன்னகர்த்திச் செல்பவர்களாக அவர்கள் மாற்றமுறுகின்றனர். இத்தகைய ஆசிரியர்களுக்கு தொழில் அனுமதிப் பத்திரம், தொழில் உயர்வுக்கான வாய்ப்புகள், உயர் கொடுப்பனவுகள் மற்றும் பொருத்தமான வேலை நிலமைகள் என்பன கிடைக்கப் பெறுதல் அவசியமானதாகின்றது.

ஆசிரியரானவர் நாளாந்தம் புதுப்புது அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறார். இளைய சமூகத்தினருடன் இணைந்து கடமையாற்றும் வாய்ப்புடையவராகவும், ஆக்கமலர்ச்சிச் சிந்தனைக்கான வாய்ப்புடையவராகவும், தனக்கேயுரித்தான பாணியில் பாட விடயங்களை முன்வைக்கக் கூடியவராகவும் திகழும் ஆசிரியர்கள் சமூக அதிர்வுகளைச் சீர்செய்யக் கூடியவர்களாக விளங்குகின்ற னர். இவ்விதம் ஆசிரியத்துவம் எனும் மகத்துவப் பணி ஏனைய தொழில்களிலும் பார்க்க மேலானதாக விளங்குகிறது.

**ஆசிரியர்களின் பணி**

இளைய சமுதாயம் விளைதிறனுடன் செயற்பட வேண்டுமெனில் உயர்ந்தளவிலான கல்விசார் அடைவுகளையும், தொழில்நுட்பத் திறன்களையும், தகவல்களைச் செயற்பாட்டுக்கு உட்படுத்தக் கூடிய திறன்களையும் கொண்டவர்களாக விளங்க வேண்டும். போட்டித் தன்மை கொண்ட வேலை உலகில் நுழையவுள்ள மாணவன் தான்சார்ந்த குழுவினருடன் இணையும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் என்பவற்றினைக் கொண்டவனாக விளங்க வேண்டும். இதன் அடிப்படையிலே, பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் வலுவான கற்றல் கற்பித்தல் வடிவங்களை சமூகத்துள் ஊடு கடத்தும் இயல்பு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூகத்தின் மேல் நோக்கிய அசைவுக்கு இந்த விடயங்கள் முதன்மையான காரண காரிய செயலாற்றுகைகளாக விளங்குகின்றன.


கற்றலுக்கான விருப்பை உருவாக்குதல், வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன தொடர்பில் இன்றைய ஆசிரியர்களது கவனம் மேன்மையுற வேண்டும். வெளியீட்டுத் திறன் கொண்ட மாணவர் சமூகமொன்று உருவாக்கப்படுதல் இன்றைய காலத்தின் அவசியத் தேவைப்பாடாக மாறியுள்ளது. சமூகத்தின் அங்கத்தவராக வாழத் தலைப்படும் மாணவனை ஆசிரியர்கள் பல்வேறு ஆளுமைப் பண்புடையவனாக வளர்த்துவிட வேண்டும். மாணவன் தனது அபிலாசைகளையும், சமூகத்தின் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய திறனை ஆசிரியர் போதிக்க வேண்டும். விமர்சனப் பாங்கான முற்போக்கான சிந்தனைத் திறனுடையவனாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் மற்றும் பரந்தளவிலான தொடர்பாடல் திறன் என்பவற்றினை உடையவனாகவும் மாணவனொருவனை மாற்றமுறச் செய்யும் பொறுப்பு ஆசிரியருக்குரியதாகும்.

**ஆசிரியர்கள் கொள்ள வேண்டிய திறன்**

அதேவேளை உலகளாவிய செயன்முறைகளுள் பங்கு கொள்ளும் திறன் உடைய சமூக உருவாக்கத்துக்கான மாணவனிடம் விமர்சனப் பாங்கு, சுயதேடல் திறன் என்பன மேலோங்க வழி சமைக்கக் கூடிய ஆசிரியர்களின் தேவைப்பாடும் இன்றைய கால நகர்வில் அவதானத்துக்குரியது. இதற்காக ஆசிரியரானவர் உயர்ந்தளவிலான தொடர்பாடல் திறன், இணைய வழிமூலமான கற்பித்தல் திறன், வீடியோ மாநாடுகளை நடத்தும் திறன், கலாசார பரிமாற்றங்களை ஏற்படுத்தும் திறன் என்பவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அவற்றின் ஊடாக மாணவர்களை உலகளாவிய ரீதியில் கற்றலுக்கு தொடர்புடையவர்களாக மாற்றும் திறனுடையவராகவும் திகழ வேண்டும். இதனூடாக பாடசாலைக்கு அப்பாலும் மாணவன் உலகத்தோடு தொடர்புபட்டு கற்றலில் ஈடுபடமுடியும்.

பாடசாலை ஆசிரியர்கள் தூரநோக்குடன் கூடிய சமூக நீதியைப் பின்பற்றுவராகவும், வலுமிக்க கற்றல் கோட்பாடுகளையும் ஆய்வுமுடிவுகளையும்பின்பற்றுபவராகவும், நீடித்து நிலைத்திருக்கும் கல்விக்கு உதவி புரிபவராகவும், பாட அறிவு, விமர்சன ரீதியான சிந்தனைப் பிரதிபலிப்பு உத்தி மற்றும் பொருத்தமான பின்னூட்டல்களை வழங்கும் இயலுமை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

மாற்றத்துக்கான ஆசிரியரது இயலுமையானது தொழிலுலகில் நுழையும் மாணவரது செயற்றிறனுக்கு பயிற்சியளிக்கும் களமாக விளங்க வேண்டியது அவசியம். நேர முகாமைத்துவம், செலவு நன்மைக் கோட்பாட்டு அணுகுமுறைகள் என்பன தொடர்பில் தெளிவான அறிவினை வழங்கும் வண்ணம் தனது செயன்முறைகளைத் திட்டமிடுதல் வேண்டும்.



**ஆசிரியப் பணிக்கு நிர்வாகக் கட்டமைப்புகளின் பங்களிப்பு**

மாற்றத்துக்கான ஆசிரியரது செயற்பாட்டு நிலைக்கு கல்வி நிர்வாகக் கட்டமைப்புகளின் ஆக்க பூர்வமான பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. தனித்து சுற்று நிரூபங்கள், மேலாதிக்க நிலைகள் என்பவற்றில் இருந்து விடுபட்டு ஆசிரியர்களது இயலுமைகள், கற்றல் கற்பித்தலுக்கான களநிலமைகள், நிகழ்வுக்கான களநிலமைகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியரைப் புறமொதுக்குதல், பக்கச்சார்பான மதிப்பீடுகளையும் ஒப்பீடுகளையும் மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட நிலைகளைக் கொண்ட கல்விக் கட்டமைப்பானது காணப்படின் அதனை விமர்ச னப்பாங்கில் நோக்குவது தொடர்பில் ஆசிரியர்கள் தமது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி அநீதிகள். இழைக்கப்படும் தவறுகள் தொடர்பில் நியாயபூர்வமான வழியில் குரல் எழுப்பக் கூடிய தனித்துவ நிலையையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக கடமைகளைச் சரிவர மேற்கொள்கின்ற ஆசிரியராக மாற்றங்கொள்ள வேண்டும். அது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். கல்வி நிர்வாகக் கட்டமைப்பானது தூரநோக்கற்ற நிலையிலும் சந்தர்ப்பத்துக்கேற்ற நிலையில் தனது செயலொழுங்குகளை மாற்றியமைப்பதும் அதற்கான காரணங்கள் கற்பிப்பதும், தமக்குரிய வகை கூறல் பங்கினை அதிபர் ஆசிரியர்களிடையே திசைமாற்றுவதும், ஆசிரியத்துவத்தின் செழிப்பு நிலைக்குத் தடையாகவுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கவோர் விடயமாக மாறியுள்ளது.

ஆசிரியரானவர் தன்னை வளப்படுத்தும் அதேவேளை சமூகத்தினை வளப்படுத்துபவராகவும் விளங்குதல் வேண்டும். துரதிர்ஸ்டவசமாக ஒருசில ஆசிரியர்களிடையே காணப்படுகின்ற சுயநல முனைப்பானது அர்ப்பணிப்புடன் கல்விச் சேவையாற்றுகின்ற பெரும்பாலான ஆசிரியர்களது பணியையும் சமூக விமர்சனத்துக்குள்ளாக்குவதாய் அமைந்துவிடுகின்றன. இந்தநிலையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமெனில் ஆசிரியர்கள் மனச்சாட்சியுடன் கூடிய நேர் சிந்தனையும், நேர்மனப்பாங்கும் கொண்டவர்களாக விளங்க வேண்டும். சிறப்பான செயலாற்றல் மிக்க ஆசிரியரே சிறந்த அதிபராகத் திகழமுடியும். சிறந்த அதிபராலேயே சிறந்த கல்வி நிர்வாகியாக விளங்க முடியும். சிறப்பான செயலாற்றுகையற்ற ஒருவராலும் இத்தகைய நிலைகளை அடைந்து கொள்ள முடியும். எனினும் கல்வித்துறை உயர்வுக்கான பங்காற்றல் சிறப்பாக இருக்க முடியாது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தமது செயல்களுக்கு வகை கூறக் கூடிய ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகளாலேயே ஆசிரியத்துவம் புனிதமடையும்.

**ஆசிரியர் வகிபாகம்**

ஆசிரியரானவர் வெளிவாரியாக பிரே ரிப்புக்களை முன்வைக்க முடியும் ஏனினும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இயங்கும் ஆசிரியராலேயே அதனைப் பொருள் கொள்ள முடியும். ஆசிரியரது வகிபாகமென்பது வரையறையற்றது. சில தெரிந்தெடுத்த விடயங்களைக் கடத்துவது என்பதற்கு அப்பால் கற்றலுக்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பவராக விளங்க வேண்டியது அவசியம். சிறந்த ஆசிரியரே குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாகத் தன்னை மாற்ற முடியும். அத்தோடு மாணவனது அறிவு நிலைக்கு ஏற்பவும் இறங்கிவர முடியும்.

சிறந்த ஆசிரியத்துவமானது பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் நிலமைகளில் பொருத்தமான ஆசிரியர் வகிபாகத்தினை வழங்கக்கூடிய மனிதனை உருவாக்குவதில் கவனத்தினைச் செலுத்துவதாக இருக்க வேண்டும்.

சிறந்த ஆசிரியரிடத்தில், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவனது பலம் பலவீனம் தொடர்பிலான தெளிவு இருக்கும். பிள்ளைகளை வகுப்பறை நிலமைகளுக்கு இணைக்கும் வகையிலான கற்பித்தல் திட்டம் ஒன்று காணப்படும். மாணவர்கள் வினா எழுப்பும் இயல்பு, மாணவர்கள் கொள்ளும் அசைவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு பாடத்தினை மாற்றி அமைத்து நகர்த்தும் திறன் காணப்படும். மாணவர்களிடத்தே நம்பகத் தன்மையையும், ஆற்றல் திறத்தினையும் வளர்ப்பதனூடாக அவர்களை வழிப்படுத்துவதோடு எதிர்பார்க்கைகளின் ஏமாற்றத்தினைப் புறந்தள்ளி வைக்கப் பழக்குவதும் ஆசிரியரது பணியாகவே அமைவு பெற்றுள்ளது.

**வேண்டப்படும் பணி**

உயர்நிலை கொண்ட ஆசிரியரிடம் பிள்ளைகள் தொடர்பில் பரிவுணர்வு காணப்படும். பெற்றோர், சகபாடிகளிடமும் நல்லுறவு நிலையினைப் பேணவும் மற்றும் சமூகச் சூழலிலே உயர்வான மாற்றங்களைக் காணவும் விரும்பின் பாடசாலைகளிலும் வகுப்பறையிலும் நல்ல மாற்றங்கள் இடம் பெறுதல் அவசியம்.

ஆக, ஆசிரியத்துவம் என்பது மனிதத்துவம் மிக்க செயன்முறை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமது முன்மாதிரியான நடத்தைக் கோலங்களின் வழியே மாணவர்களிடத்திலும் நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். பாடசாலைக்கு வெளியிலும் மாணவனைக் கற்கத் தூண்டுபவராக திகழ வேண்டும். இதன் மூலம் உலகு பற்றிய மேலதிக அறிவினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துபவராகவும் ஆசிரியர்கள் செயற்படுவர். இத்தகைய ஆசிரியர்களே இன்றைய காலத்தின் தேவையாக வேண்டப்படுகின்றனர்.

# சங்கடங்கள் போக்கும் சக்கரத்தாழ்வார் வழிபாடு

இரா. நிஷாந்தன்

காத்தல் கடவுளாகிய திருமாலின் கையில் சுதர்சனம் எனும் பெயருடைய ஓர் சக்கரம் காணப்படுகின்றது. ஆயிரம் சூரியன்களின் ஒளி பொருந்திய வலிமை உடையதாக அந்தச் சுதர்சனச் சக்கரம் விளங்குகிறது. எம்பெருமான் திருமால் கொண்டுள்ள சக்தியின் பிரதி விம்பமாக அதே சக்தியை சுதர்சனமும் கொண்டுள்ளது என்பர். பகவான் திருக்கரத்தில் பல ஆயுதங்கள் இருப்பினும் சுதர்சன சக்கரமே முதன்மையான ஆயுதமாகத் திகழ்கிறது. இதன் காரணம் கொண்டே பகவான் திருமால் சக்கரத்தாழ்வார் எனும் நாமம் கொண்டு அழைக்கப்படுகின்றார்.

**சுதர்சனச் சக்கரத்தின் மகிமைகள்**

சுதர்சனச் சக்கரம் கொண்டுள்ள வலிமை, மகத்துவம் வாய்ந்தது. எத்தகு தடைகளையும் தாண்டி எங்கும் சென்று திரும்பும் வல்லமை கொண்டது. வேகமும், விவேகமும் நிரம்பப் பெற்றதாக பகவானின் காத்தல் தொழில் புரிதலிலும், அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதிலும் பெரும் உதவி புரிவது இச் சுதர்சனச் சக்கரமே.

**யானைக்கு அபயமளித்தல்**

இத்தகைய சுதர்சனச் சக்கரத்தின் மகிமைகள் எண்ணிலடங்காதவை. ஒரு முறை கஜேந்திரன் எனும் யானை நீர் நிலை ஒன்றில் முதலையின் வாயுள் அகப்பட்டுக் கொண்டது. அதன் பிடியில் இருந்து விடுபட முடியாது அந்தரித்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே யானை, "ஆதி மூலமே சரணம், நாராயணா சரணம்" என அபயக் குரல் எழுப்பியது. யானையின் குரல் கேட்ட மாத்திரத்தில் நாராயணன் யானையைக் காப்பாற்ற அருள்கூர்ந்தார். அவ்விடம் வருகை தந்து தன் கையில் உள்ள சுதர்சனத்தை நோக்கினார். அக்கணமே சுதர்சனச் சக்கரம் சுற்றிச் சுழன்று சென்று முதலையைப் பிளந்து அதன் பிடியில் இருந்து யானையை விடுவித்தது.

**சிசுபாலன் வதம்**

இதேபோன்று சிசுபாலனுக்கு நிகழ்ந்த மரணத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். தனது மரணம் கிருஸ்ணர் கரங்களால் தான் நிகழும் என்பதை அறிந்திருந்தும் சிசுபாலன் கிருஸ்ணரை எப்போதுமே பழித்துரைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒரு முறை தருமர் நடத்திய யாகத்தில் கிருஸ்ணருக்கு முதல் மரியாதை வழங்கப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாத சிசுபாலன் அவரைப் பலவாறாக பழி கூறி இகழ்ந்தான். சிசுபாலனின் தாயாருக்கு கிருஸ்ணர் வழங்கிய வரமருளலின் பிரகாரம் அவன் நூறு தவறைத்தாண்டி அடுத்த தவறு செய்ய முற்பட்டதன் காரணமாக பகவானின் கோபத்திற்கு ஆளானான். அவரது கரத்தில் இருந்து சுதர்சனச் சக்கரம் விரைந்து சென்று சிசுபாலன் சிரசைக் கொய்து திரும்பியது என்பதும் வரலாறு.

**ஜயத்ரனை மாய்த்தல்**

மற்றுமொரு சந்தர்ப்பத்திலே மகாபாரத யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அர்ச்சுனன் தன் மகன் அபிமன்யுவின் மரணத்துக்குக் காரணமாக இருந்த ஜயத்ரனை மறுநாள் சூரியன் மறைவதற்கு முன் கொல்வேன் எனவும், அவ்வாறு செய்யாது விடின் தான் அக்னியில் பிரவேசிப்பேன் எனவும் அர்ச்சுனன் சபதம் செய்கிறான். மறுநாள் பொழுது புலர்கிறது ஜயத்ரனைக் கௌரவர்கள் ஒன்று சேர்ந்து பாதுகாத்து அவனைக் காப்பாற்ற முற்பட்டனர். அப்போது பகவான் கிருஸ்ணர் கையில் இருந்த சுதர்சனச் சக்கரம் மேலெழுந்து சூரியனை முழுமையாக மறைத்துக் கொண்டது. சூரியன் உண்மையில் மறைந்துவிட்டதாகக் கருதிய ஜயத்ரன் அர்ச்சுனன் முன் தோன்றவே கண்ணபிரான் சுதர்சனச் சக்கரத்தை விலக்கினார். அப்போது சூரியன் மறையாமல் இருந்தது. அர்ச்சுனன் ஜயத்ரனைக் கொன்று தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

**அம்பரீசனைக் காத்து இரட்சித்தல்**

அம்பரீசன் எனும் பெயருடைய மன்னன் விஸ்ணுவின் தீவிர பக்தனாகத் திகழ்ந்தான். ஏகாதசி விரதத்தை முறையாக அனுஸ்டித்து மறுநாள் காலையில் துவாதசியில் நல்ல நேரத்தில் விரதத்தை முடித்துக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். ஒருமுறை துருவாச முனிவர் அம்பரீசன் இடத்திற்கு வருகை தந்தார். தன்னை அவமதித்து ஏகாதசி விரதத்தை முடித்து விட்டான் என்பதை அறிந்துகொண்டு மன்னனைக் கொல்ல ஓர் பூதத்தை ஏவினார். அப்போது மன்னன் திருமாலை அழைத்து தன் குறையை முறையிட்டு அபயம் கோரினான். பகவான் கிருபையால் சுதர்சனச் சக்கரம்






அங்கு தோன்றி அந்தப் பூதத்தை கொன்றது. அதுமட்டுமன்றி துருவாச முனிவரையும் துரத்தத் தொடங்கியது. துருவாச முனிவர் எங்கு சென்றாலும் சுதர்சனச் சக்கரமும் அவரைப் பின் தொடர்ந்து விரட்டிச் சென்றது. இறுதியில் துருவாசர் விஸ்ணுவிடம் சரண் புகுந்து தன் பிழைகளைப் பொறுத்தருளுமாறும், தன்னை காத்தருளுமாறும் வேண்டிப் பணிந்தார். நாராயணனின் கோரிக்கைப்படி அம்பரீசனிடம் மன்னிப்புக் கோரினார். சுதர்சனராஜன் சாந்தமடைந்து துருவாசரைக் காத்து இரட்சித்தார். இவ்வாறு சுதர்சனராஜனின் மகத்துவங்கள் அத்தனையும் மேன்மையுடையவை.

**அவதாரச் சிறப்பு**

சுதர்சனச் சக்கரம் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. சக்கரராஜன், நேமி, திருவாழிஆழ்வான், திகிரிராஜன், சக்கரத்தாழ்வார் என அவை அமைந்திருக்கும். சக்கரத்தாழ்வார் பகவானைப் போலவே காட்சி கொடுப்பார். பதினாறு கரங்களையும் அவற்றில் பல ஆயுதங்களையும் தாங்கியவாறு காட்சி தருவார். மேலும், பகவான் விஸ்ணுவின் அவதார மேன்மை நிகழ்தலின் போதும் சுதர்சனம் தன் பங்களிப்பை சிறப்புற வழங்கியுள்ளது. அவ்வகையில், மச்ச அவதாரத்தின் போது விஸ்ணுவின் பல்லாகவும், விஸ்ணு பன்றியாக தோன்றிய வராக அவதாரத்தின் போது கொம்பாகவும், நரசிம்ம அவதாரத்தின் போது நரசிம்மரின் நகமாகவும், இராம அவதாரச் சிறப்பின் போது பரதனாகவும், கிருஸ்ண அவதார காலத்தில் சுதர்சனச் சக்கரமாகவும் திருப்பொலிவு தந்து அடியவர்க்கு அருட்காட்சி தந்துள்ளார்.

**ஈழத்தில் சக்கரத்தாழ்வார் வழிபாடு**

இன்றும் சக்கரத்தாழ்வார் வழிபாடு ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. விஸ்ணு ஆலயங்களில் அவரது சக்தியாக சக்கரம் கருவறையில் வைத்து வழிபடப்படும் தன்மைகள் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக ஈழத்தின் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைக் குறிப்பிடமுடியும். இத்தகைய சிறப்புக்களை கொண்ட சக்கரத்தாழ்வாரை வணங்கி நாம் பக்தி சிரத்தையுடன் வழிபாடு இயற்றி வரும் போது எம் மனதில் தோன்றும் பய உணர்வு நீங்கப்பெறும், தீராத நோய்கள் நீங்கும், கடன் தொல்லைகள் அகலும், எதிரிகள் என்போர் எம்மிடமிருந்து விலகியிருப்பர், மூடத்தனம் மற்றும் சோம்பல் உணர்வு என்பன நீங்கப்பெறும். மேலும் உடலில் வலிமை பலம்பெறும்.

இன்றும் சக்கரத்தாழ்வார் வழிபாடு ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. விஸ்ணு ஆலயங்களில் அவரது சக்தியாக சக்கரம் கருவறையில் வைத்து வழிபடப்படும் தன்மைகள் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக ஈழத்தின் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைக் குறிப்பிடமுடியும். இத்தகைய சிறப்புக்களை கொண்ட சக்கரத்தாழ்வாரை வணங்கி நாம் பக்தி சிரத்தையுடன் வழிபாடு இயற்றி வரும் போது எம் மனதில் தோன்றும் பய உணர்வு நீங்கப்பெறும், தீராத நோய்கள் நீங்கும், கடன் தொல்லைகள் அகலும், எதிரிகள் என்போர் எம்மிடமிருந்து விலகியிருப்பர், மூடத்தனம் மற்றும் சோம்பல் உணர்வு என்பன நீங்கப்பெறும். மேலும் உடலில் வலிமை பலம்பெறும்.

**சக்கரத்தாழ்வார் தியானம்**

சுதர்சன சக்கரத்தை பின்வரும் 'சுதர்சன காயத்திரி மந்திரத்தை கூறி வழிபடுவது சிறப்பான பலாபலனைத் தரும்.

**"ஓம் சுதர்சனாய வித்மஹே மகா ஜ்வாலாய தீமஹி தன்னோ சக்கரப் பிரசோதயாத்"**

மேலும் சக்கரத்தாழ்வார் தியான சுலோகம், மகாமந்திரம் பின்வருமாறு அமையப்பெறும். இதனை பயபக்தியுடனும், உடல் உளத் தூய்மையுடனும் கூறி வர நற்பலன்கள் கிடைக்கப்பெறும்.



**"ஓம் க்லீம் க்ருஷ்ணாய ஹ்ரீம் கோவிந்தாய
ஸ்ரீம் கோபி ஜனவல்லபாய ஓம்பராய பரமபுருஷாய பரமாத்மனே
மமபரகர்ம மந்த்ர தந்த்ர யந்த்ர ஔஷத அஸ்த்ர
ஸஸ்த்ர வாதப்ரதிவாதானி ஸம்ஹர ஸம்ஹர
ம்ருத்யோர் மோசய மோசய ஓம் மஹா சுதர்சனயா
தீப்த்ரே ஜ்வாலா பரிவ்ருதாய ஸர்வதிக் க்ஷோபன
கராய ஹும்பட் பரப்ரஹ்மணே ஸ்வாஹா"**

சக்கரத்தாழ்வாரை பக்தியுடன் வழிபடுவோம். பயன்பல பெறுவோம்.



# ஆசிரியர் தினம்

- சமூகத்தில் மதிப்பு மிக்க பணிகளாக விளங்கும் பணிகள் எல்லாவற்றிலும் போற்றுதற்குரிய பணியாக என்றென்றும் விளங்குவது ஆசிரியப் பணியேயாகும்.
- பிள்ளைகளுக்கு வீட்டில் பெற்றோருக்கு அடுத்ததாக ஆசிரியர்கள், பாதுகாவலர்களாக, வழிகாட்டிகளாக ஏன் அன்பான அன்னையர்களாக நல்லதொரு நண்பராக விளங்குகிறார்கள்.
- ஆசிரியர்கள் வெறும் புத்தகக் கல்வியை மட்டும் மாணவர்களுக்கு ஊட்டுபவர்கள் அல்லர்.
- நல் ஒழுக்கம், பண்பு ஆன்மிகம் சமூகத்தின் வாழ்வியல் முறைமைகள் பொதறிவு போன்ற அனைத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களை நாட்டின் நாளைய நல்ல தலைவர்களாக ஆக்கும் பணியைச் செய்கின்றனர்.
- ஆசிரியர்கள் தன்னலமற்ற தியாக மனப்பான்மை கொண்டவர்களாக மட்டுமல்ல, கற்பிக்கும் தொழிலை நேசிப்பவர்களாகவும் வாழ்கிறார்கள்.
- ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர் ஆசிரியரே
- மாணவர் சமூகத்துக்கு தேவையான அன்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என அனைத்தையும் மாணவருக்கு கற்றுத் தந்து அவர்களை நல்லவர்களாக, பண்பாளர்களாக, சிறப்பானவர்களாக, அறிஞர்களாக, மேதைகளாக, உயர்த்தும் உத்த பணியைச் செய்யும் ஆசிரியர்களைக் கௌரவிக்க வேண்டியது மாணவர்களின் கடமைமட்டுமல்ல ஒரு சமுதாயத்தின் தலையாய கடமையுமாகும்.
- நேற்றைய தினமே (ஒக்.5) உலக ஆசிரியர் தினமாக அறிவிக்கப்பட்டு இருப்பினும் இந்தத் தினம் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப்பட்டு வருகிறது.
- எமது நாட்டில் ஆசிரியர்களுக்கான இந்த நன்றிப் பெருவிழா என்னும் ஆசிரியர் தினம் இன்றைய தினம் (ஒக்.6) திகதி கொண்டாடப்படுகிறது.



# துணிந்து நில்

பத்து வயதுடைய மகனை அழைத்துக் கொண்டு அவனது தந்தை ஒரு காட்டுப் பகுதிக்குச் சென்றார். அப்போது மகனுக்கு ஒரு சவாலை முன் வைத்தார். "மகனே இப்போது உனக்கு முன் ஒரு பெரிய சவால் உள்ளது. அதில் வெற்றி பெற்றால் நீ பெரிய வீரனாகி விடுவாய். இன்று இரவு முழுவதும் நீ தன்னந் தனியாக இந்தக் காட்டிலேயே இருக்க வேண்டும். உன் கண்களைக் கட்டி விடுவேன். ஆனால் நீ பயப் படக் கூடாது. வீட்டுக்கு ஓடி வரவும் கூடாது" என்றார் தந்தை. சிறுவன் ஆர்வத்துடன் சவாலை ஏற்றுக் கொண்டான்.

கண்கள் துணியால் கட்டப்பட்டன. பின்பு தந்தை "நான் போகிறேன்" எனக் கூறிச் சென்று விட்டார். அவர் திரும்பிச் செல்லும் காலடி ஓசை மெல்ல மெல்ல மறைவது அவன் காதுகளுக்கு துல்லியமாகக் கேட்டது. அது வரை தந்தை அருகில் உள்ளார் என்ற தைரியத்தில் இருந்த அவனுக்கு, இப்போது தூரத்தில் ஆந்தை அலறுவதும், நரி உளையிடுவதும் நடுக்கத்தை ஏற்படுத்தின. அவன் இருந்த பெரிய மரத்தின் கீழ் காட்டு விலங்குகள் வந்து தன்னைத் தாக்கி விடுமோ என்ற அச்சத்தில் அவனது இதயத் துடிப்பு வழக்கத்தைத் தாண்டி எகிறியது. மரங்கள் ஆடின. மழை தூறத் தொடங்கியது. கடும்குளிர் ஊசி போல உடலைத் துளைத்தது. "ஐயோ எனது அப்பா இப்படியே என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்று விட்டாரே!" நான் அவர் சும்மா பய முறுத்தினார் என்று அல்லவா நினைத்தேன்" என எண்ணி பயம் கொண்டு யாராவது வந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று பலமுறை கத்தினான். பயனில்லை. இந்த நிலையில் திடீரென அவனுக்குள் ஒரு துணிச்சல் ஏற்பட்டது. புலம்புவதையும் கூச்சல் போடுவதையும் நிறுத்தி விட்டு "என்ன தான் நடக்கும்? பார்ப்போமே" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு "சுற்றுப்புறத்தில் கேட்கும் ஓசைகளை ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கினான். இப்படியே இரவு கழிந்து போயிற்று. விடியற் காலையில் லோசாகக் கண் அயந்தான். சூரியன் உடம்பைச் சுட்ட போதுதான் தனது கண் கட்டைத் திறந்து பார்த்தான். அப்போது விடிந்து விட்டிருந்ததை உணர்ந்தான். கண்ணைக் கசக்கிக் கொண்டு எதிரே பார்த்த போது அவனுக்கு ஆச்சரியம்! ஆனந்தம்! அழுகையே வந்து விட்டது.

"அப்பா" என்று உரத்த குரலில் கத்தியவாறு அருகில் அமர்ந்திருந்த தந்தையைத் தழுவிக்கொண்டான். "அப்பா! நீங்கள் எப்போது வந்தீங்க?" என்று ஆவலாகக் கேட்டான் தந்தை" நான் எப்போதுமே மகனே உன்னை விட்டுப் போனேன்?'' என்றார் புன்சிரிப்புடன் தந்தை. "இரவு இங்குதான் இருந்தீர்களா? அப்படியானால் ஏன் நான் பயந்து அலறிய போதெல்லாம் என்னைக் காப்பாற்ற வில்லை? ஏன் என்னிடம் எதுவும் பேசவில்லை?" என்று கேட்டான். "உன் மனோதிடம் வளர வேண்டும். நீ எதற்கும் அஞ்சாத வீரனாக வேண்டும் என்பதற்காகத்தான் மௌனம் காத்தேன். ஏனென்றால் அச்சத்தின் உச்சத்தை எட்டும்போது துணிச்சல் தானே வரும். அந்த துணிவு எமக்கு எப்போதும் துணைவரும்" என்றார் தந்தை. மகனுக்குத் தந்தையின் நோக்கம் புரிந்தது. அவரை வியந்தபடி நின்றான்.



# வழிகாட்டுவோம்



# மூளைக்கு வேலை

1. இந்த இரகசிய எண்ணை உங்களால் சிந்தித்துக் கூற முடியுமா?
   அது 100 இன் பாதியை விடப் பெரியது
   அது 7 பத்துக்களை விட அதிகம்
   அது 8 பத்துகளை விடக் குறைவு
   பத்தாம் இட எண் ஒன்றாம் இட எண்ணை விட அதிகம் இந்த இரகசிய எண் என்ன?
   ....................
2. இரு ஆசிரியர்கள் ஒரே கல்லூரியில் கற்பிக்கின்றனர்.
   அதில் ஒருவர் மற்றையவரின் மகனின் தந்தையாவார்.
   அந்த இரு ஆசிரியர்களுக்குமிடையிலான உறவு முறை என்ன?
   ....................
3. மின்சாரத்தில் இயங்கும் ரயிலொன்று 100 மைல் மணி வேகத்தில் மேற்கு திசையை நோக்கிப் பயணிக்கிறது. அந்த நேரத்தில் காற்று வடக்கில் இருந்து வீசும் எனில் புகை எத்திசையை நோக்கிச் செல்லும்.
   ....................



# வளரும் பயிர்கள்

ஒருவளமான நிலத்தைத் தேர்ந்தெடுத்து அதைப் பண்படுத்தி நல்ல காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் கிடைக்குமாறு ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டு, வீரியமுள்ள விதைகளை விதைக்கிறோம். அவை முளைத்து பின் வளர வளர அவற்றுக்குத் தேவையான உரமும் நீரும் வழங்குவதோடு, பாதுகாப்புக்கு வேலியும் அமைத்து அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். பிற களைகளைப் பிடுங்கி, நோயுற்றால் மருந்து தெளித்து கண்ணும் கருத்துமாக கவனித்து வருகிறோம். நாம் விதைத்த விதைகள் முளைத்து பூத்து காய்த்து பின் பல விதைகளையும் கனிகளையும் குறிப்பிட்ட காலத்தில் நன்றியோடு தருகின்றன. ஒவ்வொன்றுக்கும் அவற்றின் தன்மைக்கேற்ப விளைகாலம் மாறுபடும். நெல்லுக்கு நான்கு மாதம் என்றால், வாழைக்கு பயிரிடும் இடத்தையும் பயிரின் இனத்தையும் பொறுத்து ஏழு மாதங்கள் வரை ஆகலாம். அதிக உரத்தைப் போட்டோ, அதிக நீரைப் பாய்ச்சியோ பாட்டுப் பாடியோ அல்லது அதனைச் சுற்றியோ குழுவாக ஆடியோ ஆறு மாதப் பயிரை ஆறு நாளில் அறுவடை செய்ய முடியாது. பயிர் இயற்கையாக வளரவேண்டும். அதன் நுனியைப் பிடித்து வேகமாக இழுத்து நீட்டி விட முடியாது. அப்படி முயன்றால் பயிரின் உயிர்தான் போகும். மாணவர்களும் அப்படித்தான். நல்ல வசதிகள் நிறைந்த பள்ளிக்கூடத்தில் அன்பும் அனுபவமும் நிறைந்த ஆசிரியர்களை வைத்து பாடங்களைக் கற்றுக் கொடுக்கலாம். வீட்டிலும் அவர்களின் படிப்புக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆனால் கற்கவேண்டியது அவர்கள்தான். அவர்களுக்காக வேறு யாரும் கற்றுக் கொள்ள முடியாது. விதைகளுக்கும் மாணவர்களுக்கும் ஒரு மிகப் பெரிய வேறுபாடு உண்டு. நெல் போட்டால் நெல்தான் முளைக்கும். சோளம் கிடைக்காது.

ஆனால் மாணவர்கள் களிமண் போன்றவர்கள். களி மண்ணைப் பதமாகப் பிசைந்து எந்தப் பொம்மையையும் செய்யலாம் என்பது போல எந்த ஒரு குழந்தையும் தேவையானவற்றைக் கற்றுக்கொண்டு கலை, அறிவியல், பொருளாதாரம், வணிகம், பொறியியல், மருத்துவம் என எந்தத் துறையிலும் வல்லுனராக முடியும். ஆனால் பயிரிடுவதற்கு முன் வீரியமுள்ள விதைகளைத் தேர்வு செய்வது போல, ஒரு காலகட்டத்தில் எந்தக் குழந்தைக்கு எதில் விருப்பம் இருக்கிறது. எதில் திறமை இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டு படிப்பைத் தொடர வேண்டும். முடியுமென நினைப்பதைத்தானே நம்மால் செய்ய முடியும். நம்மால் முடியும் என நாம் நினைத்தாலும் பல நேரங்களில் 'உன்னால் முடியாது' என்ற எண்ணத்தை பிறர் நம்மீது திணிப்பதையும் அறிவோம். ஆதலால் மாணவர்கள் விரும்பிய துறையைத் தெரிந்து "என்னால் முடியும்" என்ற நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டு நல்வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு.**

# இயற்கை வகுத்த வழி

தம்பி தம்பி இங்கே வா!
தாவும் மானின் அழகைப்பார்!
தும்பி இனங்கள் அது கண்டே
துன்பம் மறந்தே ஆடுவதைப் பார்!

கோல மயிலின் இனம் யாவும்
குயிலின் இசைக்கே நடமாடும்
ஞாலம் எல்லாம் மகிழ்ந்திடவே
ஞான கீதம் குயில் பாடும்

தூய நீர் கொள் வாவியிலே
துலங்கும் கமல மலர் மீது
நேயங் கொண்ட தவளையது
நேர்த்தியாகவே தானுறங்கும்

தேரை பாடும் இசை கேட்டு
தேம்பும் கன்றும் தானுறங்கும்
பாலை ஊட்டும் பசுவங்கே
பசிய புல்லை மகிழ்ந்துண்ணும்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி சேமிப்புகள் கரையும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்:** பிரச்சினைகளைச் சமாளிக்கும் மனோ பலம் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்கள் உங்களைத் தேடி வருவார்.

**மிதுனம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்கள் வீடுதேடி வருவார்கள்.

**சிங்கம்:** சந்திராஷ்டமம் தொடர்வதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களை பற்றி வதந்திகள் வரும்.

**கன்னி:** உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும்.

**துலாம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**தனுசு:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**மகரம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்:** கணவன்மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும்.

**மீனம்:** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் மனஉளைச்சல் ஏற்படும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | | 9 | | 5 | | | 7 |
| | 1 | | | | | 8 | 3 | 5 |
| 7 | | 5 | 6 | | | | 9 | |
| | | 2 | 4 | | | | | 3 |
| | 7 | | | | | | 8 | |
| 8 | | | | | 6 | 7 | | |
| | 9 | | | | 2 | 3 | | |
| | | 1 | | | | | 7 | |
| 4 | | | 8 | | 9 | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | 4 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 5 | 6 | 9 | 7 | 1 | 8 | 3 | 2 | 4 |
| 4 | 7 | 3 | 5 | 9 | 2 | 8 | 6 | 1 |
| 2 | 9 | 6 | 3 | 5 | 1 | 7 | 4 | 8 |
| 3 | 8 | 5 | 2 | 4 | 7 | 1 | 9 | 6 |
| 7 | 1 | 4 | 6 | 8 | 9 | 5 | 3 | 2 |
| 1 | 5 | 2 | 9 | 7 | 4 | 6 | 8 | 3 |
| 9 | 4 | 8 | 1 | 3 | 6 | 2 | 7 | 5 |
| 6 | 3 | 7 | 8 | 2 | 5 | 4 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# பின்வாங்கினார் சுசீந்திரன்

தீபாவளிக்கு 'மெர்சல்' படத்தோடு தனது 'நெஞ்சில் துணிவிருந்தால்' படத்தை மோதவிடுவதாக அறிவித்த இயக்குநர் சுசீந்திரன், தற்போது பின்வாங்கியுள்ளார்.

சுசீந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள நெஞ்சில் துணிவிருந்தால் படத்தில் சந்தீப் கிஷன், விக்ராந்த், மெஹ்ரீன், ஹரீஷ் உத்தமன், அப்புக்குட்டி, அருள்தாஸ், துளசி, சாதிகா ஆகியோர் நடித்திருக்கின்றனர். இந்தப் படத்துக்கு இமான் இசையமைத்துள்ளார். தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளிலும் உருவாகியிருக்கும் இந்தப் படத்தை அன்ரனி தயாரித்துள்ளார்.

விஜய்யின் 'மெர்சல்' படம் வெளிவரும் தீபாவளி தினத்தில் 'தனது நெஞ்சில் துணிவிருந்தால்' படத்தை வெளியிடப் போவதாக அறிவித்திருந்தார் இயக்குநர் சுசீந்திரன். ஆனால், தற்போது தீபாவளி வெளியீட்டிலிருந்து பின்வாங்கி உள்ளார்.

'நெஞ்சில் துணிவிருந்தால்' படத்தை நவம்பர் மூன்றாம் திகதியன்று வெளியிட முடிவு செய்துள்ளதாக இயக்குநர் சுசீந்திரன் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்.



# கோபத்தை அடக்க சுலபமான வழிகள்...

**1.பொருட்படுத்தாதீர்கள் :**
உங்களைப் பற்றி அவதூறாகவோ, மிக மட்டமாகவோ எவர் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். அதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுங்கள். எதிரிகள் ஏமாந்து விடுவார்கள்.

**2. எதையும் யாரிடமும் எதிர்பார்க்காதீர்கள் :**
ஒருவரிடம் நாம் ஒன்றை எதிர்பார்த்து அது கிடைக்கவில்லையென்றால், அவர் மீது கோபம் எமக்கு வருவது இயற்கை தான். எனவே, யாரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

**3. எதிரிகளை அலட்சியம் செய்யுங்கள் :**
தனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. அதனால் எமக்கு ஆத்திரமும், கோபமும் அடிக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தன்னம்பிக்கை உள்ளவனை ஒரு போதும் அவதூறுகளும், ஏச்சுகளும் பாதிப்பதில்லை.



**twitter.com/HAJAMYDEENNKS**
பெண்கள் ஒரு சேலை எடுக்கும் நேரத்திற்குள் ஆண்கள் சட்டைத்துணி எடுத்து தைத்து சட்டையையே போட்டுவிடலாம்...!



**twitter.com/Kozhiyaar**
தன் குழந்தையின் பெருமை பற்றி பேசுகையில், தந்தை சிறிது அடக்கி வாசிப்பார் தாயோ நிறைய அடித்து விடுவார்!!!

இந்த உலகத்தில சந்தோஷமா இருக்கனும்னா ஒன்னு குழந்தைகளா இருக்கனும்...



இல்லைன்னா, குழந்தைகளோடு இருக்கனும்

எதுக்குப் பையனுக்கு ஆயிரம் ரூபா கொடுத்தீங்க...




ஏதோ 'பேஸ்புக்' வாங்கனும்னு சொன்னான்
'புக்' இல்லாம பையன் எப்படி படிப்பான் சொல்லுடி...

புருஷனா இருந்தாலும், பொண்டாட்டியா இருந்தாலும் பேஸ்புக்ல பிரண்ட் ரிக்குயஸ்ட் தான் குடுக்க முடியும்.



ஹஸ்பெண்ட் ரிக்குயஸ்ட், வைவ் ரிக்குயஸ்ட் எல்லாம் குடுக்க முடியாது.

# யாரை சனிபகவான் பீடித்துக் கொள்வார் தெரியுமா?



இந்து மத நம்பிக்கைகளில் பக்தர்கள் அதிகம் பயப்படுவது சனிபகவானுக்கு மட்டுமே. ஜாதககிரக நிலை மாற்றங்கள் ஏற்படும் போது சனி பகவானால் பாதிக்கப்பட்டு அதிக சிரமங்களுக்கு ஆளாகிறவர்கள் அதிகம் பேர். அப்படிப் பாதிக்கப்படும் போதெல்லாம்பலபரிகாரதலங்களுக்குசென்றுதுன்பங்களை குறைத்தும் கொள்கிறார்கள்.

தினந்தோறும் காகத்துக்கு உணவு படைப்பவர்களையும் நீத்தாருக்கான பித்ரு கடன்களை முறையாகச் செய்பவர்களையும் சனி பகவான் தொந்தரவு செய்வதில்லை. சனிக்கிழமை விரதமிருந்து, சுதர்சன எந்திர வழிபாடு செய்பவர்கள் மீதும் சனி பகவான் கருணை காட்டுகிறார். வலம்புரி சங்கு இருக்கின்ற வீடு மற்றும் சாலகிராமத்தை வைத்து பூஜை செய்பவர்களையும் சனி பகவான் அன்போடு ஆசிர்வதிக்கிறார்.

**யாரையெல்லாம் பீடிப்பார் சனி பகவான்?**

- உலராத ஈரத் துணியை உடுத்துபவர்களை சனி உடனே பிடித்துக்கொள்வார். அதே போல நனைந்தபடியே ஈரம் சொட்ட சொட்ட வீட்டிற்குள் செல்பவர்களையும் சட்டென்று சனி பிடித்துக் கொள்வார்.
- சரியாக குளிக்காமல் அசுத்தமாக இருப்பவர்கள், ஒழுங்காக தலைசீவாமல் தலைவிரி கோலமாக இருப்பவர்கள் இவர்களெல்லாம் சனிக்கு பிடித்த வர்கள்.
- விளக்கேற்றப்படாமல் இருள் சூழ்ந்த இடங்கள், எப்போதும் அமங்கல சொற்களை பேசுவது இவையெல்லாம் சனி பகவானுக்கு பிடித்தமானவை. இதைச் செய்பவர்களை நிச்சயம் பிடித்துக் கொள்கிறார் சனி.
- மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவற்றினால் அடுத்தவர்களை வஞ்சிப்பவர்களை தலைமுறை தலைமுறையாக தண்டித்தும் விடுகிறார் சனி பகவான்.
- அழுகுரல் கேட்கும் வீட்டிலும், அழுக்குகள் நிறைந்த வீட்டிலும் சனி பகவான் நீங்காமல் நிலைத்து நிரந்தரமாக குடியிருக்கிறார்.
- தூய்மையான உள்ளமும், குடியிருக்கும் சுத்தம் மிகுந்த வீடும், பிறருக்கு துயரம் தராத குணமும், தளராத இறை நம்பிக்கையும் சனி பகவான் கொடுக்கும் நன்மைகளை எமக்கு அளிக்கும்.
- சனி பகவான் எம்மை கெடுக்காமல் இருக்க நமச்சிவாய சொல்லி நல்லதே நினைத்து நன்மைகள் பல செய்வோம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

**06.10.2017**



1979 - வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதலாவது பாப்பரசரானார் இரண்டாம் ஜோன் போல்.

1723 - தனது 17ஆவது வயதில் பெஞ்சமின் பிராங்ளின் பிலடெல்பியாவை வந்தடைந்தார்.

1903 - ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் முதற் தடவையாகக் கூடியது.

1973 - எகிப்து, சிரியாவுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்தது.

1981 - எகிப்திய அரச தலைவர் அன்வர் சதாத் இஸ்மிய ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1987 - பிஜி குடியரசானது.

2016 - கொக்குவிலில் வீட்டின் மீது அதிகாலை சூடு. முச்சக்கர வண்டியில் வந்த இனந்தெரியாதோர் கைவரிசை.

2016 - வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் நியமனத்தில் இழுபறி.

2016 - வடக்கில் 90 பேருக்கு அதிபர் நியமனம் என்று வடக்கு கல்வியமைச்சின் செயலாளர்தெரிவிப்பு.

**நாளை**

**07.10.2017**

சனிக்கிழமை


**புரட்டாதி 21**

திதி: துதியை மு.இ. 09.42 வரை
நட்சத்திரம்: அச்சுவின் மு.இ. 08.30 வரை
சுபநேரம்: 03.02–04.32 வரை
ராகுகாலம்: 09.02–10.32 வரை

20/-
இந்த வாரம்
துணைவேந்தருக்கு பகிரங்கக் கடிதம்
கலியுக தெய்வம் சீரடி பாபா
நீர்மூழ்கிக் கப்பலின் கண்ணீர்க் கதை
தம்புவின் கள்
அந்த நண்பன் இப்போது முதியோர் இல்லத்தில்
எண்ணங்களே வாழ்வின் வண்ணங்கள்
முடிவல்ல ஆரம்பம்
மற்றும் பல்சுவை அம்சங்களுடன்




சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :- 071 8 695 695



# மாங்காய் பிரியாணி

**தேவையான பொருள்கள்**

பாசுமதி அரிசி - 2 கோப்பை
மாங்காய் - ஒன்று
வறுத்த வேர்க் கடலை - 3 மேசைக் கரண்டி
பச்சை மிளகாய் - 2
காய்ந்த மிளகாய் - ஒன்று
கொத்தமல்லித் தழை 6 மேசைக் கரண்டி
எண்ணெய் - 3 மேசைக் கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

பாசுமதி அரிசியுடன் உப்பு, மூன்று கோப்பை நீர் சேர்த்து உதிர் உதிராக வேகவைத்துக் கொள்ளவும். மாங்காயை நன்றாகக் கழுவி, கொட்டையை நீக்கி தோலுடன் சிறிய சிறிய துண்டுகளாக நறுக்கவும். பச்சை மிளகாயை நறுக்கி மாங்காயுடன் சேர்த்து, மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி, மல்லித்தழையை சேர்த்து மேலும் ஒரு சுற்றுச் சுற்றி நீர் சேர்க்காது மென்மையாக அன்றி அரைத்து எடுக்கவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்த மிளகாய், வறுத்த வேர்க்கடலை மற்றும் அரைத்த விழுதை சேர்த்து பச்சை வாசனை போக வதக்கி எடுக்கவும், வெந்த சாதத்தைச் சேர்த்துக் கிளறி இறக்கவும்.

## வீடு வாடகைக்கு உண்டு

மாட்டின்றோட் (வைத்தியசாலை, புகையிரத நிலையம், பாடசாலை அருகில்) அமைந்துள்ள மூன்று அறைகள், 3 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. **தொடர்பு - 077 756 8282**

## T.K.T. இன் முக்கிய அறிவித்தல்

எள்ளின் விலை உயர்வு காரணமாக
06.10.2017 தொடக்கம்
**தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**சின்
ஒரு போத்தல் நல்லெண்ணை 750 ml
விலை 600/= ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது
என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.

**தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**
**மூத்த நயினார் கோவிலடி,**
**ஆனைக்கோட்டை. 021 225 5718**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்













விசாரணை ☎ 021- 2227712

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1404 | சீட்டிழுப்பு திகதி 2017.10.05

வெற்றி இலக்கங்கள்: 07 26 29 52 A

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,000,000/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 36
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.10.05

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,014,890/-

வெற்றி இலக்கங்கள்: 21 24 26 29 F

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**SUPER BALL**

உத்தியோகபூர்வ முடிவுகள் | சீட்டிழுப்பு வாரம் ▶ 711
சீட்டிழுப்பு திகதி ▶ 05/10/2017 | வியாழக்கிழமை

0 25 42 60 69

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 41.143.524 /-

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
07/10/2017 ஆம் திகதி சனிக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி
### (தேசிய பாடசாலை)
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2017

மேற்படி பழைய மாணவர் சங்கப்பொதுக்கூட்டம் 05.11.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிக்கான வேட்புமனுக்களும், புதிய பிரேரணைகளும் 20.10.2017 அன்றோ அல்லது அதற்கு முன்போ கௌரவ செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு:** புதிதாக சேரவிரும்பும் அங்கத்தவர்களும் தற்காலிக அங்கத்தவர்களும் தங்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிசெய்தல் வேண்டும்.

**நாயகபாலன் ஸ்ரோர்ஸ்,**
**மானிப்பாய்.**
**06.10.2017**

**சு. உதயகுமார்**
**கௌரவ செயலாளர்,**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை-புரியும் செல்வி மகேச்சுரன் பகீரதி அவர்களின் அன்புத்தந்தையார்

### ஆறுமுகம் மகேச்சுரன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் காணிக்கை



### வடிவேலு சரவணசிவா

(முன்னாள் முகாமையாளர் - சாரங்கா ஜிவல்லரி, 55, செட்டித்தெரு, கொழும்பு)

02.10.2017 திங்கட்கிழமை காலஞ்சென்ற முன்னாள் சாரங்கா ஜிவல்லரி முகாமையாளர் வடிவேலு சரவணசிவா குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

157/1, சாரங்கா ஜிவல்லரி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
சாரங்கா ஜிவல்லரி உரிமையாளரும்,
குடும்பத்தினரும், பணியாளரும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
28 . 07 . 1966



விண்ணில்
16 . 10 . 2016

### அமரர் சிவகுமாரன் வர்னேந்திரன் (செட்டி)

(குபாலக ஊழியர்)
திதி : அபரபக்ஷ பிரதமை (தேய்பிறை)

ஓராண்டென்ன நூறாண்டானாலும் மாறாது உம் நினைவு

இல .99/7, சந்தன மாதா
கோயில் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

**සංවර්ධන වාසනාව**
Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 080
சீட்டிழுப்பு திகதி ▶ 05/10/2017 | வியாழக்கிழமை

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 38 | 44 | 48 | 51 | 06 | மே |

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 17, 546, 978/= | ரூ. 4, 016, 021/= | ரூ. 3, 256, 766/= |

2017/10/07 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## நீங்காத நினைவில் பத்தாண்டுகள்

கண் மகிழ
03 . 04 . 1978



கண் நெகிழ
27 . 09 . 2007

### அமரர் கோபாலபிள்ளை சுபாஸ்கரன் (சுபாஷ்)

திதி : பிரதமை (06.10.2017)
ஆண்டுகள் பத்துப் போனாலும்
ஆறாதைய்யா உங்கள் நினைவு
உதிர்ந்து விட்ட எங்கள் மலரே
உந்தன் புன்னகை வதனம் மறையவில்லை

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும்
உந்தன் நினைவுகளுடன்
குடும்பத்தினர் (வேலணை மேற்கு -8)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி கணேசமூர்த்தி



ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி கணேசமூர்த்தி 04.10.2017 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பண்டாரி - பத்தினி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பி, சிவபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற இரட்ணம் மற்றும் தெய்வநாயகி காலஞ்சென்ற பிள்ளையம்மா மற்றும் தர்மவதி ஆகியோரின் மைத்துனியும் காண்டீபனின் (ஆசிரியர் - கிளி / இயக்கச்சி அ.த.க. பாடசாலை) சிறிய தாயாரும் நித்தியா (கனடா), சோபனா (கனடா), தர்சிகா (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும் துஷாரா (முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.மாநகர சபை), கஜன் (கனடா), சஞ்சீவன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் தருணிகா, ரித்திகா, ஹரிணி (கனடா), அதியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஆவரங்கால் கிழக்கு, புத்தூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கவுடுது இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர். 077 954 1593**

**தகவல்: பொ.காண்டீபன்**
**(பெறாமகன்)**

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா /ஊர்காவற்றுறை (றோ.க.)
தமிழ் ஆண்கள் பாடசாலை
மாணவன்
செல்வன்

### புனிதராஜ் மெரிடித்கஸ்ரோ



2017 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளை பெற்று சித்தியடைந்தமைக்காக அவரை வாழ்த்துவதோடு அவரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை சமூகம், விசேடமாக அன்பழகன், கிருபா ஆசிரியர்கள் மற்றும் பல தடைகளை தாண்டி அயராது உழைத்த பெற்றோரான புனிதராஜ் - நர்மதா மற்றும் சகோதரர்கள் இதற்கு பக்கபலமாக இருந்த மரியதாஸ் குடும்பம் மற்றும் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Congratulations

என்றும் அன்புடன் வாழ்த்தும்:
A. றொக்ஷன் பிரதீப்


# முடக்கொத்தான் கீரையின் மருத்துவக் குணங்கள்

முடக்கொத்தான் வேலிகளில் காட்டுச் செடியாக வளர்ந்திருக்கும் ஒரு வகைக் கீரை. இதன் இலை துவர்ப்புச் சுவையுடையது.

முடக்கொத்தான் கீரையை எண்ணெயில் வதக்கி மிளகாயும், உப்பும் சேர்த்துத் துவையல் அரைத்துப் பயன்படுத்தினால் சுவையாக இருக்கும்.

இந்தக் கீரையைச் சன்னமாக நறுக்கி வெங்காயம் அதிகமாகச் சேர்த்துப் பொரியல் செய்தும் சாப்பிடலாம். மிளகு, சீரகத்துடன் சேர்த்து ரசம் வைக்கலாம்.

துவரம் பருப்பு, பாசிப்பருப்பு மற்றும் வேறு பருப்புகளுடன் இந்தக் கீரையைச் சேர்த்துக் கூட்டும் செய்யலாம். அதோடு, அடை செய்வதற்கும், தோசை மாவை புளிக்க வைப்பதற்கும் இந்தக் கீரையை அரைத்துச் சேர்த்துக் கொள்ளலாம்.

முடக்கொத்தான் கீரையில் விற்றமின்களும், தாது உப்புகளும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன. முடக்கொத்தான் கீரையைத் தொடர்ந்து உணவில் சேர்த்துக்கொள்வதால் மலச்சிக்கல், மூல நோய், கரப்பான், கிரந்தி, பாதவாதம்போன்ற நோய்கள் குணமாகின்றன.

இந்தக் கீரையை விளக் கெண்ணெயில் வதக்கி உண்டால் மூட்டு வலி, கைகால் வலி, முதுகு வலி, உடல் வலி ஆகிய அனைத்து வலிகளும் நீங்கும். முடக்கொத்தான் கீரையுடன் வெல்லம் சேர்த்து நெய்யில் வதக்கி உட்கொண்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் குண மாகும்.

இந்தக் கீரையின் சாற்றைக் காதில் விட்டால் காது வலி நீங்கும். கட்டிகளில் வைத்து கட்டினால் அவை உடைந்துபுண்ஆறும். வாய்வுத் தொல்லையுடையவர்கள்



முடக்கொத்தான் கீரையை சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும். மாதவிடாய் நிற்கும் நிலையில் உள்ள பெண்களுக்கு இந்தக் கீரை நல்லது. பெண்களின் மாதவிடாய் தொடர்பான பிரச்னைகளுக்கு இந்தக் கீரையின் சாறு ஒரு மேசைக்கரண்டி போதுமானது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### கிருஷ்ணதாஸ் கல்கிசன்

யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2017 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி **177** புள்ளிகளைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் கல்வியில் உயர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :- அப்பா, அம்மா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தை.

இல.92, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

Congratulations

சிவமயம்

பவள விழாக்காணும்
உயர்திரு சுந்தரம் டிவகலாலா
அவர்களை

## வாழ்த்தும் பாமாலை



சுந்தரம் - அழகு நற்றமிழ் சொல்லில்
பைந்தமிழ் சொல்லும் பலபடி உயர்ந்தது
இன்றைய நாயகன் திருநாமம் ஆதலால்
சுந்தரம் டிவகலாலா துணிந்த மனிதன்
அணிந்திடும் உடையிலும் அறிவு துலங்கும்
செறிந்த சிந்தனை நறுந்தேன் அவர் உரை
அறிந்தோம் அவரை ஆதலால் வாழ்த்துவோம்
கல்விப்புலத்தில் பயன்தரு மனிதனாய்
செல்லரித்த ஏடுகள் ஆய்ந்தும் நல் பணிபுரி மாந்தராய் நிலமிசை வந்த
மனிதரை வாயார வாழ்த்துவோம்.
பூத்தது பவள விழாக்காலம் சேர்ந்தன பூக்கள் மலர்மாலை
பாக்கள் எழுந்தன பாவலர் நாவில் பாயிரம்பாடி வாழ்த்துவோம் வாரீர்.

Best Wishes

மங்களம்

வாழ்த்தி மகிழ்வோர்:
முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர்,
கோட்ட இணைப்பாளர், குடும்ப இணைப்பாளர்கள்,
முன்பள்ளி ஆசிரியர்கள் தென்மராட்சி.

தென்மராட்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



எமது வலய ஆசிரியரும், உடற்கல்வி ஆசிரியருமான

### பொன்னம்பலம் சகிலன்

அவர்கள் SLEAS - II பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெற்றமையை உளமார வாழ்த்தகின்றோம். மேலும் அவர் பல பதவிகளைப் பெற்று வாழ்வில் மேன்மையடைய வாழ்த்துகின்றோம்.

Congratulations ஆசிரிய நண்பர்கள், தென்மராட்சி கல்வி வலயம்.

## மரண அறிவித்தல்



பிறப்பு
17
.
06
.
1927

இறப்பு
03
.
10
.
2017

### கந்தையா பூபாலசிங்கம்

**(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)**

யாழ்.கொக்குவில் கிழக்கு உடையார் லேனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பூபாலசிங்கம் 03.10.2017 செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் தவப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுகிர்தலட்சுமியின் ஆருயிர்க் கணவரும், அருந்ததி (கனடா), தமயந்தி, அருட்சுணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆராவமுதன் (கனடா), பிரதீபா (பிரான்ஸ்)ஆகியோரின்அன்புமாமனாரும்,புனிதவதி,விக்னேஸ்வரன்,நித்தியலட்சுமி, மகேசன், சிற்சபேசன், சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவராஜன், சிவானந்தமலர், காலஞ்சென்ற இராமச்சந்திரன், லங்காதேவி, ஜெகதீஸ்வரி, டேவிற் மனோ ஆகியோரின் அன்புச் சகலனும், பிரணன் (கனடா), அஸ்வின், பிறவின், ஷிரேயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடையார் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பரமநாதர் பேரம்பலம் (வன்னிச் செல்லையா)



அல்லாரை வீதி மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த பரமநாதர் பேரம்பலம் 04.10.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதர் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புத்திரரும் காலஞ்சென்ற காமாட்சியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமி, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், தங்கம்மா மற்றும் அருணாசலம்(கிராம்புவில்), உமையம்மா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமலநாதன், திலகவதி, பரமநாதன்(கனடா), கேதீஸ்வரி(நோர்வே), நடேசநாதன்(கனடா), லோகநாதன்(கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் வசந்தி, கயிலாயபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இலங்கேஸ்வரி (கனடா), சந்திரகுமார்(நோர்வே), ஜெகதீஸ்வரி(கனடா), கவிதா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதுசன், மதுசனா(கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்), மதுவாசனா, மதுமினி பிரகாஸ்(பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாணம்), பிரசன்னா (சனசமூக உத்தியோகஸ்தர் பாண்டியன்குளம்), பிரதாப்(CESL இரணைமடு), இளநிலா, சாளினி, தர்மிரா, அபிரா, பிரவீன், மஞ்சரி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அல்லாரை வீதி,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**அ.கயிலாயபிள்ளை (மருமகன்) 077 4131434**
**(ஓய்வு நிலை அதிபர் யா \சாவகச்சேரி இந்து கல்லூரி)**
**பே. கமலநாதன் (மகன்) 077 2032912**

## பௌத்த...

றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையில் பிரச்சினைக்குரிய விடயங்கள் உள்ளதாக அறியமுடிகின்றது. நாட்டுக்குப் புதிய அரசமைப்புத் தேவையாயின் அது சகலரதும் சம்மதத்துடனேயே கொண்டுவரப்பட வேண்டும். இடைக்கால அறிக்கையை நாம் ஆய்வு செய்துள்ளோம்.

பௌத்த மதத்துக்கான சிறப்புரிமை, ஒற்றையாட்சி முறைமை என்பவற்றில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படக்கூடாது. வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் இடைக்கால அறிக்கையில் புகுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

கூட்டாட்சி முறைமைக்கு நாட்டை நகர்த்தக்கூடிய வகையில் பல்வேறு விடயங்கள் புகுத்தப்பட்டுள்ளன. ஆனால், இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சிப் பரிந்துரையில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உறுதியளித்துள்ளனர். அதனையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. புதிய அரசமைப்பு விடயத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையாகும் - என்றார்.

அவரது கருத்துக்கள் இடைக்கால அறிக்கைக்கு எதிரானதாக உள்ள நிலையில் பௌத்த பீடங்களின் அறிக்கையும் இடைக்கால அறிக்கை மீது கடுமையான விமர்சனங்களை வைப்பதாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்கிறார்கள் அரசியல் அவதானிகள். (உ-5)

## தமிழரின்...

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் 'தேர்தல் சீர்திருத்தங்களும் இடைக்கால அறிக்கைகளும்' என்ற தலைப்பில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கிலுள்ள சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கு ஆபத்து இருப்பதாகப் பீதியை உருவாக்குவதற்கு எத்தனித்ததுபோல, அதே குழுவோடு சேர்ந்து வடக்கு கிழக்கிலே இருக்கின்ற சில முஸ்லிம் தலைமைகள் வடக்கு, கிழக்கு இணைக்கப்படப்போகிறது என்று இன்னுமொரு பீதியை உருவாக்க எத்தனிக்கின்றனர். சாடிக்கு மூடியாக இருக்கின்ற இரண்டு தரப்புகளே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

இந்த நாட்டிலே சிறுபான்மை மக்களுக்கான தீர்வு வருமா? வராதா? என்பது ஒருபுறமிருக்க, தங்களுடைய சொந்த அரசியல் வேணவாக்களுக்காக வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமாக ஒருசில அமைச்சர்கள் பேசித்திரிகின்றனர். வடக்கில் இருக்கின்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பழி சொல்லியே தமது அரசியலைச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இதன் பின்னாலுள்ளது. இதைவைத்து சிலர் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிராக ஆக்ரோசமாகப் பேசி நாடகம் நடத்துகின்றனர்.

கிழக்கில் இருக்கின்ற முன்னாள் அமைச்சர் ஒருவருடைய செயற்பாடுகள் அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும் ஒரே நோக்கம் கொண்டவைதான். தனக்கு சிங்கள மக்களின் வாக்குகள் இல்லாமல் நாடாளுமன்றம் போக முடியாது என்பதற்காக கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்கிறார். அப்படியானால், வடக்கு, கிழக்கு இணைக்கப்படக்கூடாது என்று பகிரங்கமாகப் பேசவேண்டிய தேவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்குத்தான் கூடுதலாக இருக்கவேண்டும்.

நான் சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலிருந்து நாடாளுமன்றம் செல்கின்ற ஒருவர். நான் இதை இப்போது தூக்கிப்பிடித்தேன் என்றால் எனக்குத்தான் மிகவும் பிரயோசனமாக இருக்கும். ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. எங்களுடைய மறைந்த தலைவருக்கும் ஒரு பாரம்பரியம் இருக்கின்றது.

வடக்கு, கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டபோது, அதை நிரந்தரமாக இணைக்க முஸ்லிம்களின் ஆதரவு தேவை என்ற நிலைப்பாடு இருந்தபோது, பொது வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடாது என்பதிலே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கவனமாக இருந்தது. ஏன் என்பதற்கான விளக்கம் சொல்லவேண்டிய அவசியமில்லை. இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் பற்றி மிக ஆழமாகச் சிந்தித்ததன் விளைவாகத்தான் வடக்கு, கிழக்கு இணைப்பு நிரந்தரமாக வேண்டுமென்றால் முஸ்லிம்களுக்கென்று அரசியல் அலகு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் மிகவும் கவனமாக இருந்தோம்.

தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களுக்கு குறுக்கே நிற்பவர்களாக முஸ்லிம் தலைமைகள் பார்க்கப்படவேண்டிய அவசியமில்லை என்ற கொள்கைகளில் இருக்கின்றோம். சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுக்கின்ற அவசியமும் எங்களுக்குக் கிடையாது.

எங்களுடைய வேணவாக்கள் இணைப்பைத் தடுப்பதிலும் பிரிப்பை தடுப்பதிலும் மாத்திரம் இருக்கின்றது என்று நம்பிக் கொண்டிருப்பது என்னைப் பொறுத்தமட்டில் வங்குரோத்து அரசியலின் உச்சக்கட்டம். இதன்மூலம்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்குச் சேர்க்கவேண்டும் என்று நினைப்பதும் மடமைத்தனம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்காளர்கள் அரசியல் ரீதியாக மிகவும் கூர்மையான அறிவுள்ளவர்கள்.

முஸ்லிம்களுக்கு ஒரு தனியலகு என்பது அவசியம் என்பதையும் முஸ்லிம்களுக்கான கரையோர மாவட்டம் ஒரு நிர்வாக மாவட்டம் தேவை என்கின்ற விடயத்தையும் மிகத் தெளிவாக பிரேரணை ஒன்றின் மூலமாக நாங்கள் வழிநடத்தல் குழுவிடம் முன்வைத்தோம். அதை அந்த அறிக்கையில் சேர்க்குமாறும் வேண்டி நின்றோம். அந்த அறிக்கையில் எமது விடயம் சேர்க்கப்படவில்லை. இது சம்பந்தமாக அன்று நான், இந்த வழிநடத்தல் குழுவால் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டபோது பகிரங்கமாகத் தெரிவித்தேன். அது என்னுடைய உரையிலே இருக்கின்றது - என்றார். (வ-5)

## தமிழ் மொழி...

தில் யாழ்ப்பாணம் சென். ஜோன் பொஸ்கோ பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியன முன்னிலை பெற்றன.

யாழ்ப்பாணம் சென் ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 121 மாணவர்களும், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் 101 மாணவர்களும், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 50 -மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாசாலையில் 51 மாணவர்களும், விசுவமடு விசுவநாதர் ஆரம்பக் பாடசாலையில் 40 மாணவர்களும், முல்லைதீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையில் 14 மாணவர்களும், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் 12 மாணவர்களும், உடையார்கட்டு ஆரம்பப் பாடசாலையில் 11 மாணவர்களும்,தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 11 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 39 மாணவர்களும், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் 33 மாணவர்களும், அம்பாள்குளம்விவேகானந்த வித்தியாலயத்தில் 18 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். (வ-21,101,35,ரி3)

## தேசிய மட்ட...

தனை பதக்கங்களையும் கைப்பற்றின.

மொறட்டுவ மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மட அணி மோதியது. 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தை வென்றது நெல்லியடி மத்திய கல்லூரி அணி. இளவாலை கன்னியர்மடத்துக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தமுத்தேகம வித்தியாலய அணி மோதியது. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 30:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## 11 ஆவது...

இவ்வாறு வலியுறுத்தும் பிரேரணை வடக்கு மாகாணசபையில்இன்று முன்வைக்கப்படுகிறது.

வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது. அமர்வில் அவைத்தலைவரால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் மூவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் 8 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வந்தன. அந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் மூவரும் கடந்த 25ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 11 நாள்களுக்கு மேலாக உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய அரசியல் கைதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசியல் கைதிகளின் விடயத்தில் உரிய தீர்வைக் காணுமாறு கோரி வடக்கு மாகாண சபையில் இன்று பிரேரணை முன்வைக்கப்படுகிறது. (வ-8)

## வடக்கு...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலின்போது புலம்பெயர் சமூகத்தினர் பெரும்பாலானோர் எமக்கு ஆதரவளித்தனர். புலம்பெயர் சமூகத்தினர் அனைவரும் பிரிவினைவாதிகள் அல்லர். ஒருசிலர் மாத்திரமே தனிநாடு வேண்டும் எனக் கூச்சலிடுகின்றனர். பெரும்பாலானவர்களின் விருப்பம் ஒற்றையாட்சிக்குள் அதிகூடிய அதிகாரப்பகிர்வு முறையாகவே இருக்கின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது காலத்துக்கேற்ற வகையிலும், நடுநிலைமையாகவும் செயற்பட்டுவருகின்றது. தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உள்ளதென உணர்ந்துகொண்ட கடந்த அரசுகள், அதனைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கவில்லை. மக்கள் போராட்டத்தைக் கையிலெடுத்தனர்.

தற்போது இந்த மக்களின் பிரச்சினை மாத்திரமன்றி, மனித உரிமைகளை வலுப்படுத்தி, நீதித்துறையை சுயாதீனப்படுத்தி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பாதையில் நாம் பயணிக்கின்றோம். இன்று சில சிங்களப் பிரிவினைவாதிகளின் செயற்பாடு மிகவும் கேவலமாக உள்ளது. நாட்டைப் பிரிப்பதாகக் கூறி நாட்டில் மதவாதத்தை ஏற்படுத்தி குழப்பம் விளைவிக்கின்றனர்.

### நாடு பிரிக்கப்படாது

நாடு பிரிக்கப்படமாட்டாது என்ற விடயம் புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கையில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியில் அதியுச்ச அதிகாரப் பங்கீடு வழங்கப்படும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி என்ற சொல்லுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் பயப்படுகின்றனர். கடந்த காலங்களில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், இடது கையால் வழங்கப்பட்டு வலது கையால் மீளப் பெறப்பட்டன. அந்த மக்கள் இதனால் இப்போதும் பயப்படுகின்றனர். தற்போது ஒருமித்த நாடு என்ற பதத்தை உள்வாங்கியுள்ளோம். அதனைவிட ஒரு சிறந்த பதம் இருக்குமாயின் நாம் ஏற்றுக்கொள்ளத் தயார்.

சகல மதங்களுக்கும் உரிய மதிப்பு வழங்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்தத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை இல்லாமல் போய்விடவில்லை என்பதை சிங்களவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### வடக்கு - கிழக்கு இணைப்பு

வடக்கு கிழக்கு இணைப்பு நடைபெறாவிட்டால் புதிய அரசமைப்பை ஏற்கமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கும் கூறவில்லை. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு, அது அரசமைப்பில் உள்வாங்கப்படவேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. வடக்கு கிழக்கு இணைப்புதொடர்பில்முன்வைக்கப்பட்ட மூன்று விடயங்களில் இதுவும் ஒன்று.

வடக்கு, கிழக்கு மட்டுமன்றி எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படக்கூடாது. அவற்றுக்கு மேலதிகமாக மூன்றாவதாக மிக முக்கிய விடயமொன்றை உள்ளடக்கியுள்ளோம். வடக்கு, கிழக்கு இணைக்கப்படவேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவேண்டும். அத்தோடு, சம்பந்தப்பட்ட இரண்டு மாகாண மக்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் - என்றார். (வ-5)

## தீர்வுக்கான...

உதயவாழ்வு மற்றும் சரவணபவன் அறக்கட்டளையின் பயிலுநர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் சாதனையாளர்கள் மதிப்புறுத்தலும் வட்டுக்கோட்டையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் திருமதி யசோதை சரவணபவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் மற்றும் இணக்கம் காணப்படாத விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கை மாத்திரமே. இன்னும் முழுமையான தீர்வுத் திட்டம் வரவில்லை. அது விரைவில் வரவிருக்கின்றது.

இந்த ஆண்டு இறுதியில் இலங்கையில் பல மாற்றங்கள் நிகழவுள்ளன. புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளோம். அதனை நாம் தவறவிடக் கூடாது. சில விடயங்களை மாத்திரம் வைத்து ஒட்டுமொத்த தீர்வையும், நன்மைகளையும் எழுந்தமானமாக நாம் நிராகரிக்கக் கூடாது. இடைக்கால அறிக்கை தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம் என்று கூறவில்லை

நாம் இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அந்த இலக்கை அடைவதற்காக நாம் பல ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கின்றோம். அந்த ஆத்மாக்கள் உலாவுகின்ற இந்தத் தேசத்தில் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் தவறவிட முடியாது - என்றார். (வ-5,8)

## தடுப்பிலுள்ளோரை...

வவுனியா, ஒக். 6

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் எந்தவித நிபந்தனையு மின்றி உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா மையப் பேருந்து நிலையம் முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது. வவுனியா மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை ஒழுங்கமைத்துள்ளன.

வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை அவரது இல்லத்தில் நேற்று மாலை 3 மணியளவில் சந்தித்தனர்.

சந்திப்பில் வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கம், சமூக அமைப்புக்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், மகளிர் அமைப்புக்கள், கிராம அமைப்புக்கள் என 20இக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

"வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் ஒரு அவசர சந்திப்பு ஒன்றை இன்று (நேற்று) ஒழுங்கமைத்தன. அநுராதபுரம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் மூவர் கடந்த 11 நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு எதிரான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து அநுராதபும் மேல் நீதிமன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனால் மொழி உள்பட பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் தமக்கு எதிரான வழக்கு விசாரணையை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றிலேயே நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுமே அவர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம் மற்றும் காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா மாவட்டத்தில் பொது அமைப்பு ஒன்றை உருவாக்குவதாக இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறுபட்ட நடைமுறை ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்திய போராட்டங்களை வெறுமனவே ஓர் கட்சி சார்பு இல்லாமல் ஒட்டுமொத்தமான பொது அமைப்புக்களையும் உள்ளடக்கிய அமைப்பு ஒன்றின் ஊடாக முன்னெடுக்கப்படும்" என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (வ)

# இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலைக்கு பளுதூக்கலில் கிடைத்தது வெண்கலப் பதக்கம்



யாழ். ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த துர்க்கா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 75 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த துர்க்கா 83 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். குறித்த பாடசாலை வரலாற்றில் பளு தூக்கலில் கிடைத்த முதலாவது தேசியப் பதக்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)



# பண்டத்தரிப்பு ஜசிந்தாவுக்கு கபடியில் கிடைத்தது வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.
மொறட்டுவ மகா வித்தியலாயத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பளுகம கண்டு மணி மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஜசிந்தா றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி மோதியது. 25:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி தோல்வியடைந்ததை அடுத்து வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.
(ம-23)

## ஆட்டம் இன்று

தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டுஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. தொடரைச்சமநிலையில் முடிப்பதற்கு இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது. (ம)

# யாழ். இந்துவுக்கு பளுதூக்கலில் வெள்ளிப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் 17 வயது ஆண்கள் பிரிவில், யாழ். இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சாருஜன் வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சாருஜன் 94 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் 156 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (ம-422)



## விண்மீன் அபாரம்

யாழ்ப்பாணம், ஒக். 6
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பலாலி விண்மீன் அணி வெற்றிபெற்றது. திக்கம் மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. பலாலி விண்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

# தெல்லிப்பழை யூனியன் வென்றது வெள்ளி



யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சிறிமாவோ பண்டார நாயக்க கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றில் இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தின. 23:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது செற்றை இழந்தது யூனியன். இரண்டாவது செற்றும் 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிறிமாவோ பண்டார நாயக்க கல்லூரியின் வசமாக அந்த அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தை வென்றது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெள்ளிப்பதக்கத்தைத் தனதாக்கியது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**
வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் மதினா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## யாழ். இந்து வென்றது வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் 17 வயது ஆண்கள் பிரிவில், யாழ். இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம். திசாந் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எம். திசாந் 77 கிலோ எடைப்பிரிவில் 145 கிலோ பளுவைத்தூக்கி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)

# டயமன்ஸ் அணி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 6
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வதிரி டயமன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாத நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் டயமன்ஸ் அணியின் பிரேம்குமார் மூன்று கோல்களைப் பதிவு செய்ய 3:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.
(ம-23)

## பாராட்டு விழா

கரணவாய், ஒக். 6
தேசியமட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் வெண் கலப்பதக்கம் பெற்ற தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வீரர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று நடைபெற வுள்ளது.
வித்தியாலய அதிபர் இரா. சிறிநடராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வட மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்வக்குமரன், சிவன் பவுண்டேசன் நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன் மற்றும் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப் பாளர் மா.நவநீதமணி உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

## இளைஞர் கலைமதி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 6
மல்லாகம் சிறிமுருகன் விளை யாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.
சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத் தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் அச்சு வேலி யுத் விளையாட்டுக் கழக மும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதலிரு செற்களையும் முறையே 25:21, 25:19 என்ற புள்ளிகளின் அடிப் படையில் கைப்பற்றிய ஆவரங் கால் இந்து இளைஞர் விளையாட் டுக் கழகம் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக இந்துவின் ஜனன் தெரிவு செய்யப்பட்டார்.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மும் மோதின. இதில் 25:17, 25:23 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னே றியது புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழகம். ஆட்ட நாயகனாக கலைமதியின் வாகீசன் தெரிவு செய்யப்பட்டார்.
(ம-108)



### தேசியமட்ட கபடித் தொடரில்

# இளவாலை ஹென்றிஸ் வென்றது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
மொறட்டு மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிரான் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 27:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது. (ம-422)


## தெல்லிப்பழை யூனியனுக்கு எறிபந்தில் வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 20 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கேகளு வித்தியாலய அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணி 25:17, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
(ம-422)

## அணியிலிருந்து மலிங்க நீக்கம்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான இலங்கை அணியில் இருந்து மலிங்க நீக்கப்பட்டுள்ளார்.
இலங்கை அணி, ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற் றுப் பயணம் மேற்கொண் டுள்ளது. அங்கு இலங்கை. பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வரு கிறது. முதலாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. இந்த நிலையில் இரண்டா வது ஆட்டம் இன்று ஆரம்ப மாகிறது. இந்த ஆட்டம் முடி வடைந்த பிற்பாடு இலங்கை அணி ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தானுடன் விளையாட வுள்ளது. இந்தத் தொடரில் இருந்து மலிங்க நீக்கப்பட் டுள்ளார். இந்தியாவுக்கு எதி ரான தொடரில் மலிங்க மோச மாக பெறுபேற்றை வெளிப்ப டுத்தினார். இதையடுத்தே அவர் அணியில் இருந்து நீக் கப்பட்டுள்ளார். (ம)



### தொடருமா வெற்றி?

பாகிஸ்தானுக்கு எதி ரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்று களமிறங்கு கிறது இலங்கை அணி. இந்த இரண்டு அணிக ளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் இலங்கைஅணிவெற்றி பெற்றது. இன்று ஆரம் பமாகும் ஆட்டத்திலும் இலங்கை வெற்றி பெறுமா என்று எதிர்பார்க் கப்படுகிறது. (ம)

## சிறந்த கபடி வீராங்கனையாக நெல்லியடி மத்தியின் பிரியவர்ணா

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கபடியில் நெல்லி யடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த இ.பிரியவர்ணா சிறந்த கபடி வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடர் மொறட்டுவ மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதில் பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூ ரியை பிரதிநிதித்துவம் செய்த இ.பிரியவர்ணா சிறந்த வீராங்கனை யாகத் தெரிவு செய்யப்பட்டார்.
(ம-422)





# வெண்கலப்பதக்கம் வென்றது மகாஜனா

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 20 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

கொழும்பு சிவிலி கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து, பண்டத்தரிப்பு மகளிர் அணி மோதியது. இரண்டுமே வடக்கு மாகாணப் பாட சாலைகள் என்பதால் வடக்குக்கு வெண்கலப் பதக்க மொன்று கிடைப்பது ஆரம்பத்திலேயே உறுதிப்படுத்தப்பட்டது. ஆட்டதின் 7ஆவது நிமிடத்திலும், 18ஆவது நிமி டத்திலும் மகா ஜனாவின் கோல்களைப் பதிவுசெய்தார் சர்மா. மேலதிக கோல்கள் இல்லாமல் 2:0 என்று மகாஜனவின் ஆதிக் கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய மகாஜனக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெண் கலப் பதக்கத்தைத் தன தாக்கியது. (ம-23)



# தங்கப்பதக்கத்தை வெல்லுமா மன்னார் லூட்சியாக் கல்லூரி?

யாழ்ப்பாணம், ஒக. 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 16 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் சென். லூட்சியாக் கல்லூரி அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றுமா என்பது தொடரில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

சிவிலி கல்லூரி மைதானத்தில் நேற்று இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் சென். லூட்சியாக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென் றிஸ் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மன்னார் சென். லூட்சியாக் கல்லூரி அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் சாந்தன். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். லூட்சியாக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கோக்லி சிறந்த தலைவர்

இந்திய அணியின் சிறந்த தலைவராக கோக்லி உருவெடுப்பார் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார். இலங்கைக்கு எதிரான மூவகைத் தொடரையும் முழுமையாகக் கைப்பற்றியமை,




டெஸ்ட் தரப்படுத்தலில் இந்திய அணியை முதலிடத்துக்குக் கொண்டு சென்றமை, ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றியமை, ஒருநாள் தரப்படுத்தலில் இந்திய அணியை முதலிடத்துக்குக் கொண்டு சென்றமை உள்ளிட்ட விடயங்களில் கோக்லிக்கு பலதரப்புக்களில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்துவரும் நிலையில் கங்குலியும் இவ்வாறு தெரிவித்தார். (ம)

"அன்பொளி கல்வியகம்"
ஆசிரியர் வே.அன்பழகன்
அவர்களின்
தரம் – 05 புலமைப் பரிசில்
பரீட்சை – 2018
வகுப்புக்கள் 08.10.2017
ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.
"2017 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.
- இயக்குநர் -

நீங்களும் ஆசிரியர் ஆகலாம்
Diploma in
Pre - School Teaching
English Medium 06 Months
நீங்களும் சர்வதேச பாடசாலையில் கற்பிக்கும் திறன் வாய்ந்த ஆசிரியராக ஓர் அரிய வாய்ப்பு
Certificate in English Teaching (YL)
6 வயது தொடக்கம் 12 வயது வரையான சிறுவர்களுக்கு கற்பிப்பதற்கான கற்கை நெறி இக்கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்வோர் சுயமாக கல்வி நிறுவனத்தை நடாத்த விரும்பினால் நிபந்தனை அடிப்படையில் ELTC இனது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
ஆரம்பம் : 07.10.2017 காலை 9.00 மணி
06 Months
English Language Teaching College - International
Soft View Computer Education
221, A9 Road, Near Kachcheri, Jaffna. TP. 077 0743131

வட இந்திய காசி யாத்திரை
நாள்கள்: 10
ஆரம்பம்: 19.10.2017
செல்லும் இடங்கள்: டெல்லி, நாராயணசுவாமி கோயில், ஆக்ரா, தாஜ் மஹால், செங்கோட்டை, மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், காசியில் 2நாள் (வாரணாசி), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தாலயங் கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி), திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்) வேறு இடங்களும் காணலாம். அத்துடன் இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், அப்துல்கலாமின் மணிமண்டபமும் காணலாம். ஒரு நாள் சொப்பிங்.
பெற்றுக் கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்
4 விமான பயண டிக்கெட், மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு (மூன்று வேளை), கோப்பி, ரீ, குடிநீர் (மினரல் வோட்டர்) 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி மேலும் கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி.
குறிப்பு : மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் எவ்வித தயக்கமுமின்றி கலந்து கொள்ளலாம். விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.
விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P : 077 768 0102, 077 736 2154

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் பாஸ்கரன்



கிளிநொச்சி, வட்டக்கச்சி, ஆறுமுகம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் பாஸ்கரன் நேற்று (05.10.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அல்லைப்பிட்டி சண்முகநாதன் காலஞ்சென்ற அன்னலட்சுமி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஓவசியர் பாலசிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், இரத்தினகலாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், துஷ்யந்தன், நிஷ்யந்தன், தினேஷன், கிருஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாநிதி, குமரையா (ராசன்), உதயகரன், பிரபாகரன், தயாநிதி, சுதாகரன், விநோதினி ஆகியோரின் அருமைச் சகோதரரும், இரத்தினமாலா, லைலா, நிர்மலா, சசிகலா ஆகியோரின் மைத்துனரும், நிலானி, கௌதினி, டிசா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிஷ், ஹர்ஷினி, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

- அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**887, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி**

**தகவல்: குடும்பத்தினர்.**

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242
நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
விரிவுரையாளர்கள்
த.தவசேகரின் வழிகாட்டலில் துறைசார் வளவாளர்கள்
புதியபிரிவுகள்யாவும்
D.M.I
வெலிங்ரன் சந்தி (லிங்கன் கூல்பார் அருகில்)
திட்டமிடல் சேவை
திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஆரம்பம்
ஞாயிறு (8/10)
காலை: 10.00-2.00
அதிபர் EB
ஞாயிறு (8/10)
பி.ப. 2.00-5.00
SLAS, IQ
ஞாயிறு (8/10)
9.00-12.00
ஏனைய சகல பரீட்சைகளுக்குமான பொது உளச்சார்பு, பொதுஅறிவு பிரத்தியேக வகுப்புகள் நடைபெறவுள்ளன.
தொடர்புகளுக்கு
076 688 3394

TECHNO WORLD
A/L 2017 தொழில்நுட்பப்பிரிவு
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
Spot Exam - 07.10.2017
B1, B2 Exam - 08.10.2017
நேரம் - 9.00 - 2.00
இடம் - பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
0770175346
Note : எதிர்பார்க்கப்படும் வினாக்கள் மாத்திரம் அனைத்து மாணவர்களும் பங்குபெறலாம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.